# காத்திருக்கிறேன் !



சிவசங்கரி

வானதி பதிப்பகம்

வானதி ❀ காத்திருக்கிறேன் ! ❀ சிவசங்கரி

# காத்திருக்கிறேன்!

சிவசங்கரி

வானதி பதிப்பகம்

முதற்பதிப்பு : ஏப்ரல், 1970
இரண்டாம் பதிப்பு : ஜூலை, 1989
மூன்றாம் பதிப்பு : நவம்பர், 2008

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 60–00

* Title : **KAATHIRUKIREN**
* Author : **Sivasankari**
* Subject : Short stories
* Language : Tamil
* Edition : Third Edition, November - 2008
* Pages : x + 166 = 176
* Publication : **Vanathi Pathippakam**
23/13 Deenadayalu Street
Thyagaraya Nagar, Chennai - 600 017
Ph: 24342810 / 24310769
E-Mail: vanathipathippakam@vsnl.net
www. : vanathi.in
* Price : Rs. **60-00**

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை – 600 014.
Printed at : **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 28446166, 28446891

# முன்னுரை

இந்தப் புத்தகத்துக்கு முன்னுரை எழுதுகின்ற எனது பாத்தியதை பற்றிய கேள்விக்குறியுடனேயே இதனை நான் எழுதுகிறேன்.

பாத்தியதை என்றுதான் சொன்னேன்; தகுதி அல்ல.

ஒரு நூலுக்கு முன்னுரை எழுதுகிற பாத்தியதை, யார் யாருக்கு உண்டு என்று நமது மரபு சொல்கிறது. ஆசான், சீடன், நண்பன் ஆகியோருக்கு அந்தப் பாத்தியதை உண்டாம்.

இந்த நூலின் ஆசிரியை திருமதி சிவசங்கரிக்கு இந்த மூன்றில் எதுவுமல்ல நான். இவருடைய பெயரை நான் சமீப காலமாய்ப் பத்திரிகைகளில் பார்க்கிறேன். உண்மையைச் சொல்வதென்றால் இதை எழுதுவதற்கு முன்னால் இவர் எழுத்துக்கள் எதையும் நான் படித்ததில்லை. எனினும் இப்போது இவற்றை நான் படித்து இதற்கு முன்னுரை எழுதுகிறேன்.

இந்தப் புத்தகத்துக்கு முன்னுரை எழுதும்படி வேண்டிக் கொண்ட நண்பர் என்னிடம் சொன்னார்:

"திருமதி சிவசங்கரி உங்கள் ரசிகை. உங்களுக்குப் பெண் ரசிகைகள் ரொம்பக் குறைவு. மேலும் இவர் நன்றாக எழுதுகிறார். தமிழில் நல்ல பெண் எழுத்தாளர்களும் ரொம்பக் குறைவாக இருக்கிறார்கள். எனவே இதற்கு நீங்கள் முன்னுரை எழுதுவது ரொம்பவும் பொருந்தும்."

இதற்கு நான் அவரிடம் விளையாட்டாகச் சொன்ன பதிலையும் அதன்பின்னர் நான் யோசித்ததையுமே இந்தப் புத்தகத்தின் முன்னுரையாக எழுதிவிடலாமென்று நினைக்கிறேன்.

பத்திரிகைகளில் எழுதப்படுகின்ற பெரும்பாலான கதை களுக்கு - அதாவது நண்பர் மணியன் எழுதுகிறாரே, அதுமாதிரி யான தொடர்கதைகளுக்கு - உள்ள வாசகர்களின் அளவு ஆண் வாசகர்களும் சரி, பெண் வாசகர்களும் சரி - பத்திரி கையைத் தாண்டியும் நிலைக்க வேண்டும் என்ற நினைவில் எழுதப்படும் எழுத்துக்கு இல்லை என்று நான் ஒப்புக் கொள்கிறேன்.

ரசிகர்களிலும் சரி, படைப்பவர்களிலும் சரி, ஆண் ரசனை, பெண் ரசனை என்றோ - ஆண்படைப்பு, பெண்படைப்பு என்றோ இல்லை என்று நான் கருதுகிறேன்; இருக்கக் கூடாதென்றும் நான் விரும்புகிறேன்.

நம்முடைய பெண்கள், அவர்கள் எந்தத் துறையிலிருந் தாலும் அங்கே வந்து நின்றுகொண்டு, 'பெண் மக்களாகிய நாங்கள்' என்று பேசும்போதெல்லாம் எனக்கு வருத்தமே ஏற்படுகிறது! இப்படிப் பேச அல்லது எழுத வந்துவிட்ட பெண்கள் - அப்படி இவர்கள் வந்துவிட்டதனாலேயே இவர்கள் பொதுவான நமது பெண் சமுதாயத்திலிருந்து விலகி வந்து விட்டவர்கள் என்று இவர்களுக்குப் புரிவதே இல்லை.

ஒரு பக்கம் சமத்துவமும் இன்னொரு பக்கம் பிரதிநிதித் துவமும் கோருகின்ற இந்த முரண்பாட்டினை ஆண் - பெண் பிரிவுகளில் மட்டுமில்லாமல் நான் பல பிரிவுகளிலும் காண் கிறேன். பிரதிநிதித்துவ வேட்கையும் பிரிவினை நலன்களும் இருக்கிற வரைக்கும் சமத்துவம் என்பது ஒரு பாவனையே.

உதாரணத்தோடு விளக்குகிறேன். சமுதாயத்தில் நிலவுகின்ற பிற்பட்டவர்களின் பிரச்னை என்று ஒன்று இருக்கிறது. பிற்பட்ட வர்களைப்பற்றிக் கொஞ்சம் குறைவான எண்ணம் நமக்கு இருப்பதை அவர்களால் சகிக்க முடிவதில்லை. இது நியாயமே. ஆனால் அந்தப் பிற்பட்ட பகுதியினர் இருக்கிறார்களே, அவர்



களுக்கு எப்போதும் அந்த எண்ணமே இருக்கிறது. இது நியாயமில்லை என்று அவர்களுக்குத் தோன்றுவதே இல்லை.

நம் இனத்தவர்களெல்லாம் ஒன்றுபட வேண்டும் என்று அவர்கள் அடிக்கடிக் கூறுவதை நாம் கேட்கிறோம். தங்களுடைய சலுகைகளுக்காக அவர்கள் முனைந்து நிற்பதையும் நாம் நியாயபூர்வமாகப் பார்க்கிறோம். தங்களது பூர்வபெயரை அவமானமாகக் கருதி ஒரு புதுப் பெயர் சூட்டிக்கொள்வதிலே அவர்கள் சமாதானமடைவதை நான் மிகவும் பரிதாபத்தோடு யோசிக்கிறேன். இந்த நிலைமை நீடிக்கிற வரைக்கும் சமத்துவமென்பது சாத்தியமில்லை. அவர்கள் வேண்டுவ தெல்லாம் சில சலுகைகளும் மரியாதைகளுமே.

பெண்கள் பிரச்னையும் ஏறத்தாழ இதுமாதிரிதான் இருக்கிறது. இது இலக்கிய உலகத்திலாவது சரி இல்லை என்ற நிலைமை உருவாக வேண்டும். எனவே, சிவசங்கரி என்பவர் ஒரு பெண் என்பதை மறந்து அவர் ஓர் எழுத்தாளர், இலக்கியம் படைப்பவர் என்ற நினைவோடு இவற்றை நான் படிக்கிறேன். இப்படி மற்றவர்களும் படிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவ்விதமே திருமதி சிவசங்கரியும் இலக்கியம் படைக்கிறார்கள் என்று நம்புகிறேன்; படைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

இதிலுள்ள இரண்டு கதைகள் ஆனந்தவிகடனில் மாதத் தொடர்கதைகளாக வெளிவந்தவை. ஒன்றாகச் சேர்த்து முன்னுரை எழுதுவதற்காகவே இப்போது படித்துப் பார்த்தேன்.

இன்னொன்று நான் சொல்ல வேண்டும். ஆண்கள் எழுதுகிற எழுத்துக்களிலேயே பலருடைய எழுத்துக்கள் மிகவும் பெண்மைத்தன்மை கொண்டதாக இருக்கும். அதேமாதிரி சில பெண்களுடைய எழுத்துக்களிலும் ஆண்மை மிகுந் திருக்கும். சிலருடைய எழுத்துக்கள் இரண்டும்கெட்டானா

யிருக்கும். சில எழுத்துக்கள் ஒரு மிருக அழகு கொண்டிருக்கும். பூமியைப் புழுதி கிளம்ப உதைத்துக்கொண்டு நிற்கும் ஒரு காளை மாதிரி இருக்கும். சிலர் எழுத்து வெறும் கோலமாக இருக்கும். எனவே, எழுதியதை வைத்து ஆணா பெண்ணா என்று கண்டுபிடிப்பது சிரமம். ஆனால் சிவசங்கரியின் எழுத்துக் களில் பெண்மை மிகுந்தே இருக்கிறது.

இவருடைய கதைகள் 'ரொமாண்டிக்'காகவே இருக்கின்றன. கவிதையும் மதுவும் காதலும் பெண்ணும் எல்லாமே ஒரு கனவு மாதிரி இவரால் வர்ணிக்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் தொடவே கூடாது என்கின்ற விதிக்கு இவர் விலக்கு என்னும் இதிலே விரசம் வந்துவிடக்கூடாது என்ற அதிஜாக்கிரதை உணர்ச்சி அவற்றை ரொமாண்டிஸிஸப் படுத்த வைக்கிறது என்று எனக்குப் புரிகிறது.

கதை என்பதே எழுதுகிறவரின் கண்ணோட்டம்தான். அதைப் புரிந்துகொண்டுவிட்டால் உங்கள் எழுத்தாளனை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். அதிலே முரண்பட்டவர்கள் ஒருவனின் ஒவ்வொரு கதையையும் படித்து அவனோடு முரண்டிக்கொண்டு நிற்க வேண்டாம்.

சிவசங்கரி சமீப காலத்தில்தான் எழுத ஆரம்பித்திருக்கிறார் என்று நினைக்கிறேன் - இளம் எழுத்தாளர் என்ற வார்த்தை எனக்குப் பிடிக்காது - எழுத ஆரம்பித்து எவ்வளவோ காலத்துக்குப் பிறகுதான் பலருக்குச் சரியான கண்ணோட்டம் பிடிபடுகிறது. ஆனால் அப்படிப் பிடிபடப்போகிற கண்ணோட் டத்தினுடைய கரு அவருடைய ஆரம்ப கால எழுத்துக்களிலேயே ஒளிந்துகொண்டிருந்ததை இப்போது திரும்பிப் போய் ஆராய்ந்து பார்த்தால், ஓர் ஆராய்ச்சிக்கு இடமேயில்லாமல், 'நான் இதோ, இதோ' என்று அவை மேலெழுந்து நிற்கின்றன.



திருமதி சிவசங்கரியின் எதிர்காலப் படைப்புகள் எப்படிப் பட்டவையாக இருக்கும் என்று இந்த ஆரம்பகாலப் படைப்பு களை வைத்து என்னால் பார்க்க முடிகிறது. இவருடைய கண்ணோட்டம் எப்படி உருவாகுமென்றுகூட என்னால் சொல்ல முடியும்.

என்ன என்று கேட்கிறீர்களா? நான் ஜோசியம் சொல்ல மாட்டேன். நீங்கள் இவற்றைப் படித்துப் பாருங்கள். உங்க ளுக்கே புரியும். புரியாவிட்டால் பொறுத்திருந்து பாருங்கள். என்ன அவசரம்?

இப்போது உங்களுக்குச் சில நல்ல கதைகள் கிடைத் திருக்கின்றன.

திருமதி சிவசங்கரி இவற்றில் அல்லது இவற்றோடு திருப்தியடைந்துவிட மாட்டார் என்று எனக்குத் தெரியும். தன்னிடமிருந்து மிக அதிகமாகத் தானே எதிர்பார்ப் பவர்களுக்குத் திருப்தி அவ்வளவு எளிதில் வந்துவிடாது. அந்த அதிருப்தி வளர வேண்டும். அதுதான் ஆக்கங்களுக் கெல்லாம் வித்து.

என்னை முன்னுரை கேட்டதால் என் மனசில் பட்டதை யெல்லாம் சொல்லியிருக்கிறேன்.

சிவசங்கரியிடமிருந்து இன்னும் நான் அதிகம் எதிர் பார்க்கிறேன். இந்தக் கதைகளே என்னை அவ்விதம் எதிர் பார்க்க வைக்கின்றன.

ஜெயகாந்தன்

சென்னை
8-4-1970

## என்னுரை

நான் இன்று இருக்கும் சந்தோஷமான நிலைக்கு மூலகாரணமான என் பெற்றோருக்கும்;

திருமணமான நாள்தொட்டு எனக்கு எந்த சந்தர்ப்பத்திலும் பக்கபலமாக நின்றுவரும் என் கணவருக்கும்;

"உன்னால் கண்டிப்பாக எழுதமுடியும்; முயற்சி செய்!" என்று ஆணித்தரமாகக் கூறி என்னை எழுத்துலகில் அடியெடுத்து வைக்கக் கை கொடுத்த என் சிறந்த நண்பருக்கும்;

தக்க சமயத்தில் தேவையான ஊக்கத்தைக் கொடுத்து என்னை மேன்மேலும் எழுதத் தூண்டிய 'ஆனந்தவிகடன்' ஆசிரியர் குழுவினருக்கும்;

நான், 'என் மனதின் திருப்திக்காக...' என்று எழுதியதைப் பெரியதாக எடுத்துக்கொண்டு, அதை ஒரு புத்தக வடிவில் வெளியிட முன்வந்த 'வானதி' பதிப்பகத்தாருக்கும்;

முன்னுரை வழங்கிய மதிப்பிற்குரிய திரு. ஜெயகாந்தன் அவர்களுக்கும்;

என் குடும்பத்தாருக்கும்;

முக்கியமாக, என் வாசகர்களுக்கும்—

என் நன்றி கலந்த வணக்கங்கள்.

சிவசங்கரி

சென்னை-15
10-4-1970

# காத்திருக்கிறேன்!

## 1

அன்றலர்ந்த, பனி தங்கிய மென்மையான மலர்; சாம்பிராணியினூடே எழும் மெல்லிய வாசமிகு புகை; காற்றில் துள்ளி விரைந்தோடும் வெள்ளை மேகம் - இவையனைத்தையும் ஒருங்கே நம் நினைவுக்குக் கொணர்பவள்தான் சீதா.

சீதா... அவள் பெயரைச் சொல்லச்சொல்ல, நம் நாவெல்லாம் இனிக்கும். சீதாவுக்கு மறுபெயர்கள் - மென்மை; இனிமை - இவைதாம்.

சென்னைப் பெரும் பணக்காரர்களில் ஒருவராகத் திகழ்ந்த அட்வகேட் ராமச்சந்திரய்யரின் ஒரே புதல்வியாக இருந்தபோதிலும் அவள் அதிர்ந்து பேசியோ, அல்லது உரக்கச் சிரித்தோ இன்றுவரை ஒருவருமே கேட்டது கிடையாது. இந்த அடக்கத்தை அறிந்துதான் பெரியவர்கள் அவளுக்கு 'சீதா' என்று பெயரிட்டார்களோ? மென்மையானவள் என்பதைக் கொண்டு சீதாவின் உருவ அமைப்பைத் தவறாக எண்ண வேண்டாம். சீதாவின் உயரம் ஐந்து அடி ஐந்து அங்குலம். அதற்கு ஏற்ற பருமன்; 'பூசினாற்போல' என்று சொல்லுவார்கள் பாருங்கள், அப்படித்தான். சந்தனக்கட்டை போல் இருப்பாள் என்றோ, தந்தக் கை, கால்கள் என்றோ நான் சொல்லத் தயாராக இல்லை. மாநிறம் - என்றாலும் கண்கள், புருவம், நாசி, உதடுகள், கன்னக் கதுப்புகள்,

கை, கால், விரல்கள் ஒவ்வொன்றும் செதுக்கிவிட்டாற் போல இருக்கும். ஓர் அழகான சிலைபோல - இவை அனைத்துடன் அவளுக்கே இயல்பான நளினமும் இருக்கவே, சீதா எல்லோரிலும் தனிப்பட்டு விளங்கினாள்.

ஆசாரக் குடும்பத்தில் வளர்ந்த சீதாவை பதினாறாம் வயதிலேயே திருமணம் என்ற பந்தத்தில் புகுத்தினார்கள், அவள் பெற்றோர். ஒரே பெண்ணல்லவா? பெண்ணை மணக்கோலத்தில் பார்க்கவேண்டும் என்ற துடிப்பு அவர்களுக்கு.

அப்பொழுது சீதா கல்லூரியில் பியூஸியை முடித்திருந்தாள். திருமணமான ஏழாம் நாள் - இன்னும் 'புகுந்த வீட்டில்' கிருஹப்பிரவேசம்கூட ஆகவில்லை- அவள் கணவன் நண்பர்களுடன் சமுத்திரத்தில் குளிக்கப் போனவன் 'போயே' விட்டான். அத்துடன் முடிந்தது சீதாவின் மணவாழ்க்கை.

ஒன்றுமே நடக்காதது போல் அவளும் கல்லூரியில் மேலே படித்தாள்; ஆனால், அவளுடைய 'வெறுமை'க் கோலத்தைக் காணச் சகியாத அவள் பெற்றோர், மறு ஆண்டுக்குள் ஒருவர் பின் ஒருவராக மாண்டு போனார்கள்.

பணத்திற்குத்தான் பஞ்சமில்லையே!

கல்லூரியில் பி.எஸ்ஸி. படிப்பை முடித்த சீதா, இப்பொழுது ஒரு வருடமாக சென்னை நகரத்திற்குச் சற்று ஒதுக்குப்புறமான இடத்தில் தன் அத்தையுடன் அமைதியாக வாழ்க்கையை நடத்த முயல்கிறாள்.

ராணுவத்திலே இருபத்தைந்து வருடங்களாகப் பழகிப்பழகி படிந்துவிட்ட பழக்கவழக்கங்கள் - படைக்குக் கட்டளை இட்டுஇட்டுக் கட்டையாகிப்



போன குரல்; சற்றே உலர்ந்த சிரிப்பு; முறுக்கிவிடப்பட்ட மீசை; வயது நாற்பத்தொன்பதைக் காட்ட ஆசைப்படும் சில நரைமுடிகள்; பயிற்சியினால் உரமேறிய உடற்கட்டு; கூர்மையான கண்கள் - இவையனைத்துக்கும் ஓர் உருவம் கொடுத்தால் அதுதான் லெஃப்டினெண்ட் கர்னல் ராஜசேகரன்.

கொடைக்கானல் உருளைக்கிழங்கு மொத்த வியாபாரியின் மகனான ராஜசேகரன், சிறுவயதிலேயே ராணுவத்தில் சேர்ந்து படிப்படியாக 'லெஃப்டினெண்ட் கர்னலா'க உயர்ந்தவர். அவரைப்பற்றி ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், 'நல்ல இதயம் படைத்த அறிவாளி' என்று கூறலாம். பலரிடம் இருக்கும் சில 'பலவீனங்கள்' இவரிடமும் இருக்கலாம். ஆயினும் அவை இவருடைய உண்மையான மனத்திற்கெதிரே மாயமாய் மறைந்துவிடுகின்றன.

பாகிஸ்தான் யுத்தத்தின்போது திறமையாகத் தன் படைகளை நடத்திச் சென்று வெகுவாக எல்லோராலும் பாராட்டப் பெற்றவர். அச்சமயம், நேரடி குண்டுவீச்சு ஒன்றில் சிக்குண்டு உடல் நலத்தை இழந்து, டாக்டர்களால் 'இவர் இதயம் பலவீனமடைந்துள்ளது; இவர் ஓரளவு அமைதியான வாழ்க்கையை நடத்துவது நலம்' என்று முத்திரை இடப்பட்டுவிடவே, வலியச் சென்று ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டு தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிறார்.

சென்னையிலிருந்துகொண்டு, வியாபாரத்தைக் கவனிக்க எண்ணும் நம் கர்னல் (அப்படித்தான் இனி அவரை அழைக்கப்போகிறோம்) சீதாவின் வீட்டிற்கு

எதிராக அமைந்திருக்கும் தன் சொந்த பங்களாவில் குடியேறுகிறார்...

மொட்டு மலராகும் முன்பே பறிக்கப்பட்டுவிட்ட அக்கிரமத்தைக் காணச் சகியாமல், ஒருவர்பின் ஒருவராக தமையனும் மன்னியும் சென்றுவிட்ட பின்பு, 'தன் உலகமே சீதாதான்' என்ற உறுதியோடு கடந்த ஐந்து ஆண்டு காலமாக சீதாவைக் கண்ணின் மணியாய்க் காத்துவருபவள் - சீதாவின் அத்தை. மழித்த தலை, வெள்ளைப் புடவை, உருத்திராட்ச மாலை, பட்டை பட்டையாக நெற்றியில் விபூதி, இத்யாதி. இப்படிக் காட்சியளித்தாலும் மிகப் பரந்த நோக்கமும் உள்ளமும் கொண்டவள்.

இவர்கள்தான் - இந்தக் கதையை முழுக்க முழுக்க ஆக்கிரமித்துக்கொள்ளப்போகும் மூன்று கதாபாத்திரங்கள். நடுநடுவில் மற்றும் சிலர் வரலாம். ஆனால், அவர்களெல்லாம் நம் நினைவில் தங்கவேண்டியவர்கள் அல்ல. அதனால் அவர்களை விட்டுத்தள்ளுவோம்.

இனி கதையைப் படிக்க ஆரம்பியுங்கள்...

ஒரு பக்கமாக ஒருக்களித்துக்கொண்டு படுத்திருந்த சீதாவிற்கு உறக்கம் வரவில்லை. திறந்திருந்த ஜன்னல் வழியாக அறைக்குள் நுழைந்த நிலாவின் கதிர்கள் அவள் முகத்தில் விழுந்து, அந்த இருட்டிலும் அவளுடைய கண்களைப் 'பளபள'வென்று மின்னச் செய்தன.

நான்கு நாளைக்கு முன்னால் லாரிலாரியாக எதிர் பங்களாவுக்குச் சாமான்கள் வந்ததை அவளும் பார்த்தாள். நேற்று பேச்சுவாக்கில் அவர்களுடைய தோட்டக்



காரன் அத்தையிடம், "பெரியம்மா, எதிர்வீட்டிலே இன்னிக்கு ஏதோ சாமானை நகர்த்தணும்னு உதவிக்குக் கூப்பிட்டாங்க; போயிருந்தேன். ராணுவத்திலே ஏதோ பெரிய அதிகாரியாக இருந்தவராம். அம்மாடி! எத்தனை புஸ்தகங்க, அலமாரி அலமாரியா! ரொம்பப் படிச்ச பெரியவரு போலிருக்கு..." என்று சொல்லிக்கொண்டிருந்ததையும் அவள் கேட்டாள்.

இன்று அத்தை அவளிடம் வந்து, "என்னம்மா சீதா, எதிர்வீட்டுப் பெரியவர் கூட ஒருத்தருமே அந்த வீட்டில் இல்லையாமே! பாவம்! ஏதாவது உதவி வேணுமான்னு நீ போய் மரியாதைக்காகவாவது கேட்டுண்டு வரயா?" என்றபொழுது, சீதாவுக்குப் போகவேண்டும் என்ற ஆசையுடன், 'எப்படி முன்பின் தெரியாதவருடன் போய்ப் பேசுவது' என்று தயக்கமாகவும் இருந்தது. ஆனால் தோட்டக்காரன் சொன்ன 'அலமாரி நிறையப் புத்தகங்கள்' அவள் கண்ணெதிரே வந்து 'வா... வா...' என்று அழைக்கவும், அன்று மாலை எதிர் பங்களாவுக்குச் சென்றாள்.

ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் கட்டிய வீடாக இருக்குமோ என்னவோ! பெரிய சுவருடன் இணைக்கப்பட்ட இரு பிரும்மாண்டமான கேட்டுகள்; அங்கிருந்து பார்த்தால், தூரத்தே கம்பீரமாகத் தெரியும் பங்களா... நடுநடுவே இருந்த மரங்களினிடையே மறைந்தும் மறையாமலும் தெரிந்தது.

மெல்லத் தயங்கித்தயங்கி உள்ளே நுழைந்தவளைக் காற்றிலே மிதந்து வந்த இனிமையான பியானோவின் ஒலிதான் வரவேற்றது.

பரந்துகிடந்த வராந்தாவில் ஏறி, வரவேற்பறையில் நுழைந்த சீதாவுக்கு, பெரியதான அந்த அறையின் அலங்காரமே தனித்தன்மை வாய்ந்ததாகத் தோன்றியது. எதிலுமே ஒரு கம்பீரம் கலந்திருப்பது அவளுக்குப் புரிந்தது. சுவரில் மாட்டப்பட்டிருக்கும் பலவகைத் துப்பாக்கிகள்; தரையில் விரிக்கப்பட்டிருக்கும் புலித் தோல்; சௌகரியமாக அமருவதற்கென இருந்த சோபாக்கள் - ஏன், ஒருபக்கமாக இருந்த பியானோவுக்கு எதிரில் அமர்ந்து, சீதாவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்த கர்னல்– எல்லாவற்றிலுமே ஒரு கம்பீரம் இருந்ததை அவள் உணர்ந்தாள்.

இப்பொழுது, இரவு உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கும் சீதாவுக்கு லேசாகச் சிரிப்பு வந்தது.

கர்னல் எழுந்து அவள் அருகில் வந்து நின்றதும், அவருடைய ஆஜானுபாகுவான தோற்றத்தின் முன் சுண்டெலி போல் தான் நின்றதை நினைத்ததும்...

"என் பெயர் சீதா. நான் உங்கள் எதிர்வீட்டில் இருக்கிறேன். 'ஏதாவது உதவி வேண்டுமா?' என்று என் அத்தை கேட்டுக்கொண்டு வரச் சொன்னாள்" என்று நிதானமாக, மெதுவாக சீதா கேட்டதும், பதிலே சொல்லாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார் கர்னல். பிறகு ஒரு பக்கமாக உதட்டைக் கோணிக் கொண்டு சிரித்தவாறே, "மைகாட்–மைகாட்! இவ்வளவு மென்மையாகக்கூட ஒரு பெண்ணால் பேச முடியுமா?" என்று அவளைக் கேட்டார்.

அவர் சிரித்த விதம், பேசிய தோரணை எல்லாமே சீதாவுக்கு நிரம்பப் பிடித்திருந்தன.



—இப்படித்தான் ஆரம்பித்தது அவர்களுடைய முதல் சம்பாஷணை. ஆனால், பேசிய அரை மணிக்குள் இருவரும் மற்றவரிடம் சகஜமாகப் பேச முற்பட்டு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். கர்னலுக்கு வேண்டுமானால் இது கைவந்த கலையாக இருக்கலாம். ஆனால், சீதாவுக்குப் புதிதுதானே!

'இது என்ன புது உறவு? ஏன் இப்படி இவரிடம் பழக ஆசை உண்டாகிறது? அவருடைய வயதினாலா? இல்லை, அறிவினாலா?' - யோசித்துக்கொண்டே இருந்த சீதா, எப்பொழுது உறங்கிப்போனாள் என்பது அவளுக்கே தெரியாது.

மறுநாள் விடியற்காலை அத்தையுடன் தோட்டத்தில் பூப்பறித்துக்கொண்டிருந்தவள், "குட்மார்னிங் சீதா" என்று அதிகாரமாக யாரோ பழகியவர்போல அழைத்ததைக் கேட்டுத் திரும்பினாள். கர்னல்தான். காலை 'வாக்கிங்' போகும் பழக்கம் உண்டு போலிருக்கிறது. கையில் ஒரு சின்னக் கைத்தடி, அதே கோணல் புன்னகை, அதே கம்பீரம்.

அத்தை பக்கம் திரும்பி, "இவர்தான் அத்தை–" என்று சீதா ஆரம்பிக்கும் முன், "வணக்கம் பெரியம்மா– நான் உங்கள் எதிர் வீட்டுக்காரன்..." என்று தன்னைத் தானே அறிமுகம் செய்துகொண்டார் கர்னல்.

"உள்ளே வந்து காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாமே..." என்று அத்தை அழைத்தாள்.

"இல்லை பெரியம்மா, நான் குளிக்காமல் எதையுமே சாப்பிடுவதில்லை. பிறகு வருகிறேனே..." என்று பதில்

கூறியவாறே நகர்ந்த கர்னல், ஏதோ ஞாபகம் வந்தவர் போல இரண்டடி சென்று திரும்பி, "புத்தகங்களைப் பார்க்கவேண்டும் என்று சொன்னீர்களே, சீதா, இன்று பிற்பகல் வாருங்கள், நான் காத்துக்கொண்டிருப்பேன்" என்று சொல்லிவிட்டு, அவள் பதிலைக்கூட எதிர் பார்க்காமல் 'மடமட'வென்று சென்றுவிட்டார்.

அன்று பிற்பகல் சீதா அவர் சொன்னபடி அங்கு சென்றாள்.

சீதா - கர்னலின் நட்பு இந்த மாதிரி அழகாக ஆரம்பித்தது. ஆண்வாடையே இல்லாமல் வளர்ந்திருந்த சீதாவுக்கு, அவருடைய அறிவு, பேச்சு, பழக்கங்கள் எல்லாமே புதிதாக இருந்தன. பல பெண்கள் வாடை பட்டுப் பழகியிருந்த கர்னலுக்கோ, பெண்மையே உருவான சீதா, மிகமிகப் புதிதாக இருந்தாள்.

கர்னலுடைய அறிவுக்கு-படித்துப்படித்துச் சேர்த்தது மட்டுமல்லாமல், அனுபவப்பட்டு வேறு வளர்ந்திருந்த அறிவுக்கு - பிறவியிலேயே இருந்த சீதாவின் புத்தி சாலித்தனம் சரியான இணையாக இருந்தது.

அன்று தீபாவளிப் பண்டிகை. கர்னலைத் தங்கள் வீட்டிற்கு மதிய உணவிற்கு அழைத்திருந்தார்கள். அத்தையும் சீதாவும் சாப்பிட்டுக்கொண்டேயிருந்த கர்னல் என்ன நினைத்துக்கொண்டாரோ தெரிய வில்லை, மெதுவாகச் சொன்னார்: "பெரியம்மா, நான் உண்மையாகச் சொல்கிறேன். ராணுவத்தை விடுவதற்கு முன்னால் நான் கனவிலும் நினைக்கவில்லை, எனக்கு இப்படி சிறந்த நண்பர்கள் ஏற்படுவார்கள் என்று நான்



இங்கு குடியேறி ஒரு மாதம்கூட ஆகவில்லை; அதற்குள் நம்மிடையில் உண்டாகியிருக்கும் இந்த 'பந்தத்தைப் பார்த்தீர்களா?" - பேசிக்கொண்டே போன கர்னலின் குரல் சற்றே கம்மியது. அவர் தொடர்ந்தார்: "சீதாவை ஒருநாளைக்குப் பார்க்கவில்லையென்றால் எனக்குப் பொழுது கழிந்த மாதிரியே தோன்றமாட்டேன் என்கிறது. நான் ஒருவருமே இல்லாத அநாதை என்று நினைத்திருந் தேன். ஆனால்... ஆனால் நீங்களும், முக்கியமாக சீதாவும் அந்தக் குறையை நிவர்த்தி செய்துவிட்டீர்கள்..." என்று சொன்னபோது சீதாவுக்குப் புரிந்தது; அவர் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறார் என்று.

மௌனமாக அமர்ந்துகொண்டு மெல்லத் தலையை ஆட்டினாள் சீதா, கர்னல் சொல்லுவதைத் தான் மனப் பூர்வமாக ஆமோதிப்பது போல.

அவளுக்கும் 'ஏன் இந்த உறவு?' என்று நிச்சயமாகப் புரியவில்லைதான்.

கர்னலுக்கு வயது நாற்பத்தொன்பது; சீதாவுக்கோ இருபத்தொன்று. அவர் இவளில் தன் மகளைக் காண் கிறாரா? தன் மனைவியையா? அல்லது ஒரு சிநேகிதி யையா? அதேபோல் சீதாவும் கர்னலில் யாரைக் காண் கிறாள்? இது அவர்களுக்கே தெரியவில்லை, புரிய வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒருநாள் கர்னலின் வீட்டிற்குப் போன சீதா, அங்கு புதிதாக ஓர் ஓவியம் இருப்பதைப் பார்த்தாள். அதை ஊன்றிக் கவனித்துவிட்டுக் கர்னலிடம், "இது ராஜா ரவிவர்மாவின் ஓவியம்தானே!" என்று தயங்கிக் கொண்டே கேட்டதும், அவருக்குப் பெருமை தாங்க

வில்லை. "ஓ, சீதா! எப்படிக் கண்டுபிடித்தாய்? இதை எல்லோரும் ராஜா ரவிவர்மாவினுடையது என்றே நினைக்கிறார்கள். நீ மட்டும்... நீ மட்டும்..." - அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"என்ன கர்னல், இதைப் போய் பெரிதுசெய்கிறீர்களே? ராஜா ரவிவர்மா, ராஜா ராஜவர்மா இருவரைப் பற்றியும், அவர்களுடைய ஓவியங்களைப் பற்றியும் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன! அரச வம்சத்தில் தோன்றிய இந்தச் சகோதரர்கள் புகழ் எனக்கு மட்டும் என்ன, எல்லோருக்கும் தெரியுமே...!" என்று அவள் பதிலுக்குச் சிரித்துக்கொண்டே சொன்ன விதம், கர்னலுக்கு அவள்பால் இருந்த மதிப்பை மிகைப் படுத்தியது.

அவர் வாழ்க்கையில் சந்தித்த எத்தனையோ பெண்கள், நாகரிகமான பெண்கள், வெளிப்பூச்சு மாத்திரம் பளபளக்க வைத்துக்கொண்டு, உள்ளே ஒன்றுமே இல்லாமல், வெறும் போலியாக - போலியே உருவாக - இருந்ததை அவர் பார்த்திருக்கிறார். ஆனால் இந்தப் பெண் சீதா - கூண்டுக்குள் இருக்கும் பறவையாக இருந்தபோதிலும் புத்தகங்கள் மூலமும், பத்திரிகைகள் மூலமும் தன் அறிவை மிகப்பெரிய அளவில் வளர்த்துக் கொண்டு - செயற்கையின் நிழல்கூட விழாமல் ஒவ் வொரு விநாடியும் உண்மையான ஒரு பெண்ணாக வாழ்ந்துவருவதை எண்ணி, பலசமயம் வியந்திருக்கிறார்.

அதேபோல கர்னலின் சிந்தனை, பேசும் திறன், சிறந்த பண்புகள் - ஏன், தமிழ் மொழி மேல் அவர் வைத்திருந்த பற்று - எல்லாமே சீதாவுக்கு அதிசயமாக இருந்தது.



அதுவும் அவர் தமிழ்க் கவிஞராமே!

ஓ! ஓ!

"இந்த மனிதர் சாமான்யமானவர் இல்லை, அத்தை இவருக்குத் தெரியாத விஷயமே இல்லை..." என்று அடிக்கடி தன் அத்தையிடம் இரவு நேரங்களில் மெல்லக் கூறுவாள்.

உலக விஷயங்கள், புத்தகங்கள், கவிதை என்று வளர்ந்த அவர்கள் நட்பு, நாட்கள் செல்லச்செல்ல உருகி, இறுகி, இணைந்ததை அவர்கள் இருவருமே நன்கு உணர்ந்தார்கள்.

## 2

**த**ன் ராணுவ அனுபவங்களைப்பற்றிக் கர்னல் கூறும்போது, சிறு குழந்தையின் ஆர்வத்துடன் கண்களை அகல விரித்துக்கொண்டு சீதா கேட்பாள். அதேபோல சீதாவின் இளம் வயதுத் திருமணம், அவளுடைய பெற்றோரின் குணங்கள் முதலியவற்றை சீதா மெதுவாக விவரிக்கும்போது, ஆடாமல் அசையாமல் அமர்ந்து கொண்டு பரிவோடு கர்னல் கேட்பார்.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! ஆரம்பம் முதற் கொண்டே மாலை நேரங்களில் அவர்கள் சந்திக்கும் போது, கர்னல் மது அருந்திக்கொண்டேதான் பேசுவார். ஒன்று அல்லது இரண்டு 'பெக்'தான் அருந்துவார். அளவு மீறியதே இல்லை. இது தவறான செய்கையாகவோ, இல்லை, பாவமானதாகவோ சீதாவுக்குத் தோன்றவே

இல்லை. அவனுக்கெதிரில் குடிக்கும் முதல் மனிதர் அவர்தான் என்றாலும், கர்னல் செய்யும் எதிலுமே சீதாவுக்கு விகல்பம் தோன்றியதில்லை.

மது அருந்திக்கொண்டே கர்னல் பல கதைகளை - தன் வாழ்க்கையின் பல அத்தியாயங்களைச் சொல்லுவார்.

"இந்த மதுப்பழக்கம் எப்படி நம்மை அறியாமலேயே நம்முள் புகுந்துவிடுகிறது என்பது ஒரு பெரிய புதிர், சீதா. 'இது எப்படி இருக்கும்' என்ற துடிப்பிலோ, அல்லது 'நான்கு பேர்களுடன் பழக சௌகரியமாக இருக்குமே' என்ற ஆர்வத்திலோதான் மனிதர்கள் இதை ருசிக்கிறார்கள். ஆனால், அந்தப் பழக்கமே விசுவரூபம் எடுத்து தங்களை மூழ்கடிக்கும் அளவிற்கு எப்படியோ சென்றுவிடுகிறார்கள். நீ என்னை தினமும் பார்க்கிறாயே, சீதா - நான் அளவு மீறிக் குடிப்பவன் என்று நினைக்க மாட்டாய் அல்லவா? தவறு சீதா, தவறு. நானும் எத்தனையோ நாட்கள், அளவுமீறிக் குடித்துவிட்டு- ஓ! என்னவெல்லாமோ செய்திருக்கிறேன், சீதா..."

இப்படித்தான் - ஒரு பாதிரியாரிடம் மன்னிப்புக் கோரும் மனிதன் குற்றங்களையும், செய்கைகளையும் எப்படி வெட்கமில்லாமல், ஒளிவுமறைவில்லாமல் கூறுவானோ - அதைப்போலவே கர்னலும் நாளாக, ஆக சீதாவிடம் அனைத்தையுமே சொல்ல முற்பட்டார்.

சீதாவிடம் தன்னைப் பேசவைக்கும் ஒரு காந்த சக்தி இருக்கிறது என்பதைக் காட்டிலும் - அவளுடைய பரந்த மனம்- சிந்தனைகள் - தான் சொல்வதை அவள்



சரியாகப் புரிந்துகொள்ள வைக்கும் என்ற எண்ணமே கர்னலுக்குத் தோன்றி அப்படிப் பேச வைத்தது.

அவருடன் 'சிநேகம்' வைத்திருந்த சில - (ஆமாம், 'பல' அல்ல, 'சில'தான்) பெண்களின் குணாதிசயங்களைச் சிரித்துக்கொண்டே கூறுவார். தான் எப்படி ஒருவரிடமும் இணைந்துவிடாமல் தாமரை இலைத் தண்ணீராக இருந்தேன் என்றும் சொல்லுவார் - அதில் அவருக்கு ஓரளவுக்குப் பெருமை இருந்ததாக சீதாவுக்குப் புரியும்.

"ஆண் பெண் உறவு ரொம்ப அழகானது, சிறந்தது, அருமையானது - அதைப் புரிந்துகொண்டு யார் வாழ்கிறார்கள், சீதா?" என்பார் ஒருநாள்.

"ஆணைத் தன் அழகால் பெண் அடிமையாக்க நினைத்தால், அது முழு முட்டாள்தனம்" - என்பார் மற்றொரு நாள்.

ஒன்றுக்கும் பதில் சொல்லாமல் அமைதியாக இருப்பாள் சீதா.

"பேசேன்! என்ன, பதிலைக் காணோம்..." என்று கர்னல் வற்புறுத்தினால், மெல்லக் கன்னம் குழியச் சிரித்துவிட்டு, "எனக்கு என்ன தெரியும், கர்னல்- உங்களுக்குச் சரியாகப் பேச..." என்பாள்.

அவளுடைய அடக்கமான பதிலை ரசித்தவாறே அத்துடன் விட்டுவிடுவார் கர்னல்.

அரவிந்தர், சுவாமி சின்மயானந்தா போன்றவர்களின் புத்தகங்களைப் பற்றியும், தாகூர், உமர்கயாம், பாரதியார் போன்றவர்களின் கவிதைகளைப் பற்றியும் பேசுவார்கள்

பேசுவார்கள், அப்படிப் பேசுவார்கள்! அவர் ஒரு கவிதையைப் படிப்பார்; அவள் சன்னக் குரலில் அதற்கு ராகம் போட்டுப் பாடுவாள். தனக்குத் தெரிந்ததை எல்லாம் சீதாவுக்குச் சொல்லித்தர வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு - அதன்பேரில் 'பியானோ' வாசிக்கவும் அவளுக்குக் கற்றுக் கொடுத்தார் - அவளிடமிருந்த பொறுமை, பிறரை அனுசரித்துப் போகும் குணம் முதலியவற்றை கர்னல் தெரிந்துகொண்டார்.

இப்படி ஒருவரிடமிருந்து மற்றவர் அறிந்து கொண்டது, புரிந்துகொண்டது எத்தனை எத்தனையோ!

பகல் மூன்று மணிக்குச் சந்திப்பார்கள். மாலை ஆறு மணி வரை அது நீடிக்கும். அவர்கள் பழக்கத்தில் ஓர் அளவு இருந்தது; கண்ணியம் இருந்தது; நாணயம் இருந்தது.

சீதாவுடன் பழக ஆரம்பித்ததிலிருந்து கர்னல் மாலை, இரவு நேரங்களில் அதிகமாக வெளியே செல்லுவதையே விட்டுவிட்டார். 'மறுநாளைக்கு சீதாவுடன் விவாதிக்க ஒரு கவிதையோ, ஒரு புத்தகமோ - வேண்டுமே' என்று தேடித்தேடி எடுத்து வைப்பார்.

மாடி பால்கனியில் நின்றுகொண்டு எதிர் வீட்டையே உற்று நோக்கிக்கொண்டிருக்கும் அவருக்கு-மெல்லிய தென்றல், அருகே படர்ந்து வாசமிகு மல்லிகைகளைப் பூத்துச் சொரியும் மல்லிகைக் கொடி - எல்லாவற்றிலுமே சீதாவிடம் காணப்படும் மென்மை இருப்பதாகத் தோன்றும்.

'வாட் எ வொண்டர்ஃபுல் கேர்ள்... என்ன சமர்த்து-அடக்கம்..' என்று திரும்பத்திரும்பச் சொல்லி மகிழ்வார்.



அன்றிரவு தூக்கம் வராமல் தன் படுக்கையறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தார் கர்னல். அவருள் ஏதோ ஒரு படபடப்பு, துடிப்பு-என்னவென்று அவருக்கே தெரியவில்லை. உள்ளக் குமுறலை எழுத்தில் வடிக்க எண்ணி, அதையே கவிதையாக எழுதினார்.

மறுநாள் மாலை, சற்று முன்னே வந்துவிட்டபடியாலும், கர்னல் மாடியிலிருந்து இறங்கி வராததாலும் சீதா, தானே பியானோவின் முன் அமர்ந்து மனத்துக்கு இதமான ஒரு 'ட்யூனை' வாசிக்க முற்பட்டாள்.

மாடியில் முகம் கழுவிக்கொண்டிருந்த கர்னலுக்கு அந்த இனிமையான சங்கீதம் கேட்டது. அவ்வளவுதான்; முதல்நாள் எழுதிய கவிதையை எடுத்துக்கொண்டு மாடிப்படிகளில் ஒரே தாவலாக இறங்கிக்கொண்டு வந்தவர் முகத்திலும், நெஞ்சிலும் ஒரே சந்தோஷம்.

"சீதா... சீதா... நான் ஒரு புதுக்கவிதை எழுதியிருக்கிறேன்" என்று கவிதைத் தாளை அவள்முன் நீட்டினார்.

குழந்தையைப் போல் ஆசை கொப்பளிக்கப் பேசிய கர்னலைப் பார்த்து வியந்தவாறே, கவிதையை வாங்கிக் கொண்டாள் சீதா.

"உரக்கப் படி, சீதா..." என்று கர்னல் கேட்டார். சீதா படித்தாள்.

"வஸந்தம் வரும் என்ற நம்பிக்கையை
அழிக்கக் கொடும் பனி இருந்தாலும் என் அன்பே!
நம்மால் என்றோ பாடப்படுவதற்கென
இனிமையான பாடல்கள் எத்தனையோ

பிறவாது காத்திருக்கின்றன!
எங்கோ இருக்கும் ஒரு மலையில் தங்கமும் பச்சையுமாக
மலர்கள் பூக்கின்றனவாம்.
ஆங்கு, உன் நெஞ்சம் தாங்கும் அளவிற்கு
நல்ல சுவையான கனவுகளும் பல உள்ளனவாம்."

படித்துக்கொண்டே போன சீதா நிறுத்தினாள். எதிரே நின்றுகொண்டிருந்த கர்னலின் முகத்தைப் பார்த்தாள். அது ஓர் உணர்ச்சிக் கடலாக இருந்தது. பனித்திருந்த அவருடைய கண்களும் அவள் கண்களும் சந்தித்தன. காலமெல்லாம், யுகயுகமாகக் காத்திருந்து, ஏதோ சேதியைச் சொல்லத் துடிக்கும் துடிப்பு அவற்றில் தெறித்தது.

"நிறுத்தாதே சீதா, ப்ளீஸ்... மேலே படியேன்"-கர்னல் குரல் கம்மக் கெஞ்சினார்.

"என் உயிரே!"... புரியாத பல விஷயங்கள் புரிந்து, தன்மேல் பூவாகச் சொரிவதை சீதா உணர்ந்துகொண்டே மேலே படித்தாள்.

"என் உயிரே! என்றோ ஒருநாள் நாம் மீண்டும்
திண்ணமாகச் சந்திப்போம்!

எந்த நாளில் சூரியன் மேகக் கோட்டையிலிருந்து
விடுபட்டு வெளிவருகிறானோ,

அந்த நாள், அந்த நேரம் நாமும் சேர்ந்தே தீருவோம்—
அப்பொழுது எங்கிருந்தோ நீ என்னிடம் ஓடி வருவாய்—

தென்றலின் வெப்பத்தைப் போல வருவாய்—
பனியின் முத்தமிடும் மென்மையுடன் வருவாய்—

மீண்டும் நாம் சேரும் அந்நாளுக்காகக் காத்திருப்பேன்,
என் காதலின் சோதியே!



அதுநாள் வரை நீ என்னை எப்பொழுதாவது மட்டுமே
நினைத்திரு!

நீ மறுபடியும் என்னவளாக ஆகும் நாள் வரும்வரை,
இடையிலிருக்கும் காலத்தை

ஓ, கடவுளே!
நீ வேகமாக ஓட்டமாட்டாயா?"

படித்து முடிக்கும் முன்பாகவே அவர்கள் இருவருக்கும் புரிந்துவிட்டது - 'ஏன் தங்கள் நடுவிலும் இப்படி ஒரு ஏக்கம், ஒரு பந்தம்' என்று.

துளித் துளியாகச் சேர்ந்த தண்ணீர், மெல்ல மெல்லப் பெரிதாகி, வெள்ளமாக 'ஓ'வென்று பிரவாகமெடுத்து ஓடுவது அவர்களுக்குத் தெரிந்தது.

சிலையாக அமர்ந்திருந்த சீதாவின் அருகில் வந்து குனிந்து, அவள் முகத்தைத் தன் கைகளில் பூப்போல ஏந்திக்கொண்டு—

"சீதா..." என்றார் கர்னல் - உருகினாள் சீதா. தெய்வீகக் காதல் மலர்ந்தது அங்கே.

## 3

தோட்டத்தில் பறந்து திரிந்த பட்டாம்பூச்சிகளில் புதிய நிறங்களைப் பார்த்தாள் சீதா. புல்வெளி பச்சைப் பசேலென்றும், ஆகாயம் நீலமாகவும் காட்சியளித்தன அவளுக்கு. எதிலுமே ஒரு ரம்மியம், ஓர் இதமான சங்கீதம் கலந்திருப்பதாக சீதா நினைத்தாள் - யாரோ ஒரு கவி, ஒரு காதலி பாடுவதாக எழுதுகிறான்:

'பனி மலர் அதனில் புது மணம் கண்டேன்;
வானில், கடலில் வண்ணங்கள் கண்டேன்.
...தனிமையில் இனிமை கண்டேன்'

சரியாகத்தான் சொன்னான் ஐயா, அவன்! காதல் அப்படிப்பட்டதுதானே? நம் சீதா மாத்திரம் இதற்கு விதிவிலக்கா என்ன?

அருகில் கர்னல் வந்து, தன் முகவாயைத் தொட்டு, "சீதா..." என்று அழைத்த மாத்திரத்தில், கோடானு கோடி உணர்ச்சிகளை அல்லவா அவள் அனுபவித்தாள்! 'வாழ்நாளெல்லாம் காத்திருந்தது இந்த நேரத்திற்காக, இந்த உணர்வின் விழிப்புக்காகத்தானே' என்று அவள் மனம் பாடியது. அன்று அதற்குப் பிறகு என்ன நடந்தது, தான் எப்படி வீடு வந்து சேர்ந்தோம் என்பதெல்லாம் அவள் நினைவிலே தங்கவேயில்லை.

அவளுக்கு உறைத்ததெல்லாம் 'தான் காதல் வயப் பட்டிருக்கிறோம்' என்பதுதான்.

'இது ஏன் எனக்கு முன்பே தெரியவில்லை?' என்று தனிமையில் அமர்ந்தவாறு, தனக்குத்தானே பல தடவை முனகிக்கொண்டாள். யோசிக்கயோசிக்க அவளுக்கு ஒன்று புரிந்தது - 'புத்தகத்தில் படிப்பதுபோல் 'காதல்' கண்டதும் வருவது அல்ல; அன்பு அளவுமீறிப் போய் ஒருநாள் விழிப்பில் காதலாகத் தன் விஷயத்தில் மாறியிருக்கிறது' என்று.

நேரம் செல்லச்செல்ல தன் இதயத் துடிப்பு 'கர்னல்... கர்னல்' என்று சொல்வது போலவும், ரத்த நாளங்க ளெல்லாம் உஷ்ணமேறிக் கொதிப்பது போலவும்-ஓ! இன்னும் என்னவெல்லாமோ அவளுக்குத் தோன்றியது.



மொட்டு மலராகுமுன்பே அதைப் பறித்துவிட்ட 'அந்த இறைவன்' மீண்டும் அதே மொட்டுக்கு உயிர் கொடுத்து, அதை அழகாக, மிகமிக அழகாக மலரச் செய்தான்.

ஆஹா! மலர்ந்த சீதாதான் எப்படி இருந்தாள்!

மறுநாள் காலை - இரவெல்லாம் உறங்காமல் இருந்ததால் சற்றே சிவந்த விழிகளும், ஆனால், துள்ளும் மனமுமாக இருந்த கர்னல், காலை சுமார் எட்டு மணியளவில் சீதா வீட்டிற்கு வந்தார்.

இரவெல்லாம் நன்றாக யோசித்துவிட்டுத்தான் அந்த முடிவுக்கு வந்திருந்தார் அவர். தன்னுடைய இத்தனை வயதில் தன்னுள் ஏதோ ஒரு மாறுதல் கடந்த இரண்டு மாத காலமாகத் தோன்றி வருவதை அவர் உணர்ந்துதான் இருந்தார். அது என்ன என்று தெரியாததாலும், புரியாத தாலும் பல நாட்கள் அவர் 'ஏன் இப்படி?' என்று வியந்ததுண்டு. நேற்று வெகுநேரம்வரை சிந்தித்தபோது தான் அவர் புரிந்துகொண்டார், தான் சீதாவைக் காதலிப் பதை; அவளைத் தன் மனக்கோயிலின் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்துவிட்டதை. 'இதற்கு என்ன முடிவு?' என்று நேற்றிரவு ஆராய்ந்ததில், சீதாவிடம் மேலும் இதைப்பற்றிப் பேசும் முன்பாக அத்தையிடம் தன் மனதைச் சொல்லுவதுதான் முறை என்று அவருக்குத் தோன்றியது. அதனால்தான் இப்பொழுது வந்திருக்கிறார்.

படியேறி, வீட்டினுள் நுழைந்தார் கர்னல். 'தான் சொல்லப்போவது சரியான காரியம்தானா?' என்ற எண்ணம் அவரைக் குடைந்து எடுத்துக்கொண்டிருந்தது.

உள்ளே வந்த அவர் கண்களுக்கு கூடத்தில் அமர்ந்து கொண்டு, தலைக்குக் குளித்ததினால் ஈரமாக இருந்த கூந்தலை ஆற்றிக்கொண்டு, பெண்மையே உருவாக சீதா இருப்பதும், அருகில் அத்தை உட்கார்ந்திருப்பதும் தெரிந்தது.

அவர்கள் அருகில் சென்றார் கர்னல். 'சீதா தன் அத்தையிடம் ஏதாவது சொல்லியிருப்பாளோ' என்ற எண்ணத்தில் அவளது முகத்தையே ஊன்றிப் பார்த்தவர், அங்கிருந்த கண்களில் தன் பிம்பத்தையும், பொங்கும் காதலையும், 'சட்'டென்று சிவந்த கன்னங்களையுமே பார்த்தார்.

மௌனமாக இருந்த அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்த அத்தைக்கு 'ஏதோ' புரிவதுபோல இருந்தது.

"வாருங்கள்" என்று எழுந்து நின்று கர்னலை அழைத்தாள் அத்தை.

"பெரியம்மா... நான்... நான்" என்று முதலில் தயங்கிய கர்னல் என்ன தோன்றியதோ, தன் முகத்தை நிமிர்த்தி, கனத்த குரலில் கம்பீரமாகச் சொன்னார்:

"சுற்றி வளைத்து நான் பேசப்போவதில்லை, பெரியம்மா; உடனேயே விஷயத்திற்கு வருகிறேன். நான் இப்பொழுது சொல்லப்போகும் சமாசாரத்தினால் நீங்கள் அதிர்ச்சி அடையலாம்; கோபப்படலாம்; ஏன், ஆத்திரமும் படலாம். ஆனாலும், நான் எண்ணுவதோ, இல்லை, உணர்ந்துவிட்டதோ அதனால் மாறப்போவதில்லை" என்று ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு, "பெரியம்மா- நீங்கள் நம்பும் தெய்வத்தின்மீது ஆணையிட்டுச் சொல்



கிறேன், நீங்கள் என்னை நம்பவேண்டும்... நான் சீதாவை மனமாரக் காதலிக்கிறேன். அவளை மணக்க ஆசைப் படுகிறேன். பெரியம்மா - உங்கள் சம்மதமும், சீதாவின் சம்மதமும் கிடைக்குமா?"

ஸ்தம்பித்தே போனாள் அத்தை - சில விநாடிகளுக்குத்தான்.

பிறகு தலையைத் திருப்பி சீதாவைப் பார்த்தாள்; கர்னலையும் பார்த்தாள். ஐம்பது வயது மனிதரும், இருபது வயதுப் பெண்ணும் ஓர் உண்மையான காதலில், பாசத்தில் சிக்குண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

'தான் வணங்கும் தெய்வம் தன் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்திருக்கிறது; தனக்குப் பிறகு சீதாவைப் பார்த்துக்கொள்ள ஓர் அருமையான மனிதர் கிடைத்திருக்கிறார்' என்றுதான் அத்தைக்குத் தோன்றியது.

"சீதா..." என்று மெள்ள அழைத்தாள். அவளிடமிருந்து வாய்ச்சொற்களாக ஒரு பதிலும் கிடைக்காவிட்டாலும், கண்களால் சம்மதத்தை உணர்ந்தாள் அத்தை.

திடீரென்று சந்தோஷம் பீறிட்டது அத்தைக்கு. "எல்லாம் பகவான் செயல். சந்தோஷமாக நன்றாக தீர்க்காயுசோடு இருங்கள்" என்று வாழ்த்தியவள், கண்களிலிருந்து கண்ணீர் உருண்டு கன்னத்தில் ஓடவே அதை மறைக்கும் சாக்கில் சீதாவையும் கர்னலையும் அங்கு தனியே விட்டுவிட்டு வெளியில் போய்விட்டாள்.

அதன்பிறகு சீதாவும் கர்னலும் சந்தித்துக்கொண்ட விதமே வேறுமாதிரியாக இருந்தது.

முன்பு இருந்த பேச்சோ, ஆரவாரமோ இருக்காது. ஒரே அமைதிதான். மணிக்கணக்கில் ஒருவரை ஒருவர் நோக்கியபடியே அமர்ந்திருப்பார்கள். கண்கள்தான் ஆயிரம் பேசும்.

அருகில் வருவதோ, தொட முயல்வதோ ஒன்றுமே இல்லை.

உடற்கவர்ச்சியே இல்லாத அருமையான காதல் ஐயா, அது! மனதோடு மனம் ஒன்றி, உயிரோடு உயிர் சங்கமமான காதல் அல்லவா? அதுதானே முன்பே சொன்னேன், 'தெய்வீகக் காதல் மலர்ந்தது அங்கே' என்று!

ஆனால், ஒரே ஒருநாள் மட்டும், அவர்கள் தோட்டத்துப் புல்தரையில் அமர்ந்திருந்தபோது கர்னல் கேட்டார், "சீதா, எனக்குள் அரித்துக்கொண்டிருக்கும் இரு முக்கியமான சந்தேகங்களை உன்னிடம் சொல்ல வேண்டும் போல இருக்கிறது. சொல்லட்டுமா?"

"உம்" என்று சீதா சொன்னதும், கர்னல், "எனக்கு வயது நாற்பத்தொன்பது. உனக்கோ இருபத்தொன்று. உன் வயதில் எனக்கு மகன் இருக்கலாம். இந்த வயதில் நான் செய்வது சரியா என்றே எனக்குப் புரியவில்லை. மேலும், என் பழைய வாழ்க்கையைப்பற்றி உன்னிடம் என்னவெல்லாமோ சொல்லியிருக்கிறேன். நீ இப்பொழுது அவற்றை நினைத்தால் என்னைப்பற்றி என்ன நினைப்பாயோ என்று பயமாக இருக்கிறது, சீதா. நான் எவ்வளவு சந்தோஷமாக இருந்தாலும், நடுநடுவில் இந்த எண்ணங்கள் தோன்றி என்னை நிலைகுலைய வைக்கின்றன, சீதா..." என்று கரகரத்த குரலில் சொன்னார்.



குழந்தை மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு கர்னல் அப்படி வெளிப்படையாகப் பேசியதும், சீதாவுக்கு அருகில் வந்து அவரை அள்ளிக்கொண்டு ஆறுதல் சொல்லவேண்டும் போல் தோன்றியது.

குனிந்து, புல்தரையில் கிடந்த அவர் கையை எடுத்துத் தன் கையோடு கோத்துக்கொண்டாள். பிறகு அதைத் தன் கன்னத்தில் வைத்து மெல்ல அழுத்திக்கொண்டாள். அந்தக் கணத்தில் இருவருமே தங்களை இழந்தார்கள். ஓர் ஆடவனும், பெண்ணுமாகத்தான் தங்களை உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் நடுவில் இருந்த வயது வித்தியாசம் ஓடியே போயிற்று.

இதுவே கர்னலின் முதல் சந்தேகத்திற்குப் பதிலாகவும் இருந்தது.

பிறகு சீதா சொன்னாள்; "நீங்கள் எத்தனையோ பெண்களிடம் 'பழகி' இருக்கலாம், கர்னல். ஆனால், என்னைத்தானே மணக்க விரும்புகிறீர்கள்! இது எவ்வளவு மாறுபட்டது - மற்றவற்றிலிருந்து! நாம் ஒருவரை ஒருவர் காதலிக்கிறோம், கர்னல் - இது உங்களுக்குப் புரியவில்லையா?"

முதல் தடவையாக சீதாவை அருகில் இழுத்து அணைத்துக்கொண்டார் கர்னல். அவருடைய தோள்களில் தன் தலையைச் சாய்த்துக்கொண்டாள் சீதா.

எவ்வளவு நாழிகை அந்த நிலையிலேயே இருந்தார்களோ?

அத்தை ஜோஸியரிடம் போய் திருமணத்திற்கு நாள் கூடப் பார்த்துவிட்டாள்.

இன்னும் சரியாக இருபத்தியிரண்டு நாட்களில் மணமக்களின் விருப்பப்படி எளிமையான முறையில் ஒரு கோயிலில் திருமணம் நடக்கப்போகிறது.

கர்னல் சிறு பிள்ளையாகவே மாறிவிட்டார் என்று தான் சொல்லவேண்டும். நித்தம் பொழுது விடிந்தால் 'சீதா'வுக்கு என்று 'கார்டு' ஒட்டிய ஒரு பரிசுப் பொருள் அவள் வீடு தேடிவந்து நிற்கும். புடவைகள், சின்ன கற்கள் பதித்த மோதிரம், புத்தகங்கள், சென்ட் பாட்டில்கள், மலர்ச் செண்டுகள், இத்யாதி, இத்யாதி. தானே அவளிடம் கொடுக்க வெட்கப்பட்டவராய் கடையிலிருந்தே நேரே சீதாவுக்கு அனுப்பிவிடுவார்.

அன்றும் அப்படித்தான். அன்று வந்திருந்த பரிசுப் பொருள்களை ஆவலுடன் பிரித்தாள் சீதா. வெள்ளியில் அழகிய வேலைப்பாடுகளைக் கொண்ட ஒரு 'போட்டோ' ஃபிரேம் - அதனுள் அவளுடைய புகைப்படம். இரண்டு நாட்களுக்கு முன்பு அவரே அவளை எடுத்ததுதான்; மிகவும் அழகாக இருந்தது.

கூடவே இருந்த ஒரு வெள்ளைக் கவரைப் பிரித்தாள் சீதா. 'காத்திருக்கிறேன்!' என்ற தலைப்பில் அவர் எழுதிய 'வசந்தம் வரும்' கவிதை பொன் எழுத்துக்களில் பொறிக்கப் பட்டிருந்தது. அதற்கு அடியில் கர்னல் எழுதியிருந்தார்: "அரவிந்தர் சொன்னபடி 'ஓர் உண்மையான உள்ளம் உலகத்திலுள்ள எல்லா சக்திகளைக் காட்டிலும் வலிமை யானது' என்ற வாக்கை என்னை உணர வைத்த என் சீதாவுக்கு - சமர்ப்பணம்."

படித்துவிட்டு விசித்துவிசித்து அழுதாள் சீதா. ஏன்? 'இப்படிப்பட்ட ஒரு மனிதரின் அன்பைப் பெற தனக்குத் தகுதி இருக்கிறதா?' என்றுதான்.



இன்னும் திருமணத்திற்குப் பதினைந்தே நாட்கள் தாம் இருந்தன.

கொடைக்கானலிலுள்ள கர்னலின் எஸ்டேட்டில் ஏதோ தகராறு என்று அன்று காலை தகவல் வந்தது. உடனே வந்து நிலவரத்தைச் சரி செய்யுமாறு எஸ்டேட் மானேஜர் தந்தி கொடுத்திருந்தார்.

"அதிகம் போனால் ஐந்து நாட்கள் ஆகலாம், சீதா. போய்விட்டு வந்துவிடுகிறேன். மேலும் நம் திருமணத் திற்குப் பிறகு நாம் தேனிலவுக்குப் போயிருக்க அந்த வீட்டைத் தயார்செய்ய வேண்டாமா? என் இதயராணி வருகைக்கு அந்த மாளிகை தயாராக வேண்டாமா?" என்று நாடக பாணியில் பேசியதும் 'களுக்' என்று சிரித்த சீதா, "போய்வாருங்கள்" என்று மனமில்லாமலே சொன்னாள்.

மறுநாட்காலை விடியுமுன்பே கர்னல் தன் காரில் கொடைக்கானலுக்குப் புறப்படப்போகிறார். மாலை ஏழு மணி வரை அவருடனேயே பொழுதைக் கழித்த சீதா, "உடம்பு பத்திரம், சீக்கிரம் வந்துவிடுங்கள், லெட்டர் போடுங்கள்" என்று நூறு தடவை சொல்லிவிட்டு, தன் வீடு வந்துவிட்டாள்.

இரவு மணி ஒன்பதரை இருக்கும். என்னவோ ஒரு துடிப்பு. இருக்கை கொள்ளவில்லை சீதாவுக்கு. ஏனோ மறுபடியும் கர்னலைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம்.

"போய் அவரைப் பார்த்துவிட்டு வந்துவிடட்டுமா அத்தை?" என்று கேட்டவளை ஆச்சரியத்துடன் பார்த்தவாறே, "உம், சுருக்க வந்துவிடம்மா - இரவு வேளை பார்..." என்றாள் அத்தை.

அவசரம் அவசரமாக தன் வீட்டிலிருந்து எதிர் வீட்டுக்கு ஓடினாள் சீதா. பிரமாண்டமான அந்த கேட்டுகளைத் தாண்டும்போது, கல்லோ, கட்டையோ தடுக்கவே, இடறி விழுந்தாள். தடுக்கிய இடத்தில் கல் குத்தியதால், ரத்தம் கசிவதையும் பார்த்தாள்.

வாசல் கேட்டுகளிலிருந்து வளைந்து, நெளிந்து சென்ற பாதையின் முடிவில்-தூரத்தில், புதிய-அவளுக்குப் பழக்கமில்லாத-ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. அதனுள் ஒருவன்-டிரைவராக இருக்குமோ, என்னவோ? - அமர்ந்துகொண்டு புகை பிடித்துக்கொண்டிருந்தான்.

காலில் ஏற்பட்ட காயத்தின் வலியைப் பொருட்படுத்தாமல் விந்திவிந்தி உள்ளே நடந்து சென்ற சீதா, 'போர்ட்டிகோ'வை நெருங்கும்போது 'ஓஹோஹோ' என்று யாரோ உரத்த குரலில்-ஒரு பெண்ணின் குரலில்-சிரிப்பதைக் கேட்டு அண்ணாந்து பார்த்தாள்.

மேலே பால்கனியில், கர்னலின் படுக்கையறையை ஒட்டினாற்போன்று இருக்கும் திறந்தவெளியில், யாரோ ஒரு பெண்ணும் - நாகரிகத்தின் பிடியில் சிக்கி உடையணிந்திருந்தாள் அவள் - கர்னலும் மிகமிக அருகில் நின்றுகொண்டிருந்தார்கள். அவள்தான் சிரித்தாள். அதோடு நிற்காமல் முன்னே சாய்ந்து, செல்லமாகக் கர்னலின் தோள்களில் ஓர் அடியும் கொடுத்துவிட்டு மீண்டும் சிரித்தாள்.

சீதாவுக்குக் கால் காயம் வலிக்கவில்லை; ஆனால் நெஞ்சு வலித்தது; உலகமே கசந்தது.



## 4

நினைக்கநினைக்க, தான் எப்படி அப்படியொரு மட்டமான, மோசமான செயலைச் செய்தோம் என்று கர்னலுக்கு விளங்கவில்லை. காரில் விடியற்காலை கிளம்பி மதுரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவருக்கு முதல்நாள் 'இரவை' நினைக்கும்பொழுது உண்மையாகவே குமட்டிக்கொண்டுதான் வந்தது.

சீதா வந்துவிட்டுப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் போன் ஒலித்தது. எடுத்தவருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. டில்லியில் அவருடன் 'பழக்கம்' வைத்திருந்த ஒரு பெண்தான் பேசினாள். ஏதோ வேலையாய் சென்னைக்கு வந்திருக்கிறாளாம். மறுநாள் திரும்ப டெல்லி போகப் போவதாகவும், தன்னைப் பார்க்க ஆசைப்படுவதாகவும் அவள் சொன்னபொழுது, ஒரு கணம் தாமதித்தார். பிறகு "சீ! இது என்ன அசட்டுத்தனம்! இவளைக் கண்டு நான் ஏன் தயங்கவேண்டும்? மேலும் என் அருமை சீதாவைப்பற்றி இவளிடம் சொல்லலாமே" என்று தோன்றவே. "என் வீடு 'இன்ன' இடத்தில் இருக்கிறது. வந்துவிடு" என்று சொல்லிவிட்டார்.

அவளும் வந்தாள். வந்தவள் சும்மா வரக்கூடாதோ? 'சோம்பும்', 'பார்லி'யும் கலந்த. மத்தியப் பிரதேசத்தில் தயாரான ஒரு சிறந்த (!) மதுவாம், அதையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

"டார்லிங்! ஐ ஹேவ் ப்ராட் திஸ் ஸ்பெஷலி ஃபார் யூ!" என்று கீச்சுக் குரலில் கத்தியவாறே, இரண்டு

கண்ணாடி தம்ளர்களைக் கொண்டுவருமாறு பணித்தாள். 'போறாத வேளை', 'சனி வேலை செய்தது' என்றெல்லாம் சொல்லுவார்கள் பாருங்கள்; கர்னலின் நேரம் அப்பொழுது அப்படியிருந்தது.

'போகிறாள். இவளைத் திருப்தி செய்ய ஒரே ஒரு வாய் அருந்துவோம். பிறகு இவளை அனுப்பிவிடலாம்' என்று நினைத்துக்கொண்டு அவள் சொன்னதற்கு இசைந்தார் அவர்.

போடக்கூடாத விஷயங்களையெல்லாம் போட்டுச் செய்திருந்த அந்த மதுவை ஒரு வாயோடு நிறுத்த கர்னலால் இயலவில்லை. தவிரவும், மது அருந்தும் பழக்கத்தை அறவே விட்டவராக இருந்தபடியால், சிறிது அருந்திய உடனேயே தன் நிலையை இழக்கத் தொடங்கி விட்டார் கர்னல்.

என்னென்னமோ பேசிக்கொண்டிருந்த - தவறு, தவறு - பிதற்றிக்கொண்டிருந்த அந்தப் பெண், "கர்னல்! உங்கள் சமீபத்திய 'பெயிண்டிங் கலெக்ஷனை' நான் பார்க்க வேண்டாமா?" என்று கொஞ்சிக்கொண்டு கேட்கவும், "ஷ்யூர்" என்று சொல்லி அவளைத் தன் மாடி ஹாலுக்கு அழைத்துச் சென்றார் கர்னல்.

ஓவியங்களைப் 'பார்த்தேன்' என்று பெயர் பண்ணி விட்டு, "வாங்களேன், திறந்தவெளிக்குப் போவோம்! நிலா வீணாகக் காய்கிறதே" என்று அவள் அவரை அழைத்துக்கொண்டு மாடி பால்கனிக்குப் போனாள்.

சீதா அப்பொழுதுதான் வந்திருக்கிறாள்.

தன் சீதா வந்ததோ, பார்த்ததோ, போனதோ கர்னலுக்குத் தெரியாது.



பேசிக்கொண்டே கர்னலின் படுக்கையறைக்குச் சென்றுவிட்ட அந்தப் பெண், திடீரென்று அசடு வழியச் சிரித்துக்கொண்டே, "டார்லிங்" என்று முனகியவாறு கர்னலின் மேல் சாய்ந்தாள். என்ன இருந்தாலும் பழக்கப் பட்டவர்தானே கர்னல் ராஜசேகரன்? அவளுக்கு என்ன தேவை என்று அவருக்குப் புரிந்துவிட்டது.

அவளை நோக்கித் திரும்பினார்.

அச்சமயம் அவர் கண்களில் மேஜை மேல் வைக்கப் பட்டிருந்த சீதாவின் புகைப்படம் தெரிந்தது.

'ஐயோ! நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்!' என்ற உணர்வு உண்டாயிற்று. 'என் சீதா, என் உயிரான சீதா இருக்கவேண்டிய இடத்தில் இவளா?' என்ற எண்ணம் அவரை உலுக்கியது; தன் நிலையைப் புரிந்துகொண்டார் கர்னல்.

"ஏய்" என்று அந்தப் பெண்ணை அதட்டியவர், "என்னை யாரென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்; இல்லை, யாரென்று நினைத்தாய்? நான் இப்பொழுது பழைய 'ராஜா' இல்லை, புதிய 'ராமன்', தெரியுமா? சீதாவின் கணவன். ஓஹோ! மரியாதையாக உன் இடத்திற்குப் போய்ச் சேர்; உம், கிளம்பு" என்று உறுமி விட்டு, அவளை மறுவார்த்தை பேச விடாமல் 'தடதட' வென்று கீழே தள்ளிக்கொண்டு வந்து அவளுடைய வண்டியில் ஏற்றிவிட்டு, டிரைவரிடம் "சீக்கிரம் ஓட்டிக் கொண்டு போ" என்று ஆணையிடவும் செய்தார்.

பேயறைந்தாற்போலப் போன அந்தப் பெண் ஒன்றுமே புரியாதவளாக, விழித்துக்கொண்டே போய் விட்டாள்.

வீட்டினுள் நுழைந்த கர்னலுக்கு தன் மேலேயே கோபம்கோபமாக வந்தது. 'தான்... இப்படி... சீதாவின் கணவனாகப் போகும் தான்.. சே..'-அவருக்கு ஆறவில்லை.

ஹாலில் இருந்த மதுப் புட்டியை எடுத்தார். "டாம் யூ.." என்று அலறிக்கொண்டே அதை வீசி எறிந்தார். சுவரில் மோதிய அந்த பாட்டில் சுக்கு நூறாகி, நொறுங்கி விழுந்தது. அவர் ஆத்திரமும் சற்றுத் தணிந்தது.

என்ன நினைத்தாரோ! மாடி படுக்கையறைக்கு விரைந்து அங்கு தான் வைத்திருந்த சீதாவின் புகைப் படத்தை எடுத்து, "என் கண்ணம்மா, மை டார்லிங்.. என்னை மன்னிப்பாயா! ப்ளீஸ், மன்னித்துவிடு" என்று அரற்றினார். இத்தனை வேதனையிலும் அவருக்கு ஒரு திருப்தி; அது, தான் 'பெரிய தவறு' ஒன்றும் செய்து விடவில்லை என்று.

உடனே சீதாவுக்குப் போன் செய்து, தான் செய் ததைக் கூறி மன்னிப்புக் கோர எண்ணினார். ஆனால், கூடவே ஒரு தயக்கமும் இருந்தது. அப்பொழுது மணி இரவு பதினொன்றரை. அந்நேரத்தில் சீதாவை அழைத்தால் அத்தை என்ன நினைப்பாள்? மேலும் சீதாவே என்ன நினைப்பாள்! 'வேண்டாம். ஊருக்குப் போய்விட்டு வந்து சொல்லலாம். என்ன பெரிதாக நடந்துவிட்டது! ஒன்றும் இல்லை' என்று சமாதானம் சொல்லிக்கொண்டார்.

"நான் 'ராமன்'தான், சீதா. இனி உன் 'ராமன்'தான்" என்று சொல்லிக்கொண்டே உறங்கியும் போனார்.

இப்பொழுது காரில் செல்லும்போது மீண்டும், மீண்டும் முந்தின நாள் நிகழ்ச்சி அவர் கண்முன்



தோன்றி அவரைக் குடைந்தது. 'நான் சொன்னால் சீதா புரிந்துகொள்வாள்' என்று அடிக்கடி தைரியம் சொல்லுகிறாற் போல சொல்லிக்கொண்டேபோனார்.

கொடைக்கானலை அடைந்தவருக்கு ஒன்று மாற்றி ஒன்று ஏதேதோ வேலைகள் சரியாக இருந்தன. ஐந்து நாட்கள் அங்கு தங்கி ஒரு வழியாக எல்லாவற் றையும் 'சீர்' செய்துவிட்டு ஆறாம் நாள் அங்கிருந்து சென்னைக்குக் கிளம்பினார்.

அந்த ஐந்து நாட்களும் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் ஒரே அசுர மழை என்று பேப்பரில் படித்தார். நடுவில் இரண்டு நாட்கள் சென்னைக்கு போன் செய்து, சீதாவுடன் பேச நினைத்தார். வீட்டில் போன் இல்லாததால், தபால் நிலையத்திற்குச் சென்று போன் செய்தவருக்கு முதல்நாள் 'சென்னை லைன்' சரியாக இல்லை என்றும், இரண்டாம் நாள், 'நோ ரெஸ்பான்ஸ்' என்றும் பதில் கிடைத்தது. ஏமாற்ற மடைந்த கர்னல் தன் அன்பையெல்லாம் கொட்டி சீதாவுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

சென்னைக்குப் புறப்பட்ட அன்று சீதாவுக்கென்று அங்கிருந்த ஒரு 'க்யூரியோ' கடையில் ஓர் உயர்ந்த சால்வையை வாங்கிக்கொண்டார்.

சென்னையை வண்டி நெருங்கநெருங்க அவருக்குப் பரபரப்பு தாங்கவில்லை. 'என் சீதா எனக்காகத் தன் வீட்டில் காத்திருப்பாளா, இல்லை, என் வீட்டில் இருப்பாளா? என்ன நிறத்தில் புடவை அணிந்திருப்பாள்?

அவளிடம் முதலில் என்ன பேசுவது? எப்படி அந்த முதல் நாள் விஷயத்தைச் சொல்லுவது?" என்றெல்லாம் யோசித்துக்கொண்டே வந்தார்.

சென்னையை அடையும்போது இரவு மணி எட்டு இருக்கலாம். எப்பொழுதும் 'பளிச்'சென்று விளக்கெரியும் சீதாவின் இல்லம் அன்று இருளில் மூழ்கியிருந்தது. வண்டியை கேட்டுக்குள் செலுத்தி, நிறுத்தி, இறங்கி வாசற்படி ஏறினார் கர்னல்.

சீதாவின் வீடு பூட்டிக்கிடந்தது.

என்னவென்று புரியவில்லை கர்னலுக்கு. ஏமாற்றத்துடன் திரும்பி தன் வீட்டிற்குச் சென்றவர், சமையற்காரனை அழைத்து, "அம்மா எங்கே?" என்று பரபரப்பாகக் கேட்டார்.

அவன் முகத்தில் ஏனோ வருத்தம்.

பதில் பேசாமல் உள்ளே சென்று ஒரு கவரைக் கொண்டு வந்து அவரிடம் நீட்டினான்.

கர்னலின் உடலும் உயிரும் துடித்தன.

கைகள் நடுங்கின; பிரித்துப் படித்தார்.

"என் அன்பரே" என்று தொடங்கி எழுதியிருந்தாள் சீதா.

"ஊரிலிருந்து திரும்பி வரும் உங்களை வரவேற்க என்னை எதிர்பார்ப்பீர்களோ, என்னவோ? எனக்கு பதில் இந்தக் கடிதம்தான் உங்களிடம் வரும்.

"கர்னல்! சுற்றி வளைத்துப் பேசினால் உங்களுக்குப் பிடிக்காது, அதனால் விஷயத்திற்கு வருகிறேன்.



"நீங்கள் ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு - உங்களை மீண்டும் பார்க்க எண்ணி நான் உங்கள் வீட்டிற்கு வந்தேன். ஆனால், அன்பரே! பார்க்கக் கூடாத எதையோ நான் பார்த்துவிட்டேன்.

"எனக்கு மிகப் பரந்த உள்ளம் இருக்கிறது என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்கள். அப்படிப்பட்ட என்னால் 'இதை' எடுத்துக்கொள்ள முடியவில்லையா என்று நீங்கள் கேட்கலாம். கர்னல், நான் முன்பு கதையெல்லாம் கேட்டது ஒரு சாதாரணப் பெண்ணாக. ஆனால், இப்பொழுது? இன்னும் சில நாட்களில் நான் உங்களில் 'பாதி'யாகவே ஆகப்போகிறேன்.

"உங்களுடன் பல பெண்கள் 'பழகி' இருக்கலாம். எப்படியும் பொழுதைக் கழிக்க சம்மதித்திருக்கலாம். அவையெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் உடற் கவர்ச்சிக்காக கர்னல், வெறும் உடல் ஆசைக்காக.

"வாழ்க்கையே பாலைவனமாகிவிட்ட எனக்கு மறுபடியும் வாழ ஆசை கொடுத்தீர்களே, கர்னல், அது எதற்காகத் தெரியுமா? உங்களுடன் வாழத்தான்.

"அதை நான் ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமோ, என்னவோ?

"நான் உங்களுடன் வாழச் சம்மதித்ததற்கு முக்கியமான காரணம் என்ன தெரியுமா?

"எனக்கு உங்கள் அறிவையெல்லாம் ஒரு மழலையாக்கித் தரப்போகிறீர்கள்; நாம் இருவருமாக அந்த மழலையைக் கண்ணில் வைத்து வளர்த்து, 'கணவனும், மனைவியும், குழந்தையுமாக வாழப்போகிறோம்' என்ற

ஆசைக்காக. இதுவும் உங்களுக்குத் தெரியுமோ, என்னவோ?

"தவிரவும், 'கணவன்-மனைவி' உறவு ரொம்ப அழகானது; உயர்ந்தது என்று அடிக்கடி சொல்வீர்களே, அதை நிரூபித்துக் காட்டவும்தான், கர்னல்.

"இந்த எண்ணமெல்லாம் வந்தபிறகு, உங்களை மீண்டும் நான் பார்த்த நிலையில் பார்த்தால் எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று உங்களுக்குப் புரிகிறதா?

"என் கணவர் உயர்ந்த உள்ளம், சிறந்த அறிவு, கம்பீரமான உருவம் ஆகியவற்றை மட்டும் கொண்டவராக இருந்தால் போதாது. அவர் முக்கியமாக ஒரு மனிதராக இருக்கவேண்டும், கர்னல், மனிதராக இருக்க வேண்டும்.

"நான் உங்களை உளமாரக் காதலிக்கிறேன், நீங்களும் என்னை உயிராக விரும்புகிறீர்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும், கர்னல். நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழமுடியாது என்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும், மனிதனாக வாழும் ஒருவர்தானே எனக்குத் தேவை? அதனால்தான் இப்பொழுது உங்களை விட்டுப் போகிறேன், கர்னல்.

"ஆனால், இது மூன்று மாதங்களுக்கு மட்டும்தான். இது ரொம்பச் சிரமமான காரியம். நினைத்தாலே நடுக்கமாகத்தான் இருக்கிறது.

"அன்பரே! பலவீனங்கள் மனிதனுக்கு இருக்கலாம் என்றாலும் அவையே அவனை அடிமையாக்கினால் அவன் மிருகமாகிவிடுகிறான்; மனிதனாக இருப்பதில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் போகிறேன்.



"நீங்கள் எனக்கு ஒரு தடவை சொன்னதுபோல திரும்பத்திரும்ப நீங்கள் சொன்னதையே சொல்லுவதற்கு மன்னிக்கவும். எனக்குத் தெரிந்ததெல்லாம் நீங்கள் சொல்லிக்கொடுத்ததுதானே!) **'ஓர் உண்மையான இதயம், உலகத்திலுள்ள எல்லா சக்திகளைக் காட்டிலும் வலிமையானது'** என்பதையும் நீங்கள் உணரவேண்டும் என்பதே என் அவா. அது நிறைவேறுமா?

'வசந்தம் வரும் - கண்டிப்பாக வரும்' என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறேன்.

"தயவு செய்து என் விலாசத்தைக் கண்டுபிடிக்க முயலவேண்டாம்...

உங்கள்
சீதா."

நெஞ்சு வெடிக்கும் துக்கம் கர்னலின் உள்ளத்திலிருந்து கிளம்பி, கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் ஆத்திரமாக மாறி வெடித்தது.

'தான் ஒரு தவறும் செய்யாதபோது, இவள் தானாகவே எதையோ கற்பனை செய்துகொண்டு இப்படித் தன்னைப் புரிந்துகொள்ளாமல், புரியவைக்க சந்தர்ப்பமும் கொடுக்காமல் எங்கோ போய்விட்டாளே' என்ற ஏமாற்றம் அவருக்கு சீதா மேல் மிகுந்த கோபமாக மாறியது.

"ஓஹோ! என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாள் இவள் மனதில்? காதலிக்கிறேன் என்பதனால் என்னை

இவளுக்கு அடிமை என்று நினைக்கிறாளா? இப்பொழுது நான் என்ன செய்துவிட்டேன், இவள் என்னை விட்டு ஓடிப்போக? போகட்டுமே, இவள் இல்லை என்றால் எனக்கு வாழ்வே இல்லையா? போகட்டும்; தொலைந்து போகட்டும்! இவள் இல்லாமல் நான் வாழ்ந்து காட்டுகிறேன்" என்று தொண்டை கிழிய, கண்கள் சிவக்க, அந்த வீடே இரண்டாகும்படிக் கத்தினார்.

அந்த ஆழ்ந்த சூழ்நிலையில் அவருடைய கூக்குரல் மோதி, பயங்கரமாக எதிரொலித்தது.

அன்றிலிருந்து கர்னல் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய மாற்றம் உண்டாயிற்று என்று சொல்லலாம்.

## 5

சீதாமேல் பழிதீர்த்துக்கொள்ளுவதாக நினைத்து முதலில் அவள் புகைப்படத்தை எடுத்துக் கண் காணாமல் வைத்தார்.

அவளுக்குப் பிடித்தமான கவிதைப் புத்தகங்கள், நூல்கள் முதலியவற்றை எடுத்துத் தூர எறிந்தார்.

காலையில் ஆரம்பித்தால் இரவு நிலா தேயும் வரை குடிக்க ஆரம்பித்தார். பாதி நாட்கள் குடிபோதை தலைக்கேறி ஹாலிலும், நடக்கும் இடங்களில் எல்லாமும் வாந்தியெடுத்துத் தன்நிலை இழந்து 'தடா'லென்று விழுந்தபின்பு, சமையற்காரனும் தோட்டக்காரனுமாகத் தூக்கிக்கொண்டுபோய் அவரைப் படுக்கையில் கிடத்துவார்கள்.



புகைபிடிப்பதை விட்டிருந்த அவர் ஒரு நாளைக்கு ஐம்பது அல்லது அறுபது சிகரெட்டுகளை சங்கிலித் தொடர்போலப் பிடிக்க ஆரம்பித்தார்.

ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு சீதாவை மறக்க முயன்றாரோ - அவளுக்குப் பிடிக்காததைச் செய்து வன்மம் தீர்த்துக்கொள்ள நினைத்தாரோ - அவ்வளவுக் கவ்வளவு அவள் நினைவே அவருள் இரண்டறக் கலந்திருப்பதை அவர் உணராமலில்லை.

குடித்துவிட்டுத் தடுமாறியபடித் திரும்பினால், எதிரிலிருக்கும் கண்ணாடியில் தூய வெண்மையான புடவை அணிந்து, மென்மையான மலரைப் போல சீதா நின்றுகொண்டு வாயால் ஒன்றுமே பேசாமல், கண்களால் 'கர்னல், இது நியாயமா?' என்று வினவுவது போலத் தோன்றும்.

அவ்வளவுதான். கையிலிருந்ததை எடுத்து வீசி அந்தக் கண்ணாடியை உடைப்பார், சீதாவையே அழித்துவிட்ட திருப்தியில். ஆனால், அதே கண்ணாடி உடைந்து சிதறி அந்த துண்டங்களில் ஆயிரமாயிரம் சீதாக்கள் தெரியும்போது, 'சீதா, மை லவ்' என்று அழுதவாறே அவற்றை அள்ளி அணைப்பார். கையிலும் மேனியிலும் கண்ணாடித் துண்டுகள் குத்தி மேனியை ரணமாக்கும்.

இரவெல்லாம் தூக்கமில்லாமல் புரண்டுகொண்டிருப்பவர், காலையில் எழுந்துவரும்போது வீசும் தென்றலில் அவளுடைய மேனி சுகந்தம் - அவள் உபயோகிக்கும் சந்தனப் பவுடரின் மணம் - கலந்திருப்பதாகத் தோன்றும்.

"ஓ, சீதா! என் அன்பே..." என்று வாய்விட்டு அரற்றுவார். மறுகணமே தன் தவறை உணர்ந்தவராக, "யூ கெட் அவுட்" என்று தலைவெடிக்கக் கத்துவார்.

சீதாவை மறக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் 'யார் யாரி'டமோ செல்வார். பணத்தை வீசி எறிந்துவிட்டு, நகரிலேயே 'உயர்ந்தவளை'த் தேடிச் செல்வார். அவளுடைய வீட்டை நெருங்கி, படியேறும்போதே யாரோ தன்னை நெருக்கி மூச்சை அமுக்குகிறார்போலத் தோன்றும். அதையும் மீறிக்கொண்டு, 'அவளை' நெருங்கினால் அது 'சீதா'வின் முகமாகத்தான் மாறும். எத்தனையோ தடவை 'பளார்' என்று எதிரிலிருப்பவளை அறைந்தும் இருக்கிறார். பலன்? நாட்கள் செல்லச் செல்ல 'பைத்தியம்' என்ற பட்டத்தைக் கொடுத்ததோடு, தங்களை நெருங்க அனுமதிக்கவே 'அந்தப் பெண்கள்' மறுத்துவிட்டார்கள்.

பாவம் கர்னல், தன்னை அழித்துக்கொண்டாரே தவிரவும் - தன்னுள் விசுவரூபமெடுத்து ஒன்றாய்க் கலந்துவிட்ட சீதாவை அவரால் அழிக்க முடியவில்லை.

இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன.

அன்று அவரைப் பரிசோதித்த டாக்டர், "உங்கள் நிலைமை மிக மோசமாகிவருகிறது. உடனேயே உங்கள் தீய பழக்கங்களை மாற்றிக்கொள்கிறீர்களா; இல்லை, நாங்கள் பலாத்காரமாக மாற்ற வேண்டுமா?" என்று கேட்டுவிட்டுச் சென்றிருந்தார்.

ஏனோ தெரியவில்லை; அந்த நேரம் கர்னலுக்குத் தன் தனிமை முள்ளாய்க் குத்தியது. மது குடிக்கவோ,



புகை பிடிக்கவோ மனமே இல்லை. உடலெல்லாம் வலித்தது. மனமெல்லாம் நொந்துகிடந்தது.

படுக்கையில் புரண்டு படுத்தவர் கண்ணில், கட்டிலின் கட்டை இடுக்கில் நீட்டிக்கொண்டிருந்த ஒரு வெள்ளைத்தாள் தெரிந்தது; அதை வெளியில் இழுத்துப் பார்த்தார்.

'என் அன்பரே...' என்று தொடங்கியிருந்த சீதாவின் கடிதம்தான் அது.

அன்று ஆத்திரத்தில் வீசி எறிந்தது இங்கு கிடக்கிறது போலும்!

ஏதோ ஓர் ஆர்வம் உந்த அந்தக் கடிதத்தை மீண்டும் மெள்ளப் படிக்கலானார்! படிக்கப்படிக்க சீதாவே தன்னெதிரில் நின்றுகொண்டு பேசுவது போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. அதில் இருந்த ஒவ்வொரு வார்த்தையும், அவளுடைய உண்மையான அன்பில் - உள்ளத்தில் தோய்ந்திருந்து வெளிவருவது, முதல் முறையாக அவருக்குப் புரிந்தது.

"அன்பரே!"

அவள் அவர் கையைப் பற்றிக்கொண்டு அழைப்பது போன்ற பிரமை.

அவளைத் தன்னிலிருந்து பிரிக்க முடியாது. 'சக்தியும் சக்தனும் போல நாங்கள்' என்று அவருடைய நெஞ்சம் கூவியது.

"சீதா, என் சீதா!" - வாய்விட்டு அழைத்த கர்னல் மேஜை அறையைத் திறந்து, தூசி படிந்து கிடந்த அவளுடைய புகைப்படத்தை எடுத்து மார்போடு

தழுவிக்கொண்டு, "என் கண்ணம்மா - என் உயிரே!" என்று புலம்பினார்.

அவள் பெயரைச் சொல்லச்சொல்ல நாவெல்லாம் இனித்தது; இதயமே லேசாயிற்று.

புகைப்படத்தில் முகத்தோடு முகம் வைத்து அவளுடைய கன்னத்திலும், நெற்றியிலும், கண்களிலும், அதரத்திலும்-ஏன், முகம் பூராவும் முத்தமாரி பொழிந்தார்.

"நான் மனிதனாகிவிட்டேன், சீதா. உன் கர்னல் மனிதனாகிவிட்டான். இனி நான் மிருகமில்லையம்மா. இதைத் தெரிந்துகொள்ள வருவாயா? வருவாயா, சீதா?" என்று ஆரம்பத்தில் மெள்ளமெள்ள சொன்ன கர்னல், உணர்ச்சிவயப்பட்டு குரல் உடையக் கதறி, "சீதா, வந்துவிடம்மா. நீ இல்லாத வாழ்வு வாழ்வே இல்லை யம்மா. இதை உன் கர்னல் உணர்ந்துவிட்டான். சீதா, வா..." என்று முட்டிக்கொண்டு உள்ளம் உடைய அழுதார்; கதறினார்.

அன்றிலிருந்து மதுவை மறந்தார்; மற்ற அனைத் தையும் மறந்துவிட்டார் கர்னல்.

சீதாவின் பெயரைக்கூட தன் எதிரில் சொல்லக் கூடாது என்று ஆட்களுக்குக் கட்டளையிட்டிருந்த கர்னல், அன்று வலிய தன் ஆளை அனுப்பி, சீதா வீட்டுத் தோட்டக்காரனை அழைத்துவரச் செய்தார். அவனிடம் 'அம்மா'வைப் பற்றித் தானே பரபரக்கக் கேட்கவும் செய்தார்.

"எனக்கு அவங்க விலாசம் தெரியாதுங்களே. மாசம் பொறந்தா செலவுக்குப் பணம் இங்க பாங்குக்காரங்க



கிட்டேயிருந்து வந்திடும். மத்தபடி எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. அம்மாதான் 'நாங்க மூணு மாசத்திலே வருவோம். அதுவரை வீட்டை ஜாக்கிரதையா பார்த் துக்கோ'ன்னு சொல்லிட்டுப் போயிருக்காங்களே..." என்று நீட்டி முழக்கியபோது அவருக்கு மிகுந்த ஏமாற்ற மாக இருந்தது.

மழைக்குக் காத்திருக்கும் 'சாதக'ப் பறவை போல சீதாவின் வரவிற்காகக் காத்திருந்தார்.

இதன் நடுவில் இரண்டு மாத காலமாக அவர் செய்த செய்கைகளின் விளைவுகள் அவர் உடல் நலத்தைக் கெடுக்க ஆரம்பித்துவிட்டன.

டாக்டர்களின் ஆலோசனைபேரில் படுக்கை யிலேயே இருக்க முற்பட்டார்.

பாரதி ஒரு கவிதையில் எழுதுகிறார்:

**"எந்தன் வாயினிலே அமுதூறுதே – கண்ணம்மா**
**என்ற பேர் சொல்லும் போழ்திலே – உயிர்த்**
**தீயினிலே வளர் சோதியே – என்றன்**
**சிந்தனையே, என்றன் சித்தமே..."**

என்று.

இதை மனதாரப் புரிந்துகொண்டு, இதையே சதா அரற்றிக்கொண்டிருந்தார் கர்னல்.

அப்படியிருக்கையில்தான் அந்தக் கடிதம் - ஆம், சீதாவிடமிருந்துதான் வந்தது.

"என் அன்புக் கோயிலே,

கடந்த இரண்டரை மாதங்களாக நான் பட்ட பாடு அந்த இறைவனுக்கே தெரியும்... போதும். இனி என்னால் தாள முடியவில்லை.

நான் உங்களோடு சங்கமமாக வருகிறேன், கர்னல்.

உங்களை நினைத்த மாத்திரத்தில் பறந்து வந்துவிடத் தோன்றுகிறது. ஆனால், பாழும் இறக்கைகள் இல்லையே!

கல்கத்தாவிலிருந்து நான் வருகிற வெள்ளிக்கிழமை விமானத்தில் உங்களிடம் வருகிறேன். அத்தை ரயிலில் வருகிறாள்.

கர்னல்! நான் வந்துகொண்டேயிருக்கிறேன். தாங்கொணாத் துடிப்புடன் உங்களைச் சந்திக்கும் விநாடிக்காகக் 'காத்திருக்கிறேன்...'

உங்கள்,
சீதா."

ரத்த நாளங்களிலெல்லாம் புதிய ரத்தம் ஓடுவது போல இருந்தது கர்னலுக்கு.

சந்தோஷம் கரை காணாமல் போய் 'ஓஹோஹோ' என்று பல நாட்களுக்குப் பிறகு சிரித்தார்.

வீட்டிலுள்ள அத்தனை ஆட்களையும் அழைத்து, "அம்மா வருகிறார்கள் - இன்னும் இரண்டு நாளில். அவர்களை வரவேற்க வீடு தயாராகட்டும்" - என்று உத்தரவிட்டார்.

வாழ்வே இனித்தது கர்னலுக்கு.

ஆனால், அதேசமயம் உடல் பலவீனமடைந்து விட்டதாலோ என்னவோ இதயம் வலித்தது.



"என் சீதா வந்தால் எல்லாம் சரியாகிவிடும்" என்று நினைத்துக்கொண்டே நாட்களைக் கடத்த முயன்றார்.

வெள்ளிக்கிழமை.

சீதா மத்தியானம் விமானத்தில் வருகிறாள்.

காலையிலிருந்தே கர்னலுக்குப் படபடப்பு தாங்க வில்லை. நன்றாக 'ஷேவ்' செய்துகொண்டு, கச்சிதமாக உடை அணிந்து, கண்ணாடியில் பலதடவை சரிபார்த்துக் கொண்டார். எல்லாவற்றையும் அவசர அவசரமாகச் செய்தவர், எப்படியோ விமானக்கூடத்திற்குக் கிளம்பு வதில் தாமதித்துவிட்டார்.

டிரைவர்கூட வர வேண்டாம் என்று சொல்லிவிட்டு தானே வண்டியை எடுத்துக்கொண்டு அதிவேகமாக விமானக்கூடத்திற்குச் சென்றார்.

வண்டியை உள்ளே செலுத்தி, சரியான இடம் தேடி நிறுத்துவதற்குள் நேரம் ரொம்ப ஆகிவிட்டது.

அன்று விமானக்கூடத்தின் வெளியிலேயே சொல்ல முடியாத கூட்டம். யாராவது பிரமுகர் வருகிறாரா என்ன?

அவர் வண்டியை நிறுத்திய இடம் விமானக்கூட கட்டடத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்ததால் நடையைச் சற்றே வேகமாகப் போட்டார் கர்னல்.

'ரன்வே'யில் கல்கத்தா விமானம் வந்து நின்றுகொண் டிருந்தது. அதிலிருந்து சாமான்களை இறக்கிக்கொண் டிருப்பதையும் அவர் பார்த்தார்.

தூரத்தே தெரிந்த விமானக்கூடத்தின் படிக்கட்டு களில் விழுந்த அவர் பார்வையில்—

விழிகளில்—

ஓ! சீதா தெரிந்தாள்.

காற்றில் ஆடும் மலராக - மென்மையாய் - பெண் மையே உருவாக சீதா கூட்டத்தில் கலந்து வருவது அவருக்குத் தெரிந்தது.

"ஓ! அதோ, சீதா!"

அவர் மனம் கூச்சலிட்டது!

"சீதா - என் சீதா!" என்று அழைக்க நினைத்தார் கர்னல்.

அவ்வளவுதான்.

சந்தோஷத்தின் வெடிப்பு தாங்காமல் அவர் வாய் கோணுகிறது; விழிகள் உள்ளுக்கு இழுக்கின்றன; கை கால்கள் வலிப்பு வந்து உதைத்துக்கொள்கின்றன; 'தடா'லென்று கீழே விழுகிறார் கர்னல்.

அருகிலிந்த கார் டிரைவர்களும், டாக்ஸிக்காரர் களும், "அடடே! யாரோ விழுந்துட்டாங்க. வலிப்பு போலிருக்கு... தண்ணி கொண்டுவாங்க..." என்று கூவிக்கொண்டே ஓடிவந்து அவரைச் சூழ்ந்துகொள்ளு கிறார்கள்.

"எல்லோரும் விலகுங்கள். என் சீதா வருகிறாள்..." என்று சொல்ல நினைக்கும் கர்னலின் வாயிலிருந்து சப்தமே வராமல் - வாய் மட்டும் கோணுகிறது.

'தனக்காகக் காத்திருந்தவர் - யாருக்காகத் தான் வாழ்நாளெல்லாம் காத்திருந்தாளோ, அவர் - தன் கைக்கெட்டிய தூரத்தில் அநாதையாய் விழுந்துகிடக் கிறார்' என்பதைச் சற்றும் உணராமலே சீதா வேகமாக வெளியேறுகிறாள்.



உடனே வீடு சேர்ந்து 'தன் கர்னலைப் பார்க்க வேண்டும்!' என்ற ஆர்வம் அவளுக்கு.

லெஃப்டினண்ட் கர்னல் ராஜசேகரனின் உயிரிழந்த கண்கள், அக்கூட்டத்தினரின் கால்களிடையே தெரியும்- தன்னைத் தாண்டிக்கொண்டு ஓடும் - அந்த இரு வெண்புறா பாதங்களையே உற்று நோக்கிக்கொண்டிருக் கின்றன.

# சாந்தா ஏன் அழுகிறாள்?

## 1

கையிலுள்ள மலர்க்கொத்திலிருந்து பூவாக டுத்துத் தன் முன்னால் உள்ள பூக்கிண்ணத்தில் சகபானா' என்னும் ஜப்பானிய முறைப்படி அடுக்கிக் கொண்டிருந்தாள், சாந்தா.

நடுநடுவில் ஓர் அடி பின்னால் சென்று, தன் கை ண்ணத்தைத் தானே தலையைச் சாய்த்து சரிபார்த்து சித்துக்கொண்டாள்.

'இன்று எல்லாம் நன்றாக அமைய வேண்டும்' என்ற ண்ணம்தான் காலையிலிருந்தே அவளுக்கு. ஒரு ாதமாகக் கேட்டுக்கேட்டு எதிர்பார்த்திருந்த 'டாக்டர் ாத்' அல்லவா இன்று விருந்துக்கு வருகிறான்!

ஓ! இந்த 'நாத்'தான் அவள் கணவன் ஜானை வ்வளவு கவர்ந்துவிட்டான்! சாதாரணமாகப் பேராசிரியர் ான் ஜோன்ஸிடம் நல்ல பெயர் வாங்குவது எவ்வளவு டினம் என்பது அந்தப் பல்கலைக்கழக வட்டாரத்தில் ள்ள அனைவருக்குமே தெரிந்ததுதான். அப்படி இருக் கையில் இந்தியாவிலிருந்து பயிற்சி பெறவந்த விஞ்ஞானி ான 'டாக்டர் நாத்,' வந்த ஒரே மாதத்தில் ஜானின் திப்பைப் பெற்றுவிட்டான் என்றால், அதில் அவளுக்கு



சந்தோஷம், பெருமை இருக்காதா? இந்தியா அவளது தாயகம் அல்லவா?

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வீடு திரும்பிய ஜோன்ஸ், "சாந்தா, 'நாத்' என்று இந்தியாவிலிருந்து ஒரு 'விஞ்ஞானி' வந்திருக்கிறார். இவர் நிஜமாகவே ரொம்ப புத்திசாலியாக இருக்கிறார்" என்று புகழ்ந்துரைத்தபோது - அவளுக்குத் தன்னையே புகழ்ந்தாற்போல இருந்தது. என்னவென்று காரணம் சொல்லத் தெரியாமலேயே, சாந்தாவுக்கு அந்த 'நாத்'தை அவசியம் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் உண்டாயிற்று.

இரண்டு நாட்களுக்கு முன்னால் ஜோன்ஸ், "இந்த சனிக்கிழமை அந்த விஞ்ஞானி 'நாத்'தை நம் வீட்டுக்கு இரவு விருந்துக்கு அழைக்கலாமா?" என்று கேட்டபோது, உற்சாகத்துடன், "அவசியம் அழைத்து வாருங்கள்" என்று சம்மதித்தாள் சாந்தா.

இன்று காலையிலிருந்தே, ஒவ்வொன்றாக 'இப்படிச் செய்தால் நன்றாக இருக்குமா?' அல்லது 'அப்படிச் செய்தால் சரியா?' என்று நினைத்துநினைத்துச் செய்து கொண்டிருந்தாள் சாந்தா.

கையிலிருந்த மலர்கள் அனைத்தையும் அழகுற அடுக்கியபின் 'அந்தக் கிண்ணத்தை அறையின் எந்த இடத்தில் வைத்தால் எடுப்பாக இருக்கும்' என்று சுற்று முற்றும் பார்த்தாள். அந்த வெண்கலக் குத்துவிளக் கருகில் வைக்கலாமா? அல்லது நடராஜர் சிலைக்கருகில் வைக்கலாமா என ஒருகணம் யோசித்தவள், 'சட்' டென்று திரும்பி, சாப்பாட்டு மேஜைக்குப் பக்கத்தில் இருந்த

'ஸைட் போர்டி'ன் மேல் அதை வைத்தாள். பூக்கிண்ணத்தின் மிக அருகே நெட்டியால் செய்த தஞ்சை பெரியகோயில் மாடல் ஒன்று கண்ணாடிப் பெட்டிக்குள் மிக கம்பீரமாக உயர்ந்து நின்றது.

'ஆஹா! என்ன இருந்தாலும் நம் நாட்டுக் கலைப் பொருள்களின் அழகு அழகுதான்' என தன்னுள் வியந்தவாறே, மேஜைக்குமேல் கைளை ஊன்றிக்கொண்டு அந்த 'பெரியகோயிலின்' மீது கண்களைப் படரவிட்டாள்.

அடுக்கடுக்கான சிற்ப வேலைகளைக் கொண்ட அந்த கோபுரத்தைப் பார்த்த மாத்திரத்தில் - தான் நேரே காவேரிக் கரையில் நின்றுகொண்டு, அதன் அழகை நேருக்கு நேர் அனுபவிப்பதைப் போன்ற உணர்வைப் பெற்றாள் சாந்தா. 'உம், அதன் சுகமே தனிதான்' என்று எண்ணிய மாத்திரத்தில் அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிவந்தது. அதேசமயத்தில் அவள் மனத்தின் அடியில் அழுத்தி வைத்திருந்த பழைய நினைவுகளெல்லாம் படிப்படியாக மேலே வந்து 'நாங்களும் இந்த கோபுரம் அளவு உயர்ந்திருக்கிறோம்" என்பது போல மெல்ல எழுந்து நின்றன!

சாந்தாவுக்குத் தன் பிறந்த ஊர், கலைக்கூடமான தஞ்சை என்பதில் அளவற்ற பெருமை-அதிலும் ஐந்து ஆறுகள் ஓடும் புண்ணியத் திருவையாறு அல்லவா? பிறகு கேட்பானேன்? மேட்டுத்தெரு லட்சுமண சர்மாவின் ஒரே புத்திரியான சாந்தா, வளர்ந்த விதமே தனிதான்!

சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட அவளை சர்மா மிகமிக அருமையாக வளர்த்தார். சாந்தாவும் நினைத்தபோது பாட்டு, படிப்பு, காவேரியில் நீச்சல் என்று பொன்னி நதிபோல் தன்னிச்சையாக வளர்ந்து வந்தாள். சுபாவத்திலேயே அழகும், துடுக்குத்தனமும் இருக்கவே தன்னிகரற்று இருந்தாள்.



அதனால்தான் மாகாணத்திலேயே முதல்வளாகப் பள்ளிப்படிப்பில் தேறி, 'ஸ்காலர்ஷிப்' கிடைத்து, சென்னைக்குக் கல்லூரிப் படிப்பிற்காக வந்தபோது, சர்மா மறுப்பு ஒன்றுமே சொல்லவில்லை.

ஆனால், திருவையாறு ஊர் முழுவதும் அதே பேச்சுதான்: 'இந்த சர்மா என்ன ஆனாலும் இப்படி புத்தி கெட்டு அலைய வேண்டாம் - தாய் இல்லாத பெண்ணைக் கட்டி வளர்க்க வேண்டாமா! அவளுக்கென்ன, உலகமெல்லாம் சுற்றணும்னு சொல்லுவா. இவர் விட்றதா, பொம்மனாட்டி குழந்தைக்கு எதுக்கு இந்தப் படிப்பு? அதுவும் ஊர் விட்டு ஊர் போயி! பெற்ற மனுஷனுக்குப் புத்தி வேணும்' - இப்படித்தான்.

சர்மா இதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. சாந்தாவிடம் மாத்திரம் சொன்னார்: "அம்மா, பெத்தவனுக்கு சந்தோஷம் வரும்படி நடந்துகொள்" என்று. அவ்வளவுதான்.

விளையாட்டுப்போல் பி.எஸ்ஸி. படிப்பை முடித்துக் கொண்டு, எம்.எஸ்ஸி. முதல் ஆண்டில் சாந்தா இருக்கும் போதுதான், அவள் வாழ்க்கையில் ஒரு மகத்தான திருப்பம் உண்டாயிற்று.

ஒருநாள் கல்லூரி நூலகத்தில் அமர்ந்துகொண்டு, அமெரிக்க விஞ்ஞான வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது, அந்தக் கட்டுரையைப் பார்த்தாள். அதன் தலைப்பே அவளைக் கவர்ந்தது.

ஜான் ஜோன்ஸ் என்ற அமெரிக்கப் பேராசிரியர் 'இன்றைய உலகத்தில் ரஸாயன விஞ்ஞானம் எவ்வளவு முக்கியமான இடம் வகிக்கிறது' என்பதைப்பற்றி ரொம்ப அழகாக எழுதியிருந்தார். 'சுண்டைக்காய் படிப்பு - எம்எஸ்ஸி. முதல் ஆண்டில் இருக்கும் தனக்கே இவ்வளவு தெளிவாக, புரியும்படி எழுதியிருந்தால் - அவர் எவ்வளவு கெட்டிக்காரராக இருக்க வேண்டும்!' என்ற எண்ணம் தான் சாந்தாவுக்கு முதலில் தோன்றியது.

தன் அறைக்கு வந்தவள், 'மடமட'வென்று ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு பேராசிரியர் ஜோன்ஸுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதி, அதை அன்றைய தபாலிலேயே சேர்த்துவிட்டாள்.

அதை எழுதும்போது, 'ஒரு தலைசிறந்த மேதைக்குத் தன் பக்தியைத் தெரிவிக்கிறோம்' என்ற எண்ணம்தான் அவள் மனதில் பூரித்திருந்தது. அந்தக் கடிதத்துக்குப் பதிலையோ, அங்கீகாரத்தையோ அவள் எதிர் பார்க்கவில்லை.

பிரார்த்தனை செய்துவிட்டு, கடவுளிடம் பதிலை எதிர்பார்க்க முடியுமா? அப்படி ஒரு பக்தி முற்றிய பரவச நிலை.

ஆனால், சரியாகப் பதினைந்து நாட்கள் கழித்து கல்லூரியிலிருந்து தன் விடுதிக்குத் திரும்பியவள், தன் அறையில் 'சாந்தா' என்று எழுதப்பட்ட வெளிநாட்டு நீல உறையொன்று பேராசிரியர் ஜோன்ஸிடமிருந்து வந்திருப்பதைப் பார்த்து ஆனந்தத்தால் விக்கித்து நின்று விட்டாள். கைகள் பரபரத்தன. அவசரம் அவசரமாக உறையைக் கிழித்து உள் வாசகத்தைப் படித்தாள்.



"அன்புள்ள மிஸ் சாந்தா,

உங்கள் ரசிகத்தன்மை மிகுந்த கடிதம் கிடைத்தது எனக்கு எத்தனையோ நாடுகளிலிருந்து எத்தனையோ பேர் பாராட்டுக் கடிதங்கள் எழுதியிருந்தும், அக் கடிதங்கள் அனைத்திலும் உங்கள் கடிதம் மாத்திரம் தனித்து நின்றது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். என் கட்டுரையில் ஒரு பகுதியை 'இப்படியும் இருக்குமா?' என்று விவாதிக்கவும் செய்திருக்கிறீர்கள். என் கட்டுரை உங்களை மிகவும் கவர்ந்தது என்று எழுதியிருந்தீர்கள். தங்கள் வெளிப்படையான கடிதம் அதனைக் காட்டிலும் அதிகமாக என்னைக் கவர்ந்துவிட்டது. அடுத்த மாதம் சென்னையில் நடக்கவிருக்கும் அகில உலக விஞ்ஞானி களின் புற்றுநோய்த் தடுப்பு ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நான் உங்கள் ஊருக்கு வருகிறேன். அப்போது உங்களைச் சந்திக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

நமது சந்திப்பை மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்.

விரைவில் சந்திக்கலாம்.

ஜே. ஜோன்ஸ்"

ஒரு தரம், இரண்டு தரம், ஊஹூம்! பத்துதரம் படித்தும்கூட சாந்தாவுக்கு ஆச்சரியமும், சந்தோஷமும் தணியவில்லை. திடீரென்று ஒரு நீரூற்றைத் திறந்து விட்டாற்போல் உணர்ச்சி - மனதுக்குள்!

'தங்களைக் காண ஆவலாயிருக்கிறேன்' என்று அவள் எழுத, 'ஜோன்ஸ்' பதிலுக்கு தான் வரும் விமானத்தைக்

கூட குறிப்பிட்டு எழுதிவிட்டார். 'உங்களைப் பார்த்தவுடனேயே நான் அடையாளம் புரிந்துகொள்வேன். ஏனெனில் நீங்கள் நிச்சயமாக மற்றவர்களிலிருந்து தனித்து இருப்பீர்கள்' என்று குறும்புத்தனமாகப் பின் குறிப்பு வேறு போட்டு எழுதியிருந்தார்.

**'உ**ய்ங்' என்ற பேரிரைச்சலோடு போயிங் விமானம் மீனம்பாக்கத்தைத் தொட்டது. அழுத்தமான சிவப்பு நிறப் பட்டுப் புடைவையும், அதே நிறத்தில் ரவிக்கையும் அணிந்துகொண்டு, தலைமயிரைத் தூக்கிக் கொண்டை போட்டு அதில் ஒரு செம்பருத்திப் பூவையும் செருகியிருந்தாள், சாந்தா.

'இந்த ஜோன்ஸுக்கு ஐம்பது வயதாவது இருக்குமா? மணமானவரா? சே! என்ன, ஒரு விவரமும் தெரியவில்லையே!' என்று நினைத்தவாறே, விமானத்திலிருந்து இறங்கிக்கொண்டிருந்த ஒவ்வொருவரையும் ஊன்றிக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

'அதோ, அந்த அமெரிக்கத் தம்பதியாக இருக்குமோ?' 'இல்லை, இல்லை, இந்த உயர்ந்த மனிதராக இருக்குமோ?' என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையிலேயே, ஓ! அவனைப் பார்த்துவிட்டாள் சாந்தா.

முப்பத்தைந்து வயதில், வாட்டசாட்டமாய், தடித்த கண்ணாடியை அணிந்துகொண்டு, முன்னால் விழுந்த கற்றை மயிர்களை ஒரு கையால் அலட்சியமாக ஒதுக்கித் தள்ளிக்கொண்டு, மறுகையில் ஒரு பெரிய மலர்க் கொத்தை வைத்துக்கொண்டு - சிறிது சாய்ந்து சாய்ந்து நடந்து வந்த அவனைப் பார்த்த விநாடியிலே 'இவன்



தான் ஜோன்ஸ்' என்று புரிந்துவிட்டது. அவனையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தாள் அவள். இப்படி அப்படிப் பார்வையை ஒருகணம் ஓட்டினால்கூட அந்த விநாடி வீண் என்பதுபோல அவள் கண்கள் அவனை விட்டு அகல மறுத்தன.

"அதோ, பேராசிரியர் ஜோன்ஸ்" என்று யாரோ சொல்லுவது கேட்கவே, அவன் திரும்பினான். இரண்டு மாநாட்டு நிர்வாகிகள், கையில் பெரிய ரோஜா மாலைகளுடன் அந்த இளைஞனை நெருங்கி மாலைகளைப் போட்டு, கையைக் குலுக்கி வரவேற்புரையும் வாழ்த்தும் தெரிவித்தார்கள். சாந்தாவுக்கு அவனிடம் போய் எப்படிப் பேசுவது என்ற நினைப்பே மலைப்பாக இருந்தது.

'கால்களுக்குச் சக்தியே இல்லாமல் போய்விட்டதா?' என்று நினைத்துக்கொண்டிருக்கையிலேயே "எக்ஸ்க்யூஸ் மீ-ஒரு நிமிடம்" என்று ஜோன்ஸே அந்த நிர்வாகிகளிடம் சொல்லுவது அவளுக்குக் கேட்டது. பிறகு அவன் சாந்தாவை நோக்கி வந்தான். 'தான் யார் என்பது அவருக்கும் தெரிந்துவிட்டது. தன்னை அவர் அடையாளம் கண்டுகொண்டார்' என்று தெரிந்ததும் சாந்தாவுக்கு மேனியெல்லாம் புல்லரித்தது.

அருகில் வந்த ஜோன்ஸ், "சாந்தா, நீங்கள்... சாந்தாதானே?" என்று தயங்கித்தயங்கிக் கேட்டவாறே, தன் கையிலுள்ள மலர்க்கொத்தை அவளிடம் நீட்டினான். 'சட்'டென்று ஒரு மின்னல் 'பளீ'ரிட்டாற் போன்ற உணர்வு சாந்தாவுக்கு. 'போன ஜன்மத்தில் இவனைப் பார்த்திருக்கிறோம்' என்று உள்ளுணர்வாய் ஏதோ ஒன்று சொல்லிற்று.

"எங்கள் சென்னை உங்களை வரவேற்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது" என்று தொண்டை அடைக்க உணர்ச்சிப்பெருக்குடன் கூறியவள் - அவன் கொடுத்த மலர்க்கொத்தை மனம் பூரிக்க வாங்கிக் கொண்டாள்.

"சென்னை மட்டும்தானா?" என்றான் ஜோன்ஸ்.

"ஏன், நானும்தான்" என்ற சொல்லுடன் அவள் முகம் நாணிச் சிவந்தது.

ஒரு பக்கமாகத் தலையைச் சாய்த்து சாந்தாவைப் பார்த்து, "ஆ! நான் நினைத்தது போலவே நீங்கள் ரொம்ப அழகாக இருக்கிறீர்கள்!" என்று சொல்லிவிட்டு, மொட்டு விரித்தாற் போல - பன்னீர் தெளித்தாற் போல மெதுவாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பில் தன்னையே இழந்தாள், சாந்தா.

## 2

ஜோன்ஸின் பார்வையில் தன்னை இழந்த உணர்ச்சிமயமான விநாடியில், தான் ஒரு பொருள் பொதிந்த வாழ்க்கைக்காகப் புதிதாகப் பிறந்திருப்பதாக ஓர் இன்பப் பிரமை ஏற்பட்டது சாந்தாவுக்கு.

அவனுடைய காந்தசக்தி மிக்கக் கண்கள் அவளையும் அவளுடைய வாழ்க்கையையும் மின்சார வேகத்துடன் தம்மிடம் வசிகரித்தன.

அன்றுமுதல் அவனைப் பார்க்கும்போது, அவனுடன் பேசும்போது, அவன் மாநாட்டில் அறிவுச்சுடராக



மேடைமீது நின்று விவாதிக்கும் போது, அவளை அறியாமலேயே ஒரு மோன நிலை அவளை ஆட்கொண்டதை அவள் உணர்ந்தாள்.

ஒவ்வொருநாள் இரவும் நிகழ்ச்சிகளெல்லாம் முடிந்த பிறகு, ஜோன்ஸ் அவளை ஹாஸ்டலில் இறக்கிவிட்டு, "குட்நைட், சாந்தா" என்று ரகசியம் பேசுவது போலச் சொல்லி, திரும்பவும் தான் தங்கியிருக்கும் 'கன்னிமாரா' ஓட்டலுக்குச் செல்லுகையில் சாந்தா வுக்குத் திடீரென்று தனிமை உறுத்துகிறார்போலத் தோன்றும். பதினைந்து நாட்கள் நடந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தபின் மேலும் பதினைந்து நாட்கள் சென்னையில் தான் தங்கப்போவதாக ஜோன்ஸ் சொன்னபோது, அவளுக்குத் தான் எத்தனை சந்தோஷமாக இருந்தது!

காந்தி மண்டபம், மெரினா கடற்கரை, கபாலீஸ்வரர் கோயில் என்று ஒவ்வோர் இடமாக ஜோன்ஸை அழைத்துச் சென்று ஆர்வத்துடன் ஒவ்வொன்றாக அவனுக்கு விளக்குவாள் சாந்தா. விரிவாகக் கண்ணகியின் கதையை, அல்லது 'அர்த்தநாரீ' சிலையின் விசேஷத்தைக் கண்ணில் உற்சாகம் ததும்ப சொல்லிக்கொண்டிருக்கையிலேயே 'சட்'டென்று திரும்பிப் பார்த்தால், ஜோன்ஸ் அவளையே பார்த்துக்கொண்டிருப்பான். கன்னம் சிவக்க, பாதியில் சொன்னதையே திருப்பித்திருப்பிச் சொல்லுவாள் சாந்தா.

அன்றும் அப்படித்தான்-பௌர்ணமி அன்று மஹாபலிபுரம் போய்விட்டுத் திரும்புகையில் அவன், தியாகராஜரின் 'நன்னுபாலிம்ப' பாட்டை மோஹன ராகத்தில், மிக அழகாக மெல்லிய குரலில் பாடிக்கொண்டுவந்தான். திடீரென்று அவன் கேட்டான்: "சாந்தா! நீங்கள் பாடுவது

எனக்குப் புரியாவிட்டாலும் என்னவோ உணர்ச்சிமய மானது என்று மட்டும் புரிகிறது. நீங்கள் என்ன பாடினீர்கள்? அதை விளக்க முடியுமா?' என்று.

ஒரே சந்தோஷம் சாந்தாவுக்கு. "ராமா! என்னைக் காப்பதற்காக நீ நடந்து வந்தாயா?" என்று விளக்கிச் சொல்லும்போது அவளுக்குத் தொண்டையை அடைத்தது. 'தன்னை ஆட்கொள்வதற்காக அவன் வெளிநாட்டிலிருந்து பறந்து வந்தானா?' என்ற கேள்வி அவள் உள்ளத்தில் வியாபித்து நிறைந்து நின்றது.

என்ன தோன்றியதோ ஜோன்ஸுக்கு, டிரைவரிடம் வண்டியை ஓரமாக நிறுத்தச் சொன்னான். பிறகு சாந்தாவைப் பார்த்து, "இந்த நிலவில் சிறிது உங்க ளுடன் உலாவ வேண்டும்போல இருக்கிறது, வருகிறீர் களா?" என்றான்.

சிறிது தூரம் நடந்தவுடன், "சாந்தா, நீங்கள் மற்றவர் களிடமிருந்து தனித்து நிற்கிறீர்கள் என்று ஏன் அடிக்கடி சொல்கிறேன் தெரியுமா? உங்களிடம் உணர்ச்சி பூர்வமான ரசிகத்தன்மை இருக்கிறது! சாந்தா, நீங்கள் ஒன்றைச் செய்தாலும், பார்த்தாலும், சொன்னாலும் அத்துடன் ஒன்றிவிடுகிறீர்கள் என்பது தெரிகிறது. கண்கள் 'பளபள'வென்று ஒளிவிடும்போது எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்!" என்று மெதுவாகக் கேட்டவன், சிறிது பேசாமல் இருந்தான்.

பிறகு, "நான், ரொம்ப யோசித்துவிட்டுத்தான் இப்பொழுது உங்களை ஒன்று கேட்கப்போகிறேன். நான் கேட்பது பிடிக்கவில்லை என்றால், தயவுசெய்து அதை நீங்கள் மறந்துவிடுங்கள்!" என்றவன், தன் இரு



கைகளாலும் சாந்தாவின் கரங்களைப் பிடித்துக் கொண் டான். கண்களை நேருக்கு நேர் பார்த்து - "சாந்தா! என்னைத் திருமணம் செய்துகொள்வீர்களா? ஓ! ஐ லவ் யூ வித் ஆல் மை ஹார்ட்" என்று நாத் தழுதழுக்கக் கூறினான்.

ஸ்தம்பித்து நின்றாள் சாந்தா.

அதன்பிறகு எல்லாமே ரொம்ப வேகமாக நடந்து விட்டன. சாந்தாவின் ஹாஸ்டல் அறையிலுள்ள 'துர்கை'யின் படத்திற்கு எதிரில் சுடர் சிந்தும் குத்து விளக்கின் முன்னால் நின்று, சாந்தா சொன்னபடி அவள் தலையில் கட்டு மல்லிகையை வைத்து, கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவித்து, அதோடு தன் விருப்பப் படி விரலில் ஒரு மோதிரத்தையும் அணிவித்தான் ஜோன்ஸ்.

சுவாமி படத்திற்கு அருகில் அவளை நிற்க வைத்து நமஸ்காரம் செய்து எழுந்த சாந்தாவுக்கு மனமெல்லாம் என்னவோ செய்தது. சந்தோஷமா, அல்லது 'அப்பா வுக்குப் பிடிக்காததைச் செய்துவிட்டோமே' என்ற குற்ற உணர்ச்சியா என்று அவளுக்கே புரியவில்லை.

ஆனால், அப்பொழுது ஜோன்ஸ் அவளை அப்படியே குழந்தையைப் போல அணைத்துக்கொண்டு காதுக்குள், "ஓ! சாந்தா, நீ என் மனைவி - சாந்தா, நீ என் மனைவி!" என்று குரல் மங்கச் சொல்லி இதழ்களோடு இதழ்களைப் பதித்ததும், தன்னை மறந்து அவன்மேல் சாய்ந்தாள்.

'தந்தையிடம்கூட ஒரு வார்த்தை கேட்காமல் எப்படித் தன்னால் திருமணம் செய்துகொள்ள முடிந்தது? எக்காரணத்தாலும், யார் குறுக்கிட்டிலும் அவரை நான்

இழந்துவிடக்கூடாது என்ற முன்ஜாக்கிரதையான வேகமா? அவன் அருகாமை தந்த மயக்கமா?' - என்ன வென்று இன்றும் புரியவில்லை சாந்தாவுக்கு.

திருமணமான மறுநாள் ஒரு கடிதம் போட்டுவிட்டு, இரண்டுநாள் கழித்து அவனும், அவளுமாகக் காரில் அப்பாவைப் பார்க்கச் சென்றார்கள். வண்டி, மேட்டுத் தெருவில் நுழைந்ததுமே அவளுக்குத் தெரிந்துவிட்டது; தன் சமாசாரம் ஊர் முழுக்கப் பரவிவிட்டதுபற்றி. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் இரண்டுபேராகவும், நான்கு பேராகவும் எல்லோரும் வந்து நின்றுகொண்டார்கள், 'என்ன நடக்கப் போகிறது, பார்க்கலாம்!' என்பது போல.

வண்டி சர்மா வீட்டுமுன் நின்றதும் "நீ மட்டும் முதலில் உள்ளே போவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான் ஜோன்ஸ்.

சாந்தாவுக்குக் கை காலெல்லாம் 'வெடவெட' வென்று உதறியது. வண்டிக் கதவைத் திறந்துகொண்டு அவள் கீழே இறங்குவதற்கும், 'தடக்'கென்று வீட்டு வாசற் கதவைத் திறந்துகொண்டு சர்மா வெளியே வருவ தற்கும் சரியாக இருந்தது.

அப்பா முகத்தில் கோபம் இல்லை. ஆனாலும் வருத்தம்; ஒரே வேதனை! முகத்தில் துன்பக் கோடுகள் ஓடி, சவக்களையை உண்டாக்கியிருந்தன. தூங்காமல், சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்ததைப் போல் முகம் 'ஜிவு ஜிவு' என்றிருந்தது.

ஆயினும் கம்பீரமாக நின்றுகொண்டு சாந்தாவைப் பார்த்து, "உள்ளே வராதேடீ-அங்கேயே நில் - எப்போ



பெத்தவனை மதிக்காம, அவன் மூஞ்சிலே கரியைப் பூசினையோ அப்புறம் அவன் உறவு மட்டும் உனக்கு எதுக்கு? கொஞ்சம் நஞ்சம் உயிருன்னு இந்தப் பாழாப் போன ஒடம்புல ஒண்ணு ஒட்டிண்டு இருக்கே, அதையும் போக வெச்சுடலாம்னு நினைச்சுண்டு இங்கே வந்தியா? என்ன யோக்கியதையிலே இங்கே வந்தே? வராதே - ஒழிஞ்சு போய்விடு" என்று ஆவேசத்தோடு கத்தினார். பிறகு ஒருவிநாடி தாமதித்து-"அடீ, மகளோட கடமை யைத்தான் நீ செய்யலைன்னாலும், தகப்பன்கற கடமை யிலே ஒண்ணே ஒண்ணு மட்டும் ஒனக்கு நான் சொல் றேன். ஆனானப்பட்ட கண்வ மகரிஷியே, சகுந்தலை தன் கணவன் வீட்டுக்குச் செல்லும்போது புத்தி சொன்னாராம். அதனால் என் கடமைக்காக நானும் ஒனக்குச் சொல்லறேன், சாந்தா! பெத்தவனுக்குத்தான் மதிப்பு வரும்படி நீ நடந்துக்கலை. உன் நடத்தையால் இந்த ஊரே அவனைப் பார்த்துச் சிரிக்கும்படி பண்ணிட்டே; அது போகட்டும். இப்போ நீ வெளி நாட்டுக்கு, நம்ப பாரத நாட்டுப் பொண்ணா போறே! அங்கே போயாவது நம்ப பெருமை ஓங்கறபடி நடந்துக் கோடீ! இல்லைன்னா நம்ப குலம், நம்ப நாடு, நம்ப ஜனங்க எல்லாரையும் அந்த ஊர் மனுஷா தாழ்வா நினைச்சுடுவா! நம்ப தேசத்து மானமே உன்னை மாதிரிப் பெண்கள் கையிலேதான் இருக்கு! அதைப் புரிஞ்சு நடந்துக்கோ! அவ்வளவுதான்! இனிமே இங்கே நிக்காதே. போயிடு! போயிடு!" என்று கண்களில் நீர் வடிய, ஒரு கையால் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு கத்தினவர், வாயில் துண்டை அடைத்துக்கொண்டு உள்ளே போய் விட்டார்.

இன்றைக்கும்கூட இரவில் என்றைக்காவது தூக்கத்திலிருந்து விழிப்பு வந்துவிடும் - அப்பொழுது அப்பா கண்ணில் நீர் வடிய அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு நிற்பதுபோல் தோன்றும் சாந்தாவுக்கு.

ஜோன்ஸ் அவளை எவ்வளவுதான் நன்றாக, ஆசையுடன் வைத்துக்கொண்டிருந்தாலும், அவளையும் அறியாமல் 'அப்பாவை ஏமாற்றிவிட்டோமே!' என்ற எண்ணம் அவ்வப்போது தோன்றி, மனதை வண்டு குடைவதுபோல் குடையும்.

'ஓ'வென்று அலறி அழுதாலாவது மனவேதனை குறையுமா? என்று நினைப்பாள் சாந்தா. ஆனால் பாழும் கண்ணில் ஒரு சொட்டு நீர்கூட வராது-வரவே வராது! தனக்குள்ளேயே குமுறிக்கொண்டு ஜடம்போல சில நிமிடங்கள் இருப்பாள். பிறகு சரியாகிவிடும்.

சில நேரங்களில் அவளையும் மீறி ஓர் ஏக்கம் கண்ணில் பீறிடும். அது அப்பாவைப் பார்க்க வேண்டும் என்ற வேகத்தாலா, காவேரிக் கரையில் தியாகராஜரின் சமாதியில் நின்றுகொண்டு 'க்ஷீர சாகரா'வைப் பாட வேண்டும் என்ற நினைப்பாலா, அல்லது ஆசைதீர 'அடி சக்கை' என்று தமிழில் வாய்விட்டுச் சொல்லிக் கொண்டு திரிய வேண்டும் என்ற ஏக்கத்தாலா? அவளுக்கே தெரியவில்லை.

'டிங் டாங்' என்று வாசற்புறத்தில் அழைப்பு மணி ஒலித்ததைக் கேட்டு, திரும்பவும் தன் நிலைக்கு வந்தாள் சாந்தா. 'ஓ! அவர்கள் வந்துவிட்டார்கள் போலிருக்கிறதே!' என்று நினைத்தவுடனேயே அவளுள் ஒரு பரபரப்பு.



புடவைத் தலைப்பைச் சரி செய்துகொண்டவள், நான்கு மட்டிப்பால் ஊதுவத்திகளைக் கொளுத்தி நடராஜர் சிலைக்கு முன்னால் வைத்துவிட்டு, வரவேற்பறைக்குள் நுழைந்தாள்.

வந்திருந்த விருந்தாளிக்கும் தனக்கும் பானம் கலந்து கொண்டிருந்த ஜோன்ஸ், அவளைப் பார்த்துவிட்டு, "சாந்தா, இவர்தான் டாக்டர் நாத் - இவள்தான் என் மனைவி சாந்தா, உங்கள் ஊரைச் சேர்ந்தவள்" என்று பரஸ்பரம் அறிமுகப்படுத்தினான்.

"வர வேண்டும்" என்று சொல்லியவாறே, கைகளைக் கூப்பியவள், நிமிர்ந்து 'நாத்'தை நோக்கினாள். மின்சாரத்தால் தாக்குண்டவள் போல் பிரமித்த சாந்தா, "நீ... நீ... விசு இல்லை? ஏய் விசு! நீதானே" என்று கூவுவதற்கும், "சாந்தா... நீங்கள்... நீ... ஓ மை காட்! நீ நம்ப சாந்தாவா?" என்று அவன் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

"உங்கள் இருவருக்கும் முன்பே ஒருவரை ஒருவர் தெரியுமா?" என்று வியந்த ஜான், "ஓ! இது எவ்வளவு சின்ன உலகம்!" என்று வியந்தான்.

மடைதிறந்தாற்போல் பேசினாள் சாந்தா. காற்றைத் தன்னுள் அடக்கிக்கொண்டு உப்பியிருக்கும் பலூன் ஒரு சின்ன ஊசியை ஸ்பரிசித்தவுடன் 'டமார்' என்று வெடிப்பதைப் போலப் பேசினாள்.

"யாரோ - 'நாத்' என்று பார்த்தால், நீயா? என்ன விசு, விசுவநாதன் என்ற பெயரை எப்போது 'நாத்' என்று மாற்றிக்கொண்டாய்? திருவையாற்றிலிருந்து

டெல்லிக்கு மேல்படிப்புக்காகப் போனவன் - இங்கு எப்படி வந்தாய்?" என்று கேள்விமேல் கேள்வியாக ஆசை தீரத் தமிழில் கேட்டாள் சாந்தா.

தூங்கி எழுந்தவுடன் பச்சைத் தண்ணீரில் முகம் அலம்பிக்கொண்டால் ஒரு புத்துணர்வு வருமே, அப்படித்தான் இருந்தது சாந்தாவுக்கு.

சிறு குழந்தையைப் போல் அவள் பேசியதைக் கேட்டு உரக்கச் சிரித்தான் விசு. "போதுமா? இன்னும் ஏதாவது இருக்கிறதா? மேட்டுத்தெரு சர்மாவின் பெண் 'மிஸஸ் ஜோன்ஸ்' ஆக மாறலாம் என்றால் நான், 'நாத்' ஆக மாறக்கூடாதா? இல்லை, 'விஸிடிங் ஸயன்டிஸ்ட்'டாக அமெரிக்காவுக்கு வரக்கூடாதா? - உம்?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் சிரித்தான்.

அவர்கள் இருவரும் உற்சாகத்துடன் மாறிமாறிப் பேசியதையும் சிரிப்பதையும் கேட்ட ஜோன்ஸுக்கு, ஒன்றும் புரியாவிட்டாலும், ஒன்று புரிந்தது - அதுதான் சாந்தாவின் வெளிப்படையான சந்தோஷம்.

பொங்கிப்பொங்கி வெளிவந்த அவளது சிரிப்பைக் கேட்டு மனம் குதூகலித்தவனாக ஒரு நாற்காலியில் அமைதியுடன் 'அவர்கள் பேசட்டும்' என்று உட்கார்ந்து விட்டான்.

"ஜோன்ஸ், இவனை யாரென்று நினைத்தீர்கள்? இவன் விசு-'நாத்' இல்லை. இவன் என் பால்ய வயது நண்பன். திருவையாற்றில் எங்கள் பக்கத்து வீட்டுக்கார னாக பத்து வருடங்கள் இருந்திருக்கிறானாக்கும்!" என்று கூறியவள் அப்படியே பழைய நினைவுகளுக்குள் மூழ்கிவிட்டாற்போல் பேசாமல் அமர்ந்துவிட்டாள்.



அதன்பிறகு, சாந்தாவின் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

## 3

**சா**ந்தாவின் ஏக்கத்தைப் போக்க ஒரு வழி கிடைத்தது என்று மகிழ்ந்த ஜோன்ஸ், கூடுமான வரையில் அவளையும் விசுவையும் சந்திக்க வைத்தான்.

வாரத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை என்று வீட்டுக்கு வர ஆரம்பித்த விசு, இரண்டு மாதங்கள் ஆவதற்குள் தினமும் வர ஆரம்பித்தான். சாந்தாவும் ஒருநாள் அவன் வராவிட்டாலும் மறுநாள் அவனுக்குப் போன் செய்து, "ஏன் வரவில்லை, விசு? நேத்து உனக்காக வத்தக்குழம்பு பண்ணியிருந்தேனே!" என்பாள்.

மணிக்கணக்கில் இருவரும் பேசுவார்கள், பேசு வார்கள், அப்படிப் பேசுவார்கள். "நீ காவேரி படித் துறையில் சறுக்கி விழுந்து, கால் வீங்கிக்கொண்டு, நடக்க முடியாமல் நொண்டிக்கொண்டிருந்தாயே - நான் உன்னிடம், 'நொண்டி நொண்டி நொடிச்சுக்கோ, வெல்லம் தரேன் கடிச்சுக்கோ' - என்பேனே, ஞாபகம் இருக்கா, சாந்தூ?" என்பான் அவன்.

"ஏன், நீ மட்டும் என்னவாம்? எதிர்வீட்டு கிட்டு வுடன் நீச்சலில் 'காவேரியைக் கடக்கறேன்'னு பந்தயம் போட்டுட்டு பாதியில் நீந்த முடியாமல் தண்ணீரைக் குடித்து முழுகப் பார்த்தாயே - பிறகு, யாரோ உன்னை

இழுத்துக்கொண்டு வந்தார்களே - அது உனக்கு ஞாபகம் இருக்கா?" என்பாள் சாந்தா பதிலுக்கு.

இருவரும் பேசுவதைக் கேட்டுக்கொண்டு மௌன மாக அமர்ந்திருப்பான் ஜோன்ஸ். அவ்வப்போது அவர்கள் சிரிக்கும்போது அவன் முகத்திலும் ஒரு சின்னப் புன்னகை தோன்றும், அவர்கள் பேசுவதை அனுபவிப்பதைப் போல.

ஆரம்பத்தில், தானும் விசுவும் தமிழில் பேசுவதை யெல்லாம் ஜோன்ஸுக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லுவாள். பிறகு நாட்கள் செல்லச் செல்ல அதுவும் குறைந்தது. 'அடி சக்கை' 'வெளுத்துட் டான்' 'பலே ஜோர்' போன்ற வார்த்தைகளையெல்லாம் எப்படி மொழிபெயர்ப்பது என்று புரியாமல் அவள் விழிக்கும்போது, 'ஓஹோ ஓஹோ' என்று வயிறு குலுங்கச் சிரிப்பான் விசு!

இப்பொழுதெல்லாம் ஒரு முக்கியமான ஆராய்ச்சி யில் - புற்றுநோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருப்பதால் ஜோன்ஸ் வீட்டுக்கு வரவே அதிக நேரமாயிற்று. தனக்குத் தாமதமாகும்போல் இருந்தால், அவனே விசுவிற்குப் போன் செய்து "சாந்தா தனியாக இருப்பாள், விசு. உன்னால் அங்கு போய் அவளுக்குத் துணையாக இருக்க முடியுமா?" என்று கேட்பான்.

ஜோன்ஸ் வீட்டுக்குள் நுழையும்போதே உள்ளிருந்து வெளிவரும் பாட்டுத்தான் அவனை எதிர்கொண்டு அழைக்கும். முகத்தில் ஓர் அழகான புன்னகை தோன்றும் - அவ்வளவுதான்.



"அடுத்த வாரம் பல்கலைக்கழகத்தில் 'இந்தியர்கள் இரவு' கொண்டாடப் போகிறோம். அதில் நீ பாடுவாய் என்று பேர் கொடுத்துவிட்டேன்" என்று சொன்னவாறே அன்றைக்கு வீட்டிற்குள் நுழைந்தான் விசு.

"என்னது? நான் மேடையிலே பாடறதா? ஊஹூம் என்னால் முடியாது, விசு. கடந்த இரண்டு வருடங்களா ஜோன்ஸ்கூட சொல்லிப் பார்த்தார் - நான் கண்டி பாக முடியாதுன்னு சொல்லிட்டேன். அம்மம்மா என்னாலே முடியாது!" என்று பலமாகத் தலை ஆட்டினாள் சாந்தா.

"சாந்தா!" என்று நிதானமாக அழைத்த விசு, "ஹ மானுக்குத் தன் திறமை தெரியாதாம் - பிறர் எடுத்து சொன்னால்தான் புரியுமாம். அதுபோலத்தான். மேடை ஏறிப் பாடினால் எவ்வளவு நன்றாக இருக்கு தெரியுமா? தியாகராஜரும், தீக்ஷிதரும், புரந்தரதாஸ இந்த நாட்டில் கொஞ்சமாவது பிரபலமானால், அதி துளி பெருமை உன்னோடதாகவும் இருக்காதா, சாந்தா என்று கெஞ்சிக் கேட்டவுடன் சாந்தாவுக்கு என்னமோ போல் ஆகிவிட்டது.

கொஞ்சம் தன்னம்பிக்கை வந்து 'சரி' என்று சொல் விட்டாள்.

அந்த இரவுதான் எத்தனை நன்றாக அமை விட்டது!

இழையஇழைய ஜரிகை வேலைப்பாடு செ புடவை அணிந்து, காதில் ஜிமிக்கிகள் குதித்தா தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து, சாந்தா எத்த கம்பீரமாகப் பாடினாள்! அங்கிருந்த அனைவரு

"புரொபஸர் ஜோன்ஸ், இத்தனை நாட்கள் உங்கள் மனைவி இந்த இசையை எல்லாம் எங்கு ஒளித்து வைத்திருந்தார்கள்? நீங்கள் மாத்திரம்தான் அனுபவிக்க வேண்டும் என்று வெளியில் வராமல் தடுத்து வைத்திருந்தீர்களா?" என்று கேலியாகக் கேட்டபோது, ஜோன்ஸுக்கு ஒரே பெருமை - சாந்தாவை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டான்.

கோலாகலமாக இரவு விருந்து 'நடந்துகொண்டிருந்தது. அப்பொழுதுதான் பரிசோதனை அறையிலிருந்து ஒரு விஞ்ஞானி வந்து, ஆராய்ச்சியில் ஏதோ மாறுதல் இருப்பதால் 'உடனே வர வேண்டும்' என்று ஜோன்ஸை அழைத்தார்.

"சாந்தாவை நீ வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடு" என்று விசுவிடம் சொன்ன ஜோன்ஸ், "ஸாரி, டார்லிங்-நான் அவசியம் போக வேண்டும்" என்று சாந்தாவிடம் சொல்லிவிட்டுச் சென்றான். நினைத்ததற்கு மேல் இனிதாக எல்லாம் நடந்து உள்ளமெல்லாம் மகிழ்ச்சி பொங்க, கார் சீட்டில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் சாந்தா.

"என்ன சாந்தா, என்ன யோசனை?" என்று விசு கேட்கவே அவள் அவனைப் பார்த்தாள். வண்டியை ஓட்டியவாறே அவளை உற்று நோக்கினான் விசு. "நீ இன்று ரொம்ப அழகாகப் பாடினாய் என்பதைச் சொல்வதற்கு முன்னால் நீ இன்று ரொம்ப அழகா இருக்கிறாய் என்று சொல்லத் தோன்றுகிறது, சாந்தா" என்றான்.

சாந்தா பதில் சொல்லாமல் அவனையே பார்த்தாள். திடீரென்று அவளுக்குத் தானும், விசுவும் சிறுவயது முதல் ஒன்றாக இருந்தது, விளையாடியது எல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தன.



மற்றொரு சந்தர்ப்பத்தில், மற்றொரு மனிதன் தன் அழகை இப்படிப் புகழ்ந்திருந்தால், 'கல்யாணமான பெண்ணின் அழகைப் புகழ்வது அநாகரிகம் என்று உனக்குத் தெரியாதா?' என்று சீறி விழுந்திருப்பாள் சாந்தா. ஆனால் அன்று அவளிருந்த உற்சாக மனநிலையாலும், விசுவின்பால் அவள் கொண்டிருந்த களங்கமற்ற நட்பாலும் அவனுடைய வார்த்தைகளைப் பெரிதுபடுத்தத் தோன்றவில்லை அவளுக்கு.

"என் அழகு கிடக்கட்டும், விசு! நான் இன்றைக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறேன். அமெரிக்காவிலிருந்து பாடியது போலவே தோணலை. நம் திருவையாற்றிலிருந்து பாடியது போலவே இருந்தது. இந்த மகிழ்ச்சி, இன்னிக்கு எனக்குக் கிடைத்த புகழ்– எல்லாம் உன்னால்தான், விசு! எனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை!" என்றாள்.

கொஞ்ச நேரம் பேசாமல் இருந்த விசு, "சாந்தா, என்னமோ தெரியலை - எனக்கு இன்னிக்கு இன்னும் உன் பாட்டைக் கேட்டுக்கொண்டே இருக்கணும் போல இருக்கு. அதனால் வீட்டுக்குப் போனதும் பாரதியார் பாட்டு இரண்டு பாடிக் காட்டுவாயா?" என்று கேட்டதும், "நிச்சயமாக" என்றாள் சாந்தா.

'நல்லதோர் வீணை செய்தே - அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ' என்ற பாட்டை ராகமாலிகையில் பாடி, தசையினைத் தீசுடினும் - சிவசக்தியைப் பாடும்நல் அகங் கேட்டேன்' என்னும் வரியை நாதநாமக்கிரியை ராகத்தில் விஸ்தாரமாக நிரவல் செய்தாள். அந்த ஆழ்ந்த சூழ்நிலையில் அவள் குரல் 'கணீ'ரென்று எழும்பி, அந்த வீடு பூராவும் ஒலித்து எதிரொலித்தது.

பாட்டை முடித்து மீண்டும் முதல் வரிக்கே வந்து இழுத்து நிறுத்தினாள் சாந்தா. அவளுக்கே தான் அன்று மிக நன்றாக அனுபவித்துப் பாடியது புரிந்தது.

கண்களை மூடிக்கொண்டு கேட்டுக்கொண்டிருந்த விசு, பாட்டு முடிந்ததும் மெதுவாகக் கண்களைத் திறந்து சாந்தாவை நோக்கினான். அவளும் மெய்மறந்து உட்கார்ந்திருப்பது அவனுக்குப் புரிந்தது.

மெல்ல எழுந்து அவளருகில் சென்று, "சாந்தா... சாந்தா! நீ இப்போ பாடினாயே, அந்தப் பாட்டு உனக்கு ரொம்பப் பொருந்தும்... சாந்தா... நீ ஏம்மா குடத்து விளக்கா இருக்க ஆசைப்படறே? நீ மாத்திரம் நம்ப நாட்டிலே இருந்திருந்தால், உன் இசையால் நீ எவ்வளவு பிரமாதமாகப் பிரகாசிப்பாய் தெரியுமா?" என்றான்.

"வந்துவிடு, சாந்தா - என்னோடு நம்ப ஊருக்கே திரும்ப வந்துவிடு! இது உனக்கு ஏற்ற இடமல்ல, சாந்தா. அதனால் இந்தியாவுக்குப் போய்விடலாம். வந்துவிடு, சாந்தா..." என்று உணர்ச்சியின் நெகிழ்ச்சியும், உருக்கமும் பிணைய அவளுடைய காதுகளில் ஓதினான்.

பித்தேறியவள் போல் கிறங்கினாள் சாந்தா.

"என் மனதில் ஏற்பட்ட ஆசையைத் தெளிவாகச் சொல்கிறேன். நீ ஒரு கலாதேவி, இசைமேதை. உன் கலைத்திறன் நீ பிறந்த மண்ணில் தளிர்விட்டுப் பிரகாசிக்க வேண்டியது. காட்டில் நிலவு எரிவது போல் உன் திறமை, அதை உணராதவர்கள் மத்தியில் அழிந்து கொண்டிருக்கிறது. நீ உன்னையும் உன் கலையையும் நம் புனிதத் தமிழ்நாட்டுக்கு அர்ப்பணித்து, அவசிய மானால் நீ புதிதாக ஒரு வாழ்க்கையைத் தொடங்க



வேண்டும் என்று என் மனம் தவிக்கிறது. முழுக்க முழுக்க நீ தமிழ்நாட்டுக்கே சொந்தமானவளாக இருக்க வேண்டும் என்ற ஆவலில்தான் கூறுகிறேன். நான் சொல் வது தப்பாக இருந்தால் மன்னித்துக்கொள். ஆனால், அதைப்பற்றி மட்டும் நன்றாகச் சிந்தித்துப்பார்! தெளிவும் உண்டாகும்; வழியும் புலப்படும்" என்று குரல் கம்மக் கூறியவன், 'மடமட'வென்று வெளியே போய்விட்டான்.

படுக்கையில் புரண்டுபுரண்டு படுத்தாள் சாந்தா. என்ன முயன்றும் தூக்கம் அவளை ஆட்கொள்ள மறுத்தது. கண்களை மூடினால் விசுவின் முகம்தான் எதிரில் வந்தது. அவன் கூறிய 'வந்துவிடு, சாந்தா' என்ற சொற்கள் திரும்பத்திரும்பக் காதில் ஒலித்தன.

'நீ முழுக்கமுழுக்கத் தமிழ்நாட்டுக்கே சொந்தமான வளாக இருக்க வேண்டும்' என்ற வார்த்தைகள் கடல் அலைகளைப் போல அவள் காதில் வந்து மோதின.

படுக்கை பிடிக்காமல் எழுந்து ஜன்னல் அருகே வந்து திரைச்சீலையை ஒதுக்கிவிட்டு வெளியில் பார்த் தாள்; வெள்ளை வெளேரென்ற பனி, சப்தமில்லாமல் வெளியே கொட்டிக்கொண்டிருந்தது. யாரோ மேலே நின்றுகொண்டு மூட்டை மூட்டையாகப் பஞ்சுப் பொதி களைப் பிரித்துக் கொட்டுவது போலத் தோன்றியது சாந்தாவுக்கு. எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத அந்தக் காட்சியில்கூட அன்று அவள் மனம் லயிக்க வில்லை.

லேசான அந்தப் பனி பறந்து விழுவதைப் போல தன் மனச்சுமையும் பறந்து மனம் லேசாகிவிடாதா என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

'வந்துவிடு, சாந்தா... வந்துவிடு.'

ஓ! இந்த வார்த்தைகளுக்குத்தான் எவ்வளவு வேகம் இருக்கிறது! 'தம்... தம்' என்று தூரத்தில் கேட்கும் பறைச் சப்தம், கிட்டே வந்து நம்மைக் கடந்து செல்லும்போது அந்த இடத்தையே அதிரச் செய்துகொண்டு போகுமே. அதைப் போல விசுவின் வார்த்தைகளும் நேரமாக ஆக, சாந்தாவின் மனதின் ஒவ்வோர் அணுவிலும் புகுந்துகொண்டு, இதயத்துடிப்போடு கலந்து ஒலிப்பதைப் போல் அவளுக்குத் தோன்றியது.

கண்களை மூடிக்கொண்டாள்.

## 4

**சா**ந்தாவின் மனக்கண்ணில் பச்சைப் பசேலென்ற நெற்பயிர்கள் பாய்விரித்தாற்போல கண்ணுக்கெட்டிய வரை தெரிந்தது. வரிசைவரிசையாக இருந்த தென்னை, வாழை மரங்கள் எல்லாம் காற்றில் அழகாக ஆடி, தம் இலைகளை அசைத்து 'வா, சாந்தா வா' என்று அழைப்பது போல இருந்தது. 'ஓ'வென்று அலறி அழவேண்டும் போல இருந்தது சாந்தாவுக்கு.

'சட்'டென்று திரும்பி, தூங்கிக்கொண்டிருந்த ஜோன்ஸின் முகத்தைப் பார்த்தாள். அவனைக் கண்ட மாத்திரத்தில் அவள் நெஞ்சை என்னவோ செய்தது. 'ஐயோ! இந்த வெள்ளை மனதுக் குழந்தைக்கா நாம் துரோகம் நினைக்கிறோம்?' என்று குமுறியவள், திரும்பவும் படுக்கையில் வந்தமர்ந்தாள்.



என்ன தோன்றியதோ - குனிந்து ஜோன்ஸின் நெற்றியில் தன் இதழ்களைப் பதித்தாள். மனதிற்குள் ஒரு நிம்மதியான உணர்வு.

'கடவுளே! எனக்கு ஸ்திர புத்தியைத் தா!' என்று தன்னுள் கூறிக்கொண்டே கண்களை மூடியவள், எப்போது உறங்கினாளோ, அவளுக்கே தெரியாது.

**தூ**ங்கி எழுந்ததும் 'விசுவை மீண்டும் சந்திக்கக் கூடாது' என்று தனக்குள் உறுதி கொண்டாள் சாந்தா. ஆனால் அந்த எண்ணத்தைச் சரியாக ஒருநாள்கூட அவளால் காக்க முடியவில்லை.

அன்று மாலை விசு போனில், 'அங்கு வரட்டுமா, சாந்தா?' என்று கேட்டபோது, 'வேண்டாம்' என்று சொல்ல நினைத்தவளுக்கு எப்படித்தான் 'சரி' என்று சொன்னோம் என்றே புரியவில்லை.

"இப்போ என்ன நடந்துவிட்டதுன்னு இப்படி உட்கார்ந்திருக்கே, சாந்தா? நான் தவறாக ஏதும் சொன்னேனா? இல்லையே! - பின்னே எதுக்காக இப்படி - உம்?" என்று திரும்பத்திரும்ப விசு கேட்ட போது, அவளால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை.

"விசு! தயவுசெய்து என்னைக் கொஞ்சம் தனியா விட்டுடேன்... என் மனம் ரொம்பக் குழம்பிக் கிடக்கு. கொஞ்சம் யோசிச்சாதான் எனக்கே என்ன, ஏதுன்னு புரியும்... ப்ளீஸ்..."

"சரி" என்று விசுவும் பேசாமல் எழுந்து சென்று விட்டான். ஆனால், அவன் போனபிறகு சாந்தாவுக்குத் தான் மனம் கிடந்து அடித்துக்கொண்டது; 'அப்படி

யென்ன அவன் சொல்லிவிட்டான்? நம் இசைத்திறன் முறையாகப் பெருமையடையவும், நம் வாழ்க்கை அதற்குரிய இயல்பான இடத்தில் தழைக்கவும்தானே யோசனை சொல்கிறான். ஜோன்ஸின் அன்பைத்தவிர வேறு எதில் நான் ஒன்றியிருக்கிறேன், இந்த நாட்டில்? விசு வந்திருப்பது தெரியாத நிலையில்கூட 'நாத்' என்ற இந்தியன் என்று அவனைப்பற்றிக் கேள்விப்பட்டதுமே, என் மனம் 'இந்தியா, காவிரி' என்று துடிக்கவில்லையா? அதற்காக ஏங்கவில்லையா? அதுதானே என் மனம் இயல்பாக ஒன்றிப்போயிருக்கும் இடம்? அதை விட்டு இங்கு வாழ்வது ஒரு செயற்கை வாழ்க்கைதானே! அதைப் புரிந்துகொண்டு விசு பேசுகிறான்! அவனைப் போய் குற்றம் சொல்லலாமா?' என்று தனக்குள்ளேயே புழுங்கினாள்.

அதனால்தான் மறுபடியும் இரண்டு நாட்கள் கழித்து அவளாகவே சென்று விசுவைச் சந்தித்தாள்.

மௌனமாக இருவரும் 'யூனிவர்ஸிடி'யை அடுத்துள்ள பூங்காவில் நடந்துகொண்டிருந்தார்கள்.

சாந்தா அமைதியைக் கலைத்தாள்.

"நான் அன்னிக்கு ஏதாவது பண்பில்லாம உன் மனசு நோகும்படிப் பேசியிருந்தா என்னை மன்னிச்சுடு, விசு!"

"மன்னிக்கிறதுக்கு என்ன இருக்கு, சாந்தா? என் மனசுக்கு என்னவோ நீ இங்கு பாலைவனத்து நிலவா இருக்கிறதா பட்டுது. அதைச் சொன்னேன், அவ்வளவு தான். பிறகு உன் இஷ்டம், இல்லையா? நானும் ரொம்ப



ஸ்வாதீனமாகப் பேசியிருக்கக் கூடாது. தவறு என்னோடதும்தானே?"

விசு இப்படி வருத்தப்பட்டுப் பேசியதும் சாந்தாவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அவள் குணமே அப்படித்தான்! யாராவது துளி வருத்தப்பட்டாலும் இவள் மனம் பொறுக்காமல் தழைந்துபோய் விட்டுக் கொடுத்துவிடுவாள்.

"சே... சே... என்ன விசு, எனக்கு நல்லதுக்குத்தானே நீ சொன்னே... பின்னே ஏன் வருத்தப்படறே!" என்று சமாதானம் செய்தவள் சிறிது தயங்கி, "விசு! நீ சொன்னதை நானும் யோசித்துப் பார்த்தேன். நாலுநாளா இதைத் தவிர எனக்கு வேறே சிந்தனையே இல்லைன்னு கூடச் சொல்லலாம். யோசிக்கயோசிக்க பைத்தியமே பிடிக்கும் போல இருக்கு.

"இந்தியாவுக்குத் திரும்பிப் போகணும்ங்கிற எண்ணம் என்னுள் பேய் ஆட்டம் போடறது உண்மைதான். அதைப் புரிந்துகொண்டு நீயும் அதை நன்னா தூண்டி விட்டுட்டே... இப்போ நான் என்ன பண்றது? சொல்லு, விசு... நீயே சொல்லு... ஜோன்ஸை எப்படி நான் விட்டுட்டு வர்றது? என்ன சொல்லிட்டு வர்றது, விசு? நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தாலும் அங்கே என்னமா, எப்படி வாழ முடியும்? சொல்லு விசு!" என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள் சாந்தா.

அவள் அந்த நிமிடம் மனபலம் இல்லாதவளாக இருக்கிறாள் என்பதை அறிந்தது போல மெல்லமெல்ல நைச்சியமாகப் பேச்சுக் கொடுத்தான் விசு.

"இந்தியாவுக்குத் திரும்பிவந்து என்ன பண்றதுன்னு கேட்கறயே - நான் சொல்லட்டுமா? கோபிக்காமல்

இருந்தா சொல்றேன். திரும்பக் கல்யாணம் செய்து கொள்ளணும்!" என்றான் விசு.

"என்ன சொல்றே, விசு? இன்னொரு மணமா? என் ஜோன்ஸை விட்டுட்டா... மாட்டவே மாட்டேன்! இந்த அந்நிய பூமியிலும், அந்நிய சூழ்நிலையிலும் நான் துணிந்து வாழறேன்னா அதற்கு அவருடைய அன்புதான் காரணம். அவருக்குத் துரோகம் செய்யமாட்டேன்!" என்றாள் சாந்தா ஆவேசத்துடன். அந்தக் குழப்பமான நிலையிலும் அவளுடைய உறுதி தீபமாகச் சுடர்விட்டது.

அவளுடைய உறுதியைக் கண்டு, விசுவின் முகம் ஒருகணம் சுருங்கியது. இருந்தாலும் தன் கள்ளச்சிரிப்பின் மூலம் அதை மறைத்துக்கொண்டு, சாமர்த்தியமாகப் பேசினான்:

"ஏன் சாந்தா பதற்றப்படறே, நான் என்ன சொல்லி விட்டேன்! நீ வாழறதுன்னா இன்னொரு கல்யாணம் வேணுமானாலும் செய்துகொள்ளலாம்னுதான் சொல்ல வந்தேன். அது நீ பழகியிருக்கிற இந்த நாட்டுக் கலாச்சாரத்தில் ரொம்ப சகஜம். ஏன், நம்ம நாட்டில்கூட அது தப்பு இல்லை என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும் மனோபக்குவம் வந்தாச்சு. நீ இஷ்டப்பட்டா, அந்த தாம்பத்திய வாழ்க்கையையும் நீ இழக்க வேண்டியிருக்காது. தாம்பத்திய வாழ்க்கை ஒன்றுக்காக, நீ உன் மனம் லயிக்காத இந்த இடத்திலே செயற்கையாக வாழ வேண்டாம். இதுதான் என் அபிப்பிராயம். எனக்குத் தோணினதை நான் சொல்றேன். சாந்தா! உன்னாலே நான் சொல்றதை ஏற்க முடியுதோ இல்லையோ, அதை நீயே முடிவு செய்துகொள். வாழ்க்கை என்கிறது வெறும்



தாம்பத்திய சுகத்தோட நிறைஞ்சு போயிடறது இல்லை. அதற்குப் பலவித லயிப்புகள் வேணும்.

"காலமும், சூழ்நிலைகளும் வேகமாக மாறியிருக்கிற இந்தக் காலத்தில், ஒரு பெண்ணோ ஆணோ தன் இல்லற சுகத்தோட மட்டும் வாழ்க்கை நிறைந்து போயிடறதா நம்பறது ஒரு பிரமை. அதுக்கு மேலேயும் உலகம் இருக்கு; மகிழ்ச்சி இருக்கு. காவிரி என்றதும் ஏன் மனம் துடிக்கிறது? திருவையாறு என்றதும் ஏன் உன் மனம் பரவசம் அடைகிறது? அவையெல்லாம் அர்த்தமில்லாத உணர்ச்சிகளா? புதிதாகச் சில காரியங்கள் செய்யும்போது தயக்கமாகத்தான் இருக்கும். நீ உன் மகிழ்ச்சியைத் தேடி அமெரிக்காவுக்கு வந்தாய். இப்போது அது பூரணமானதா? இல்லை என்று உணர்ந்தால் உன் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்!"

அவன் வார்த்தைகள் அவள் உள்ளத்திற்குள் புயலாகப் புகுந்து அவளைத் தடுமாற வைத்து அலைக்கழித்தன.

"என்னைத் தனிமையில் விடு, விசு. நான் சிந்திக்க வேண்டும்!" என்றாள்.

ஆனால் தனிமை இன்னும் பயங்கரமாக அவளைக் குழப்பியது. விசுவின் வார்த்தைகள் விநாடிக்கு விநாடி ராட்சத பலம் பெற்று அவள் நெஞ்சத்தை முற்றுகை யிட்டுத் துளைத்தெடுத்தன.

ஜோன்ஸ் வேறு 'ஆராய்ச்சி, ஆராய்ச்சி' என்று சதா ஆராய்ச்சிக்கூடத்தில் பொழுதைக் கழிக்க வேண்டிய திருந்தது.

சாந்தா துணையின்றி, தனிமையில் விசுவின் வார்த்தை களுக்கு மெல்லமெல்ல பலியாகிக்கொண்டே வந்தாள்.

'இப்படிச் செய்யலாமா' என்ற கேள்வி மாறி,'இப்படிச் செய்தால் என்ன தவறு' என்று கேட்கத் தொடங்கியது மனம். முடிவில் அந்த முடிவுக்கே வந்துவிட்டாள்.

"விசு, நம் மண் என்னை இழுக்கிறது. அந்த ஈர்ப்பி லிருந்து என்னால் தப்ப முடியவில்லை. நானும் வரு கிறேன். ஆனால், ஜோன்ஸிடம் முகத்துக்கு நேராகச் சொல்லிக்கொண்டு புறப்பட எனக்குத் துணிவில்லை. அவருக்குத் தெரியாமலே போய்விடலாம்!" என்றாள் விசுவிடம்.

விசு உற்சாகமாக ஏற்பாடுகளில் மூழ்கினான்.

ஒரு வாரமாகவே - இந்தியாவுக்குப் புறப்படும் நாள் நெருங்கநெருங்க, சாந்தாவுக்குத் தான் செய்யக் கூடாததைச் செய்வதுபோல ஒரு பிரமை.

'தடால், தடால்' என்று சாமான்களை எல்லாம் கைநழுவ விட்டுக்கொண்டிருந்தாள். எப்பொழுதும் அடிவயிற்றைப் பிசைந்தாற்போல ஒரு வேதனை. சாப்பாடு தூக்கம் இரண்டையும் விட்டே பல நாட்கள் ஆயின என்றுகூடச் சொல்லலாம்.

ஜோன்ஸ்கூட இரண்டு நாட்களுக்கு முன்பு கேட் டான், "என்ன சாந்தா, இரத்தமே இல்லாதது போல உன் முகம் இப்படி வெளுத்திருக்கிறது? சரியாகச் சாப்பிடமாட்டேன் என்கிறாய். உடம்பு சரியில்லையா? டாக்டரிடம் போகலாமா?" என்று.



"ஒன்றும் இல்லை! இந்த 'விண்டர்' குளிர் அதிகம். அவ்வளவுதான்" என்று பதிலுக்குச் சொன்னாள் சாந்தா.

நடுநடுவில் 'இன்னும் ஒரு வாரத்தில் நாம் திருவை யாற்றில் இருப்போம்,' 'இன்னும் ஆறு நாட்கள்,' 'ஐந்து நாட்கள்' என்று விசு கொடுத்துக்கொண்டிருந்த உற்சாகமான வார்த்தைகள்தான் அவளைத் தைரியமாக இருக்க வைத்தன.

'வந்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டு அந்த நாளும் வந்துவிட்டது.

முதல் நாளே விசு, "நாம் சரியாக மாலை நான்கு மணிக்குக் கிளம்ப வேண்டும். நான் வண்டியோடு உன் வீட்டுக்கு மூணேமுக்காலுக்கு வருகிறேன் - தயாராக இரு" என்று சொல்லிவிட்டான்.

கடைசி நிமிஷம் வரை தள்ளிப் போட்டுக்கொண் டிருந்த காரியத்தைச் செய்வதற்காக உட்கார்ந்தாள் சாந்தா. 'ஜோன்ஸுக்கு என்ன எழுதுவது?' - இதே சிந்தனைதான் அவளுக்கு.

ஒரு பேப்பரையும், பேனாவையும் வைத்துக்கொண்டு ஒரு மணி நேரம் ஜடம் போல அமர்ந்தவள், ஒரு முடிவுக்கு வந்தவளாக 'விறு- விறு' என்று எழுதினாள்.

"அன்பான ஜோன்ஸ்,

பிறந்த மண்ணின் ஆகர்ஷண சக்தியைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தாலும், அதை இன்றுதான் நான் அனுபவிக்கிறேன். அந்த உணர்வை எப்படியென்று விளக்கும் அறிவும், சாமர்த்தியமும் எனக்கு இல்லை.

ஆனால், உங்களைப் போன்ற ஒரு மேதையால் புரிந்து கொள்ள முடியும்!

நான் இந்தியாவுக்குப் போகிறேன். ஆமாம், ஜோன்ஸ். உங்களையும் விட்டுவிட்டுத்தான் போகிறேன்! உங்கள் அன்பையோ அல்லது உங்களுடன் வாழ்ந்த நாட்களையோ நான் குறை சொல்லிவிட்டுப் போனால், நிச்சயமாக நான் மனிதத்தன்மை அற்ற மிருகம் ஆவேன்.

'பின் ஏன் போகிறாய்?' என்றால், என்னுள் ஏதோ ஒன்று புகுந்துகொண்டு பேய் ஆட்டம் போடுகிறது. இதை எழுதும்போதுகூட காவிரிக்கரையின் ஈர மண்ணின் வாசனையை என்னால் நுகர முடிகிறது. அதனால்தான் போகிறேன்.

முன்பொரு நாள் 'வாருங்கள் ஜோன்ஸ், இந்தியாவுக்குப் போய்விடலாம்' என்று நான் சொன்னபோது, நீங்கள் என்னை உற்றுநோக்கி, முகம் சிரிப்பை மறந்து நிற்க, "விளையாடுகிறாயா, சாந்தா?" என்று கேட்டது நன்றாக நினைவிருக்கிறது. அதனால்தான் உங்களை விட்டுவிட்டு நான் மட்டும் போகிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். உங்கள் பவித்திரமான அன்பை என்னிடம் செலுத்தி என் தரத்தையே ஒருபடி உயர்த்திவிட்டீர்கள். மற்றபடி நான் உங்களை அடைய எந்தவிதத்திலும் அருகதை உள்ளவள் அல்ல.

அவ்வளவுதான் - நான் வருகிறேன்!

—சாந்தா."



## 5

மரத்து சில்லிட்டிருந்த விரல்களை ஒருதரம் நீட்டி மடக்கி, அந்தக் கடிதத்தை உறையிலிட்டு, ஜோன்ஸ் வந்ததும், முதலில் பார்க்கும் இடமான 'லெட்டர் ஸ்டாண்டி'ல் வைத்தாள். அதேநேரத்தில் அவள் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை, அவளுள் யாரோ ஒரு கம்பியை விட்டுத் திருகினாற் போன்ற உணர்ச்சிதான் அவளுக்கு ஏற்பட்டது.

'ஜோன்ஸ் இன்று மாலை வீட்டுக்குத் திரும்பியது இந்தக் கடிதத்தைக் காண்பார் - பிறகு பிரித்துப் பார் பார் - பிறகு.. பிறகு..?'- சாந்தாவினால் கற்பனை கூட செய்துபார்க்க முடியவில்லை.

சொன்னபடி சரியாக 3-45-க்கு டாக்ஸியுட வந்துவிட்டான் விசு. அவன் முகமெல்லாம் மலர் திருந்தது. தான் நினைத்ததைச் சாதிக்கப்போகிறோ என்ற சந்தோஷத்தால் இருக்குமோ? சாந்தாவை ஜோ ஸிடமிருந்து பிரித்துவிட்டதைப்போல், தன்னோ அவளை இணைத்துக்கொள்வதும் சுலபம்தான் என்ப அவனுடைய திட்டம் ஆயிற்றே!

சாந்தாவின் மன உளைச்சலைப் புரிந்துகொ டவன் போல் அவளுக்கும் சேர்த்து அவன் பேசி கொண்டிருந்தான். சிறிதுநேரம் அவளை உற்சாக படுத்தும் வகையில் ஏதேதோ ஒன்றுக்கொன்று சம்பந்த இல்லாமல் பேசினவன், "நாழியாகிவிட்ட கிளம்பலாமா?" என்று கேட்டவுடன், தயங்கித்தய

சாந்தா சொன்னாள். "விசு, என்னமோ தெரியலை, நான் பண்ணப்போறது தப்பா, இல்லை, சரியான்னு இன்னும் தெளிவா எனக்குப் புரியலை. கால், மனம் எல்லாம் ஒரேயடியா பாறையா கனக்கறது. சரியாப் பேசக்கூட வராம தொண்டையிலே ஏதோ உருண்டை உருண்டையா அடைச்சிக்கிறது. கடைசி தடவை யாக் கேட்கறேன் - நான் பண்ணப்போறது சரியா, சொல்லு விசு..."

"சாந்தா, உன் முடிவு உறுதியாகத்தான் இருக்கு. அதுலே ஒண்ணும் சந்தேகம் இல்லை. பழகின ஊர், மனுஷா; அதோட உன் கணவனையே விட்டுட்டுப் போறதால் ஏற்படற ஒரு நிமிஷ சஞ்சலம்தான் இது - இதைப் பெரிசு பண்ணாமல், பாராட்டாமல் கிளம்பு, சாந்தா. நேரம் ஆறது பார்."

பொம்மலாட்டக்காரன், அவன் வித்தையில் ஆட்டி வைக்கும் பொம்மையைப் போல், விசு சொன்னதை இயந்திரமாகச் செய்தாள் சாந்தா.

வீட்டை விட்டு வெளியில் வந்தபோது சொல்லத் தெரியாத வேதனை அவள் வயிற்றைப் பிசைந்தது. திடீரென்று ஒரு குமட்டல் - 'காலையில் இருந்தே ஒன்றும் சாப்பிடாமல் வெறும் வயிறாக இருப்பதால் தான், வேறு ஒன்றும் இல்லை' என்று சிறு குழந்தையைப் போல் தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டாள் அவள். அதன்பிறகு அவர்கள் ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. சாந்தாவின் வேதனையைப் புரிந்து கொண்டாற்போல், டாக்ஸியில் செல்லும்போது, விசுவும் அவளிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. ஆனால், இரண்டு



மூன்று தடவை மாத்திரம் ஏதோ சொல்ல நினைத்தாற் போல் வாயைத் திறந்தான் - சாந்தாவின் வெளிறிய முகத்தைப் பார்த்துவிட்டு, 'இப்போது வேண்டாம்' என்று தனக்குள் முனகிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டான்.

**விமான** நிலையத்தில் டிக்கெட்டுகளை 'செக்' செய்துகொண்ட பிறகு விமானம் புறப்பட இன்னும் இருபது நிமிடங்கள் இருந்ததால்-இருவரும் அங்கு இருந்த 'வெயிட்டிங் ரூமி'ல் சென்று அமர்ந்தார்கள்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல நிமிர்ந்து சாந்தாவைப் பார்த்து, "சாந்தா! நீ இப்படி இருக்கிறது எனக்கு எப்படியோ இருக்கு-ப்ளீஸ்-என்னை நிமிர்ந்து பாரேன். நீ செய்யப்போறது ரொம்ப சரியான காரியம் தான். அதுவும் உன் வாழ்க்கைக்கு, உன் பிரகாசமான எதிர்காலத்துக்கு ரொம்ப அவசியமானதும்கூட இதை நீ புரிஞ்சுக்கணும்..." என்று மெதுவாகச் சொன்ன விசு குனிந்து கோட்டுப் பையிலிருந்து ஒரு பொருளை எடுத்து வைத்துக்கொண்டான்.

பிறகு, "இங்கே பாரு - இந்தப் பரிசை உனக்காக நான் போன மாசமே வரவழைச்சுட்டேன். இதை விமானத்திலே ஏறினதும் உனக்கு என் அன்போடு ஆரம்பப் பரிசாகக் கொடுக்கணும்னு நினைச்சேன். ஆனா, நீ, இப்போ இருக்கிற நிலையைப் பார்த்து எனக்கு மனமெல்லாம் என்னமோ பண்ணறது. அதனால் உன்னைச் சந்தோஷப்படுத்தணும் என்கிற ஆசையிலே இதை உனக்கு இப்பவே என் பரிசா கொடுத்திடறேன் - எடுத்துக்கோ, சாந்தா..." என்றான்.

நீட்டிய அவன் கையிலிருந்து அந்தப் பொருளை எடுத்த சாந்தா, அதை மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். அழகான காகிதத்தால் சுற்றப்பட்டிருந்த அந்தப் பொருள் என்னவாக இருக்கும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

மெல்லமெல்ல அந்தக் காகிதத்தைப் பிரித்தாள். இரண்டு சுற்றுக் காகிதத்தைப் பிரித்ததுமே அதனுள் என்ன இருக்கிறது என்று புரிந்துவிட்டதைப் போல இருந்தது அவளுக்கு. திடீரென்று அவளுள் ஒரு நடுக்கம் தோன்றி மெதுவாக அவள் உடல் பூராவுமே பரவ ஆரம்பித்தது. கொதித்துக்கொண்டிருக்கும் எரிமலைக் குழம்பு வெடிப்பதற்கு முன்னால் மலை உச்சியில் ததும்பிக்கொண்டிருப்பதைப் போன்ற வேகம்—

மெல்லிய 'டிஷ்யூ' காகிதத்தை அவிழ்த்த சாந்தாவின் கையில் 'பளி'ரென்று அந்தப் பொருள் 'பளிச்'சிட்டது. அதைப் பார்த்த சாந்தாவின் கண்கள், உடல் எல்லாமே கூசி நடுங்கின.

அழகிய சின்னஞ்சிறு கலர்க் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பட்ட அந்த தஞ்சாவூர் குங்குமச் சிமிழ் அவள் சிவந்த உள்ளங்கையில் அழகாக அமர்ந்திருந்தது. அந்தச் சிமிழின் ஒவ்வொரு கண்ணாடித் துண்டிலும் சாந்தாவின் பிரதிபிம்பம் தெரிந்தது. அவற்றைப் பார்க்கும்போது 'சட்'டென்று தான் நூற்றுக்கணக்கில் அணு அணுவாகப் பிரிந்துபோய், மனிதத்தன்மையையே இழந்து, கரைந்து உருகும் ஒரு மண்மேட்டைப் போல் அங்கு நிற்பதாகத் தான் சாந்தாவுக்குத் தோன்றியது.

அத்தனைக் கண்ணாடித் துண்டுகளில் இருந்த சாந்தாக்களும் 'நீயும் ஒரு பாரதப் பெண்ணா?' என்று இரு கைகளையும் நீட்டிக்கொண்டு உரக்கக் கத்துவது அவளுக்குக் கேட்டது. அவை மாத்திரம் அல்ல; அந்த விமானக் கூடத்தில் இருந்த ஒவ்வொருவரும் அதையே கேட்பது போல் அவளுக்குத் தோன்றியது. ஆயிர மாயிரம் குரல்கள் ஒன்றுபோல் முழங்கி, அந்த சப்தம் மேலே எழும்பி ஆகாயம் வரை வியாபிப்பதை சாந்தா உணர்ந்தாள்.



அடி உதட்டைக் கடித்துக்கொண்டு அந்தச் சிமிழைத் திறந்தாள். உள்ளே இருந்த ரத்தச் சிவப்புக் குங்குமம் அவளுக்குத் தன் ஹாஸ்டல் அறையில் மாட்டியிருந்த துர்கையின் முகத்தையும், நாக்கையுமே நினைவூட்டியது.

அந்த நேரத்தில் அது குங்குமம் என்பதே அவளுக்கு மறந்துபோயிற்று. அவளுள் பொங்கிக்கொண்டிருந்த எரிமலைக் குழம்பு வெளியே வந்து, அவள் மேனி எல்லாம் பரவி, அதில் அவள் வெந்து கருகுவதை மனக்கண்ணால் பார்த்தாள். அந்தக் குழம்பினூடே ஓர் உருவம் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு, கண்ணில் 'கரகர'வென்று நீர் வடிய நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

'யார் அது' என்று உற்றுப் பார்த்தால் - அவளுடைய தந்தை!

"அடி! நீ பாரதப்பெண். வெளிநாட்டுக்குப் போறே- அங்கே போயாவது நம்ப நாடு உயரும் வகையில் நடந்துக்கோ என்று சொன்னேனே, மறந்துட்டியா?" என்று சிங்கக் குரலில் கேட்பது புரிந்தது.

"அப்பா..." என்று வாய்விட்டு அலறினாள் சாந்தா மேனியெல்லாம் யாரோ ஊசி கொண்டு 'சுருக்சுருக்

என்று குத்துவதைப் போன்ற வேதனை. "ஐயோ, அப்பா!" என்று தான் விமானக்கூடத்தில் இருப்பதையும் மறந்து, மறுபடியும் கத்தினாள்.

அவள் உணர்ச்சிவயப்பட்டுவிட்டாள் என்பதை அறிந்த விசு, அருகில் வந்து கையைப் பிடித்தான்.

கம்பளிப் பூச்சியைத் தொட்டுவிட்ட அருவருப்புடன் அவன் கையை உதறினாள், சாந்தா. "தொடாதே - என்னைத் தொடாதே, விசு! நான் பாரத நாட்டுப் பெண் - அதுவும் தமிழ்நாட்டுப் பெண்! ஏதோ, பிறந்த மண்ணின்மேல் ஏற்பட்ட பாசத்தால், ஒரு பலவீனம் ஏற்பட்டு உன்னோட வரேன்னு புறப்பட்டேன். இப்போ பலம் வந்துடுத்து, விசு! யானை பலம் வந்துடுத்து!

"எனக்கு இந்தியா வேண்டாம் - இந்தியப் பண்பாடு தான் வேணும்! அந்தக் காவிரிக்கரையில் நான் வாழ வேண்டாம். அதன் நினைவோடு எங்கேயும் வாழ்வேன். அதற்குத் துணையாக, என்னைக் காக்க இந்தக் குங்குமம் போதும். இதுதான் எனக்கு இப்போ வேண்டும். நான் வரேன், விசு, என்னை மன்னிச்சுடு" என்று ஆவேசம் வந்தவளைப்போல கத்திய சாந்தா, விசு மரம்போல் நிற்பதையும், அனைவரும் தன்னையே வேடிக்கை பார்ப்பதையும் துளியும் லட்சியம் செய்யாதவளாக அந்த இடத்திலிருந்து புயலென வெளியில் வந்தாள்.

பெண் மதயானையைப் போல ஓடும் அவளைத் தடுக்க முடியாதென்பதை அறிந்த விசுவும் அந்த இடத்திலேயே ஆணி வைத்து அறைந்தாற்போல் நின்றான்.

'கடவுளே! நான் செய்த - செய்யவிருந்த தவறை நீ மன்னித்துவிட்டாய் என்றால், ஒரே ஒரு வரத்தை மட்டும் எனக்குக் கொடு. என் கடிதத்தை ஜோன்ஸ் பார்க்கக்கூடாது. என் உயிரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். ஆனால், அந்தக் கடிதம் அவர் கையில் கிடைக்கக்கூடாது' என்று தனக்குள்ளேயே புலம்பிய சாந்தா, டாக்ஸி டிரைவரிடம் "இன்னும் வேகமாக இன்னும் வேகமாகப் போ" என்று சொல்லி விரட்டினாள்.



வீட்டு வாசற்படி ஏறியவளை ஒரு பெரிய மலர்க் கொத்துதான் வரவேற்றது. குமிழ் குமிழாக ஆழ்ந்த சிவப்பு நிறமும், வெள்ளை நிறமுமாக இருந்த ரோஜா மலர்களைக் கொண்ட அந்தப் பூங்கொத்து அழகாக ஆடிச் சிரித்து அவளை 'வா' என்றது.

குனிந்து அதில் தொங்கிக்கொண்டிருந்த சீட்டைப் படித்தாள் சாந்தா:

'டியர், இன்று நம் வாழ்க்கையிலேயே ஒரு முக்கியமான தினம். ஏனெனில், என் பரிசோதனை வெற்றி அடைந்துவிட்டது. ஆமாம் சாந்தா! தீராத புற்றுநோய்க்கு மருந்து கிடைத்துவிட்டது! உனக்கு உடனே இதைச் சொல்ல, வீட்டிற்குப் போன் செய்தேன். நீ இல்லை! எங்கோ வெளியில் சென்றிருக்கிறாய் போலிருக்கிறது சாந்தா, என் வாழ்வின் வெற்றிக்கு நீதான், நீயேதான் காரணம் என்பதைச் சொல்லி உனக்கு இந்த மலர்களை அளிக்கிறேன்; ஏற்றுக்கொள். நான் வீட்டிற்கு வருவதற்கு சிறிது நேரமாகலாம்.

உன்,

ஜோன்ஸ்'

இந்தக் கடிதம் தன் நெஞ்சையே இரண்டாகப் பிளந்து உள்ளே ஆழச் சென்றுவிட்டதை உணர்ந்தாள் சாந்தா.

குழந்தையை வாரிக்கொள்வதைப் போல் அந்த மலர்க்கொத்தை வாரி இறுக அணைத்துக்கொண்டாள் அவள். அந்த மலர்களில் இருந்த முட்களெல்லாம் அவள் மார்பிலும், கைகளிலும் ஆழத் தைத்தன. அந்த இடங்களிலிருந்தெல்லாம் முத்துமுத்தாக ரத்தம் வெளிவந்து மெல்லக் கையில் வழிந்தோடியது. அந்த ரத்தத்தோடு ரத்தமாய் தன் மன அழுக்கெல்லாம் கரைந்து வந்து விட்டதைப்போல் தோன்றியது சாந்தாவுக்கு.

ஒரு கையில் மலர்க்கொத்தும், ஒரு கையில் குங்குமச் சிமிழுமாக உள்ளே நுழைந்தவள், ஜோன்ஸுக்கு தான் எழுதி வைத்திருந்த கடிதத்தை எடுத்து சுக்குநூறாகக் கிழித்துப் போட்டாள்.

மறுபடியும் அடிவயிற்றை என்னவோ செய்தது. என்னவென்று ஒருகணம் நிதானிப்பதற்குள் ஒரே குமட்டல். முகம் கழுவும் குழாயருகே ஓடினாள்!

'பளிச்'சென்று அவளுள் ஒரு மின்னல் - ஏதோ ஒரு திரையை திடீரென்று தூக்கிவிட்டாற் போன்ற உணர்வு, ஆ... ஆமாம்... அவளுக்கு இப்போது ஐம்பது நாட்களாகிவிட்டதே!

'ஓ, தெய்வமே! நீதான் எத்தனை கருணை உள்ளவராக இருக்கிறாய்! உன் கடைக்கண் என்மேல் விழ நான் தகுதி உள்ளவள்தானோ?' என்று எண்ணி ஸ்தம்பித்தாள் சாந்தா.

எங்கோ, என்றோ படித்த சிவன் பாட்டுத்தான் அவளுக்கு நினைவு வந்தது-'சோதனைத் தீயில் புடமிடுவான்; இறங்கித் தூக்கி எடுத்து ஆனந்தம் அளித்திடுவான்.'



வெளியில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. தொடர்ந்து ஜோன்ஸ் விரைவு நடையில் வீட்டிற்குள் நுழைவதும் சாந்தாவுக்குப் புரிந்தது.

ஜோன்ஸ் அவளைப் பார்த்துவிட்டு ஒருகணம் அப்படியே நின்றுவிட்டான். "சாந்தா! என்னம்மா இது? கையில் ரத்தம்! என்ன ஆயிற்று, சாந்தா? ஏன் அப்படிப் பார்க்கிறாய்? மலர்களில் உள்ள முட்கள் குத்துகின்றபடி ஏன் அப்படி இறுக அணைத்துக்கொண்டிருக்கிறாய்? சொல், சாந்தா!" என்று கேட்டவாறே, இரு கரங்களையும் நீட்டிக்கொண்டு அவளை நெருங்கினான்.

அந்தக் குரலில் உலகத்திலுள்ள பாசமெல்லாம் ததும்பி வழிவதைப் பார்த்தாள் சாந்தா. தொண்டை அடைக்க, "ஜோன்ஸ்... ஜோன்ஸ்" என்று அழைத்தவள் தன் கையிலிருந்த சிமிழைத் திறந்து அவன்முன் நீட்டி, "எனக்கு இட்டுவிடுங்கள்" என்று விம்மும் குரலில் கெஞ்சினாள்.

என்னவென்று புரியாமலேயே ஆள்காட்டி விரலால் அந்தச் சிவப்புப் பொடியை எடுத்து அவளுடைய நெற்றியில் ஜோன்ஸ் இடவும் - தன் மேனியெல்லாம் புடமிட்ட தங்கத்தைப் போல் மிளிர்வதைக் கண்டாள் சாந்தா.

'கரகர'வென்று கண்ணில் மடைதிறந்தாற் போல் நீர் வடிந்தது. 'உம் உம்' என்று விம்மியவளிடமிருந்து, மெல்லமெல்ல ஆரம்பத்திலும், பிறகு 'ஓ'வென்று அலறிக்கொண்டும் அழுகை வெடித்தது. என்றைக்கும் எதற்குமே அழாத சாந்தா அன்று அழுதாள். கதறிக் கதறி தன்னைத்தானே கரைத்துக்கொண்டு, அந்தக்

கடவுளின் கருணையை, அவள் எதிரில் மனித உருவில் நிற்கும் அன்புத் தெய்வத்தை நினைத்து நினைத்து "அம்மா" என்று அலறி அழுதாள்.

'சாந்தா ஏன் அழுகிறாள்?' என்று புரியாத ஜோன்ஸ்-தன் அரவணைப்பு அவளுக்கு எந்தச் சமயத்திலும் அமைதியைக் கொடுக்கும் என்று அறிந்தவனாக, அவளை நெருங்கி வந்து, குழந்தையைப் போல் கையில் வாரி இறுக அணைத்துக்கொண்டான்.

# சத்தியம் சிரிக்கிறது!

**மா**ர்கழி மாதக் குளிர், மருதுவின் உடலில் புகுந்து அவன் மேனியெங்கும் மயிர்க்கூச்சலை உண்டாக்கியது. குடிசை வாசலில் குத்திட்டு உட்கார்ந்துகொண்டு, பீடியைப் புகைத்துக்கொண்டிருந்தான் அவன். அந்தக் குளிருக்கு, பீடியின் வெப்பம் இதமாக இருந்தது.

அவனுக்குப் பின்னால் தொங்கிக்கொண்டிருந்த கிழிந்த சாக்குப் படுதாவை விலக்கிக்கொண்டு வந்த அவன் மனைவி ராசாத்தி, "யோவ்" என்று குரல் கொடுத்தாள்.

"இன்னா..."

"இன்னாய்யா ராவுலே! எப்ப வந்தே?"

மருது பதில் பேசவில்லை.

"ஒனக்கு வூடுன்னு ஒண்ணு இருக்கிறதா நெனப்பு இருந்தாத்தானே காலா காலத்திலே திரும்பி வருவே-நானோ புள்ளையோ எப்படிப் போனா ஒனக்கு இன்னாய்யா...?"

ஒன்றுக்குமே பதில் சொல்லாமல் பீடியை வாயில் வைத்து சுவாரசியமாக 'தம்' பிடித்தான், மருது.

இரண்டு நாளாகவே சரியாகச் சாப்பிடாத மயக்கம், பிள்ளைக்கு ஜுரம், கையில் காசில்லை-தவித்துக் கொண

டிருக்கிறாள் ராசாத்தி. மருது கடந்த இரவு முழுவதும் சீட்டாடிவிட்டு, விடியற்காலையில் வந்திருக்கிறான்.

"யோவ்! நீயும் ஒன் மூணு சீட்டும்... நீ உருப் படுவையா? வூட்டுலே பெண்சாதி புள்ளையைக் கூடக் கவனிக்க நேரமில்லாத ஆளு ஏன்யா கல்யாணம் கட்டணும்?" என்று ஆவேசமாகக் கத்தினாள் ராசாத்தி.

பாய்ந்து எழுந்தான் மருது. காலை வேளைப் பசியோடு, நேற்று மூணுசீட்டில் நான்கு ரூபாயை டாக்ஸி டிரைவர் சின்னையனிடம் தொலைத்த ஆத்திரமும் சேரவே, 'லபக்' என்று ராசாத்தியின் தலைமுடியைப் பிடித்துக் 'கரகர'வென்று இழுத்துக்கொண்டு சென்றவன், "இன்னாடி சொன்னே? எனக்குக் கல்யாணம் கட்டிக் கிட யோக்கியதை இல்லைனா? அந்த வாயைக் கீசிடு வேண்டி - இன்னா வேணும்னாலும் பேசலாம்னு உன் மனசிலே நெனப்பா?" என்று கேட்டுவிட்டு, மாறிமாறி இரு கன்னத்திலும் 'பளீர் பளீர்' என்று அறைந்து அவளைக் கீழே தள்ளிக் காலால் ஆத்திரம் தீரப் புரட்டியெடுத்தான்.

"கொல்லுயா... என்னே கொன்னுடு... அப்பவாச்சும் ஒனக்கு நிம்மதி இருக்கும்னா என்னே கொன்னுடு... ஆனா, இந்தப் புள்ளெக்கு ஒரு வழி பண்ணிட்டு என்னெ தொலைச்சிடு. ஒன்னே கட்டிக்கிட்ட இந்த ரெண்டு வருஷமா ஒன் கையை நா எதிர்பாக்கலை. நா பாட்டுக்குக் கூலி வேலை பண்ணி என் வயித்தையும், ஒன் வயித்தையும் களுவிக்கிட்டிருந்தேன். இப்ப இந்தப் புள்ளை பொறந்தப் பொறவுகூட ஒன் வழிக்கு நான் வரலை. ஒன் சம்பாத்தியம் ஒன் மூணு சீட்டுக்கே



இருக்கட்டும்னு விட்டுட்டேன். ஆனா இப்போ புள்ளைக்குக் காச்சல் கண்டு ஆத்தா என்னே இங்கே கட்டிப் போட்டுட்டா. என்னால புள்ளையை வுட்டுட்டுப் போயி சம்பாரிக்க முடியலை - அதனால தான்யா ஒன்னோட வழிக்கு நா வரேன். இன்னிக்குப் பொழுதுக்குள்ளாற மருந்து கொடுக்கலைனா புள்ளை தாங்காதுயா... அது பொருட்டுத்தான் ஒன்னைத் தாறுமாறா பேசிட்டேன்... யோவ்! நா வேற யார்கிட்டே போவேன்?... சொல்லு..." என்று கதறிய வண்ணம் அவன் காலடியில் விழுந்து, முழங்காலைப் பற்றிக்கொண்டு 'ஓ'வென்று கதறினாள் ராசாத்தி.

மண்ணில் அவளைப் புரட்டியெடுத்ததால் முகமெல் லாம் அழுக்கடைந்து, ஒரு சில இடங்களில் சிராய்ப்பு மாக, கண்ணில் 'கரகர'வென்று நீர் வடிய தன்னை அணைத்துக்கொண்டு கதறும் மனைவியைப் பார்த்தான் மருது. அவனுள் மடைதிறந்தாற் போன்ற ஓர் உணர்வு. 'சட்'டென்று குனிந்து அவளை வாரிக்கொண்டான்.

பிறகு, "அழுவாதே பொண்ணுரா-நீ சொன்னது இப்பத் தான் எனக்கு உறைக்குது! நா சம்பாரிச்சுப் பணம் கொண்டு வந்து நம்ப புள்ளைக்கு வைத்தியம் பண்ண றேன். இன்னிப் பொழுதுக்குள்ளாற வண்டி ஓட்டி, துட்டு கொணாந்து நா எம் புள்ளைக்கி மருந்து வாங்க றேன். எனக்கு இந்த மூணு சீட்டு வாணாம்; நீயும் புள்ளையும்தான் எனக்கு வேணும். என் ராசாத்தி, ஏன் அப்படிப் பாக்கறே? நா சொல்றதுலே ஒனக்கு நம்பிக்கை இல்லையா? நம்ம புள்ளை மேல ஆணையா அந்த மூணு சீட்டை வுட்டேன் - சத்தியமா - வுட்டேன்,

ராசாத்தி..." என்று குரல் அடைக்கக் கூறி, அவளைத் தழுவிக்கொண்டான் மருது.

ராசாத்திக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அவள் அடிபட்ட வேதனையெல்லாம் அப்படியே ஓடிப்போயிற்று.

சத்தியம்! மருது செய்த சத்தியத்தால், அதுவரை அனுபவித்த வேதனைகளையெல்லாம் மறந்தாள் ராசாத்தி. புதுப்புனலாடும் பூரிப்பு அவள் நெஞ்சில் சிலிர்த்தது. ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள்.

சத்தியமிட்ட கையோடு சைக்கிள் ரிக்ஷாவை எடுத்துக்கொண்டு கிளம்பினான் மருது. அன்று பூராவும் அலைந்து திரிந்தான். மாலை மூன்று மணியளவில் கையில் ஏழு ரூபாய் சேர்ந்ததும், அவனுக்கு ஓரே மகிழ்ச்சி.

நேரே வீட்டுக்குப் போய் மனைவியையும், குழந்தையையும் அழைத்துக்கொண்டு வைத்தியரிடம் செல்லுவது என்ற முடிவுடன் வேகமாக வந்துகொண்டிருந்தான்.

வழியில் வழக்கமாகச் சந்திக்கும் ஆலமரத்தடியை நெருங்கும்போது, அவனுக்குப் பழக்கதோஷத்தால் உடல் குறுகுறுத்தது. வேகமாக வண்டியை மிதித்தவனை, "அண்ணே! மருதண்ணே, மருதண்ணே!" என்ற குரல் தாவி வந்து நிறுத்தியது.

மரத்தடியில் கூடியிருந்த டாக்ஸி சின்னையன், மாரிமுத்து, மற்றும் சிலர் இவனைக் கையைத் தட்டி அழைத்தார்கள்.

"இன்னாண்ணே! கண்டுங் காணாமப் போறே? இன்னிக்குச் சின்னையனைத் தோக்கடிக்கிறதா சவால் வுட்டியே-மறந்துடிச்சா? வா, அண்ணே, சீக்கிரம்!" என்று மாரி அழைத்தான்.



"வேண்டாம், தம்பீ! இன்னிக்கு வாணாம். வூட்டுலே பையனுக்கு உடம்பு சொகமில்லே - வைத்தியர்கிட்டே போகணும் - அதனாலே நா போறேன்" என்று சொன்னான் மருது.

"இன்னிக்கு வாணாமா? போய்யா, ரோஷக்காரனாடா நீ? போய் பொடவையைக் கட்டிக்கினு வூட்டுலே குந்து!" என்று சின்னையன் சொல்லவும், அந்தக் கூட்டம் பூராவுமே 'கொல்'லென்று சிரித்தது.

மேனியெல்லாம் 'தகதக'வென்று எரிந்தது மருதுவுக்கு. மெல்லமெல்ல மூணு சீட்டுப் பிசாசு அவனை ஆட்கொள்வதை அவன் உணர்ந்தான். அவர்கள் மூட்டிய ரோஷம் வேறு. அந்த நேரத்தில், நேற்று போட்ட பந்தயம்தான் அவனுக்கு நினைவிருந்தது. காலையில் மனைவியிடம் சொன்ன வார்த்தைகளோ, பிள்ளைமேல் போட்ட சத்தியமோ, துளியும் நினைவில்லை.

'விறுக்'கென்று நடந்து ஆலமரத்தடியில் உட்கார்ந்தவன், கையிலிருந்த பணத்தையெல்லாம் முன்னால் கொட்டிவிட்டு, "வாங்கய்யா... வாங்க" என்று மற்றவர்களை அழைத்தான். பிறகு சீட்டை எடுத்துக் குலுக்கி, "வை ராஜா வை, கறுப்பு வந்தா கம்பெனிக்கு, சேப்பு வந்தா..." என்று ராகம் பாட ஆரம்பித்துவிட்டான்.

அதன்பின் அவனுக்கு இந்த உலகத்தின் நினைவே இல்லை.

ராசாத்திக்கு அவன் கொடுத்த சத்தியம்?

இன்னொரு காட்சி. மேஜர் பாஸ்கர் தம்பதியர். நவீன பாணியில் செய்யப்பட்டிருந்த அந்த 'டிரெஸ்ஸிங் டேபிளி'ன் முன்னால் அமர்ந்துகொண்டு தன் கண்களுக்கு மை தீட்டுவதில் முனைந்திருந்தாள் சித்ரா - அதாவது திருமதி பாஸ்கர்.

ஆனால், அந்தக் கண்கள் நேரம் ஆக ஆகக் கலங்கிக் கொண்டிருந்தன.

செல்லமாக வளர்ந்த பணக்காரப் பெண் அவள். கைபிடித்த மணாளனோ கண்கவர் அழகன் - ராணுவ அதிகாரியான மேஜர் பாஸ்கர். அதிகார மிடுக்கோடு செல்வக் கொழிப்பும் சேர்ந்து அவனை ஒரு கம்பீரமான இளைஞனாக்கியிருந்தது. அவனுக்குத்தான் எவ்வளவு ஆசை அவள்மேல்!

அவன் அடிக்கடி சொல்வான்: "சித்ரா! நான் விரும்பியிருந்தால் உன்னைவிட 'மாடர்னா'ன பெண்ணைத் தேர்ந்தெடுத்து மணம் செய்துகொண்டிருக்கலாம். ஆனால், உன் அமைதியான முகமும், அதனூடே பிரகாசித்த உன் புத்திசாலித்தனமும் என்னை வசிகரித்து அடிமை கொண்டுவிட்டன."

ஆனால், அதே நேரத்தில் அவன் சொல்லும் அடுத்த வார்த்தைகள்: "சித்ரா, டார்லிங்! நான் 'ஆர்மி'யிலே ரொம்ப வருடங்களாக இருந்துவிட்டேன். எனக்கு எத்தனையோ பழக்கங்கள் உண்டு. நீ என்னைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும்."



ஏன் புரிந்துகொள்ளவில்லை? கல்யாணமான சில நாட்களிலேயே புரிந்துகொண்டுவிட்டாள் சித்ரா.

மாலை ஏழு மணி ஆனவுடனேயே ஒரு மாறுதல் தெரிய ஆரம்பிக்கும் பாஸ்கரிடம். பேசிக்கொண்டே இருப்பவன் 'சட்'டென்று இருக்கை கொள்ளாமல் தவிக்க ஆரம்பித்துவிடுவான்.

இந்த மாலை ஏழு மணி அவஸ்தை, ஒரே ஒரு 'பெக்' மதுவுக்காகத்தான்.

பாஸ்கர் ஓர் 'இரட்டை மனிதன்.' அதாவது, மாலை ஏழு மணி வரை சித்ராவின் அன்புக் காதல் கணவன். அதற்குமேல் குடிகாரன்.

பகல் நேரங்களில் மனைவியை நான்குபேர் முன்னிலையில் 'டார்லிங்' என்றுகூட அழைக்காமல் கண்ணியமாக நடந்துகொள்பவன், மாலையில் ஐம்பது பேர் இருந்தாலும், அவர்கள் நடுவில் அவளைக் கட்டிக் கொள்வதும், கையைப் பிடித்து இழுப்பதும்... கண்றாவி! ஏன், பிற ஆடவர்களுடைய மனைவிகளிடம்கூட, மரியாதையில்லாமல், "நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்! உங்கள் உடற்கட்டு எப்படி இருக்கிறது!" என்று மிகக் கீழ்த்தரமாகக்கூட புலம்பிக்கொண்டு உரையாட ஆரம்பித்துவிடுவான். விக்கி விறைத்துப்போய் நிற்பாள் சித்ரா. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், நிதானப் புத்தியை இழந்து, குடிவெறியில் உளறிக்கொண்டிருக்கும் மனிதனிடம் எதைச் சொல்லுவது? எப்படித் திருத்துவது!

நெஞ்சுக்குள்ளேயே ஊமைக்குரல் எடுத்து அழுது கொண்டிருப்பாள். மறுநாள் காலையில் அவனைக்

கோபிக்கலாம் என்றால்கூட சந்தர்ப்பம் கிடைக்காது. அவளை முந்திக்கொண்டு, "சித்ரா மைடியர், வந்து... உன் மனம் புண்படும்படியாக நடந்ததுக்கு மன்னித்துக் கொள்!" என்பான். உண்மையாகவே அவனைக் கெடுக்கும் குடி அரக்கனை ஒழிக்காதவரை விமோசனம் இல்லை!

அவனோடு விருந்துக்குப் போகும் ஒவ்வொரு நாளும் நரக வேதனைதான். புறப்படும் வரை சித்ரா அவனுக்கு உபதேசிப்பாள்: 'குடிக்காதீர்கள் - பிற பெண்களிடம் அகௌரவமாக நடந்துகொள்ளாதீர்கள்' என்று. 'சரி சரி' என்று தலையை ஆட்டிக்கொண்டே இருப்பான். அங்கே போனதும், மது விளையாட்டு... கோரம்!

இன்று ஒரு விருந்துக்குப் போவதற்காகத்தான் அலங்கரித்துக்கொண்டிருந்தாள் சித்ரா. உண்மையில் அந்தப் 'பார்ட்டி'க்குப் போகவே விருப்பமில்லை அவளுக்கு.

தினமும் நடக்கும் நாடகம்தான் இன்றும் நடக்கப் போகிறது!

'என் வாழ்க்கை இப்படிப் போலியானதாக ஆகி விட்டதே!' என்று நினைத்த மாத்திரத்தில் அவள் கண்ணில் நீர் ததும்பியது.

குனிந்து, கோத்துக்கொண்டு முத்தாக உருண்ட கண்ணீரைத் துடைத்துக்கொள்வதற்கும், கம்பீரமே உருவாக அவள் கணவன் 'மேஜர்' உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.



மனைவியின் கண்ணீரைக் கண்ட பாஸ்கர், ஏதோ என்னவோ என்று துடிதுடித்து "என்ன சித்ரா!" என்று ஆதுரத்துடன் கேட்டான்.

கணவனின் ஆழ்ந்த அன்பை அந்தக் குரலில் உணர்ந்தவளாக சித்ரா, "பாஸு! நாம் இன்று அந்த 'பார்ட்டி'க்குப் போகத்தான் வேண்டுமா?" என்று கேட்டாள்.

பாஸ்கர் கனிவுடன் அவளை நோக்கி, "சித்ரா! உன் வேதனை எனக்கு நன்கு புரிகிறது. நீயும் ஒரு சின்னப் பெண்தானே! எவ்வளவுதான் பொறுமையாக உன்னால் இருக்க முடியும்?" என்று சொன்னவன், சிறிது மௌனத்திற்குப் பிறகு தனக்குள் ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் தலையை ஆட்டிக்கொண்டு—

"சித்ரா - இன்னிக்கு 'பார்ட்டி'க்கு நாம் போகத்தான் வேண்டும். கர்னல் தன் குடும்பத்துடன் அங்கு வரப் போகிறார்; அதனால்தான். ஆனால், டார்லிங், நான் இன்றைக்கு நிச்சயம் ஒழுங்காக நடந்துகொள்வேன். நீ என்னைக் கண்டிப்பாக நம்ப வேண்டும், டியர். 'பார்ட்டி'க்குப் போன அரைமணியில் உனக்குத் தலையை வலிப்பதாக நீ என்னிடம் சொல். உடனே நாம் வீட்டிற்கு வந்துவிடலாம். சரிதானா சித்ரா? உண்மையாக, சத்தியமாக, நான் இப்பொழுது சுயநினைவுடன் இருக்கும்போது சொல்லும் வார்த்தை இது!" குரல் கரகரக்கக் கூறியவன், அவள் வகிட்டில் ஒரு முத்தத்தையும் பதித்தான்.

சித்ராவுக்கு மேனியெல்லாம் புல்லரித்தது! 'கடைசியில் கடவுள் கண்ணைத் திறந்து பார்த்துவிட்டாரா? கணவன் குடிப்பதில்லை என்று சத்தியம் செய்து விட்டாரே! விடிவெள்ளி தோன்றிவிட்டதே!'

'பார்ட்டி'யில் அரைமணி வரை பாஸ்கர், மேஜர் பாஸ்கராகத்தான் இருந்தான். சிறிது நேரத்தில் கர்னலும் அவர் அழகிய பெண்ணும் வந்தவுடன்தான் எல்லாமே மாறிவிட்டது! சித்ராவிடமிருந்து பாஸுவை அந்தப் பெண் பிரித்துத் தன்னோடு நடனமாட அழைத்துச் சென்றாள். அவள் அவனுடைய கல்லூரி காலத்து 'கேர்ள் ஃபிரெண்டாம்!'

அதன்பிறகு ஒருமணி நேரம் கழித்துத்தான் சித்ரா கணவனையே பார்க்க முடிந்தது!

அதற்குள் அவன் நான்கு, ஐந்து 'பெக்' விஸ்கி குடித்துவிட்டிருந்தான்! கர்னலின் பெண் ஆஷாவின் இடையைச் சுற்றிக் கையைப் போட்டுக்கொண்டிருந்த வனிடம் நெருங்கிய சித்ரா, "பாஸு! எனக்குத் தலையை வலிக்கிறது. வீட்டுக்குப் போகலாமா?" என்று கேட்டாள்.

பொங்கியதே கோபம் பாஸுவுக்கு! ஏற்கெனவே குடியால் சிவந்த கண்கள் இன்னும் கோபத்தால் சிவந்தன. "ஏய் சித்ரா, இது என்ன காரியம்? பார்ட்டியில் இடையில் போவதாவது! தலைவலியாம், தலைவலி!"

சித்ராவின் இதயம் அப்படியே நொறுங்கிப்போய் விட்டது!

அவன் அவளுக்குக் கொடுத்த சத்தியம்? அதுவும் விஸ்கி பாட்டிலோடு மோதி நொறுங்கியே போய் விட்டது!

பிறகு... பிறகென்ன? தினமும் நடக்கும் கதைதான்...

வருகிறீர்களா? நாம் குருஸ்வாமி தீட்சிதர் வீட்டில் என்ன நடக்கின்றது என்று போய்ப் பார்க்கலாம்!



வெங்கடேச அக்ரஹாரத்தில், அதோ அந்தக் கோடியில் ஓடு வேய்ந்த ஒரு வீடு தெரிகிறதே அதுதான் பண்டித சிரோமணி, வேதவித்து குருஸ்வாமி தீட்சிதர் வீடு.

இருபது வருடங்களாக அவர் அந்த வீட்டில்தான் தன் தர்மபத்தினி காமாட்சியுடனும் ஒரே புத்திரன் ராகவனுடனும் இருந்துவந்தார். ராகவன் பட்டப் படிப்பை முடித்துவிட்டு வடக்கே வேலையாகப் போனபின், அவரும் மனைவியும்தாம் அங்கிருக்கிறார்கள்.

வீட்டில் எப்பவும் பஜனை; எந்நேரமும் வேத கோஷங்கள்தான்!

அவருக்கு என்றைக்குமே 'ஓஹோ' என்ற பெயர்தான் உண்டே தவிர, வருமானம் அப்படி ஒன்றும் சொல்லும் படியாக இருந்ததில்லை. அதிலும் இடையில் கொஞ்சம் சிரமம். வியாதியில் படுத்ததால் வரும்படி குறைந்து போயிற்று.

வேலைக்குப் போன பையன், மாதம்தோறும் பணம் அனுப்புவதைக் கொண்டுதான் காலட்சேபம் நடக்கிறது.

அன்று தீட்சிதரின் மனைவி காமு ஏதோ சொல்லத் தயங்குகிற மாதிரி அருகிலேயே நின்றாள்.

"என்ன காமு?"

"இல்லே, வீட்டுக்காரர் வந்திருந்தார். உங்களைப் பார்க்கணும்னு சொன்னார்... திரும்ப இப்ப வரேன்னும் சொல்லிட்டுப் போயிருக்கார்" என்றாள்.

காமுவுக்குத் தெரியும்; தீட்சிதருக்கும் தெரியும், ஏன் அவர் அங்கு வரப்போகிறார் என்று. எல்லாம் வாடகை

பாக்கிதான். மூன்று மாதமாகத் தேங்கிவிட்டது. அதில் வீட்டுக்காரரைவிடத் திட்சிதருக்குத்தான் அதிக மன உளைச்சல்.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தவர் திடீரென்று, "காமு, பையன்கிட்டேயிருந்து ஏதாவது?" என்றார் மெதுவாக. 'மணியார்டர் வந்ததா?' என்பதைத்தான் அப்படிக் கேட்கிறார் என்று புரிந்துகொண்ட காமு, "இல்லை" என்றாள்.

'ஏன் இந்தத் தடவை இப்படி?' என்று அவர்கள் இருவருக்குமே புரியவில்லை. தேதி பத்து ஆகியும் பிள்ளை பணம் அனுப்பாமல் இருந்ததே இல்லையே!

திடீரென்று "ஸார், தந்தி!" என்ற குரல் வந்தது.

அவசரமாகக் கையெழுத்திட்டு வாங்கி, தந்தியைப் பிரித்தார். "அப்பா பணத்தை இன்று 'ஏர்மெயிலி'ல் அனுப்பியிருக்கிறேன். தாமதத்திற்கு மன்னிக்கவும். நாளை லெட்டரில் எல்லா விவரங்களையும் எழுதுகிறேன் - ராகவன்."

ஒரே சந்தோஷம் திட்சிதருக்கு. "காமு! நம்ப பிள்ளை நம்ப வயத்துலே பாலை வார்த்துட்டாண்டீ! பணம் நாளைக்கு வந்துவிடும்" என்று உற்சாகமாகக் கூறியவர், வாசலில் நிழலாடுவதைப் பார்த்து நிமிர்ந்தார்.

வந்தவர் வீட்டுக்காரர்தான்!

"வாருங்கோ. இப்பத்தான் இவ சொன்னா. உட்காருங்கோ..." என்று ஊஞ்சலைத் தட்டிக் காண்பித்தார்.

வீட்டுக்காரருக்குத் திட்சிதர் மேல் மிகுந்த மரியாதை உண்டு. தீட்சிதரின் பக்தி, வேதஞானம், ஒழுக்கம்



எல்லாம் அப்படி உன்னதமானவை. எனவே ரொம்பப் பவ்யமாகவே பேச்சை எடுத்தார் வீட்டுக்காரர்.

"திட்சிதர் ஸ்வாமி! எனக்கும் இந்த மாசம் கஷ்டம் தாங்கலை. அதனால்தான் ஒங்ககிட்டே வந்திருக்கேன். ஸ்வாமி சிரமம் கொடுக்கிறதா நெனைச்சுக்காதிங்கோ!"

"நீங்க உத்தமர், வேய். மஹா உத்தமர். நீங்க கேட்கும் வரைக்கும் வெச்சுண்ட நான்தான், ஓய் - சின்னவன். பிள்ளை நிச்சயமா நாளைக்குப் பணம் அனுப்பிச்சுடுவான். நாளைக்கு இதே நேரத்திலே நான் ஒங்களுக்குப் பணம் குடுத்திடறேன், ஓய். சத்தியமா குடுத்திடறேன் - நீங்க என்னை நம்புங்கோ, ஓய்" என்று ஆவேசம் வந்தவர்போல் கூறினார்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவர் மனைவி காமு அரண்டுவிட்டாள். 'கடவுளே! என்ன இவர் வாயிலிருந்து இப்படிப்பட்ட மஹா பெரிய வார்த்தை வந்துடுத்து' என்று!

வீட்டுக்காரர் போய் வெகு நேரமாகியும் கூட அவர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசவேயில்லை.

'சத்தியம்! அம்மாடீ! எவ்வளவு பெரிய வார்த்தை! இது லோகத்திலேயே பெரிசு இல்லையோ?' என்று தனக்குள்ளேயே புழுங்கினாள் காமாட்சி.

மறுநாள் வெள்ளிக்கிழமை. தூங்கி எழுந்ததுமே காமுவுக்கு 'இன்று எல்லாம் நல்லபடியாக நடக்க வேணுமே!' என்ற கவலைதான்.

மத்தியானம் மூன்று மணி வரை தபால்காரரை எதிர்பார்த்துக்கொண்டிருந்த குருஸ்வாமி தீட்சிதர்,

அவன் வராமல் போகவே, இனியும் அவன் வரமாட்டான் என்ற எண்ணத்தின் காரணமாக, "காமு! உன் கை வளையல்களைக் கழட்டிக் கொடு" என்றார்.

வெள்ளிக்கிழமை. சத்தியம் தவறாத தன் கணவர் இதுவரை செய்யாத காரியத்தைச் செய்யப் போகிறார் என்ற நினைப்பு காமாட்சியின் நெஞ்சை அடைத்தது. ஆயினும் சொன்ன வார்த்தையைக் காக்க வேண்டும் என்ற எண்ணமே பெரியதாகத் தோன்றியதால் 'சட்'டென்று வளையல்களை உருவி அவர் கையில் கொடுத்தாள்.

துண்டை உதறிப் போட்டுக்கொண்ட தீட்சிதர் 'மடமட'வென்று தெருவில் இறங்கி நடந்தார்.

ஆமாம், தெருவில் ஏனிந்தப் பரபரப்பு? கூட்டம் கூட்டமாக ஆங்காங்கு ஜனங்கள் நின்றுகொண்டு என்னமோ காரசாரமாக விவாதிக்கிறார்களே - ஏன் இதெல்லாம்? என்னவாயிற்று இவர்களுக்கு?

இந்த அமர்க்களமெல்லாம் முதலில் தீட்சிதருக்கு உறைக்கவேயில்லை. அவர் பிரச்னையே அவருள் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருந்தது.

மாடவீதியில் நுழைந்தவர், கடைகளெல்லாம் சாத்துப் பட்டுக் கிடந்ததைப் பார்த்தபோதுதான், தன் சூழ்நிலையை உணர்ந்தவராக நின்றார்.

மார்வாடிக் கடையின் முன்பு வந்தவர், "ஏனய்யா கடையை மூடியிருக்கான்?" என்று பரபரக்கக் கேட்கவும் செய்தார்.

"இன்னா சார்! ஒனக்கு ஒண்ணுமே தெரியாதா? ஒரு தொழிலாளர் கோரிக்கைக்காக இன்றைக்கு நகர



மெங்கும் ஹர்த்தால், கடையடைப்பு" என்று தகவல் சொன்னார் ஒருவர்.

செயலிழந்து நின்றார் தீட்சிதர். மூடியிருந்த மார்வாடிக் கடைக்கதவு மேலேயே அவர் கண்கள் குத்திட்டு நின்றன.

"சத்தியமாய் கொடுத்திடறேன், ஓய்!"-இதுவே ஆயிரமாயிரம் மின்னல்கள்போல் மின்னி, கோடானுகோடி இடிகள்போல இடிப்பதை அவர் உணர்ந்தார். அவர் ரத்த நாளங்களெல்லாம் 'படீர் படீர்' என்று துடிப்பதைப் போலிருந்தது.

"என் சத்தியம், என் சத்தியம்!" என்று உரக்க அலறியவர், "ஐயா! கதவைத் திற, சேட்டு ஐயா! கதவைத் திற!" என்று கூறியவாறே ஓங்கி ஓங்கி அந்தக் கடையின் கதவுகளைக் குத்தினார்.

பலன் ஒன்றும் இல்லாமல் போகவே வெறி பிடித்தவர் போல அடுத்த தெரு, அடுத்த தெரு, இன்னும் அதற்கு அடுத்த தெரு என்று ஓடி ஒவ்வொரு கடை வாயிலிலும் நின்றுகொண்டு, "என் சத்தியத்தை நான் காப்பாத்தணும். கதவைத் திற, ஐயா!" என்று புத்தி பேதலித்து 'ஓ'வென்று கதறினார்.

அவரது பயித்தியக்காரச் செயலைப் பார்த்த ஜனங்கள் அவர் உள்மன வெறியைப் புரிந்துகொள்ளாதவர்களாக அவர்மீது கேலி வார்த்தைகளையும் வசைமொழிகளையும் வீசினர். ஒருவன் நிஷ்டூரமாக, "இன்னா சார்? பாத்தா படிச்சவன் மாதிரி இருக்கிறே; ஆனா நடத்தை அப்படி இல்லையே? ஏன் இப்படி ஓலமிடறே! ஒருநாள் பொறுத்தால், குடியா முழுகிப்போகும்? அவனவன் பொது நன்மைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறான். அது தெரியாம நீ இன்னாடான்னா பணம்

வேணும்னு கெடந்து குதிக்கிறேயே! போ அப்பால..." என்று விரட்டினான்.

தீட்சிதருக்கு மானமே போயிற்று. சத்தியசந்தன், சொன்ன வாக்குத் தவறாதவன் என்று எல்லோராலும் புகழப்பட்ட வேதவித்து, செய்வதறியாமல் தட்டுத் தடுமாறிக்கொண்டே திரும்ப வீட்டிற்கு வந்தார்.

அவர் மனம், அவர் உடலின் ஒவ்வோர் அணு எல்லாம் துடிதுடித்து, தீயில் சுட்டாற்போல் கருகுவதை உணர்ந்தார்.

வீட்டிற்குள் நுழைந்தவர் கண்ணில் காமு தெரிந்தாள். "காமு! பணம் கிடைக்கலைடீ! வீட்டுக்காரர் வந்தா நா என்ன சொல்லுவேன்? நா சத்தியம் தவறிட்டேண்டீ!" என்று அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு கூறியவர், 'தடால்' என்று வேரறுந்த மரம்போல் கீழே சாய்ந்தார்.

மானஸ்தர் அல்லவா? சொன்ன வாக்கைக் காக்க முடியாமல் போகவே, அதற்கு ஈடாக, தன் உயிரையே தந்துவிட்டார்!

சத்தியம் தவறாமல் வாழ்ந்துவந்த மகாபுருஷர், தன் சத்தியம் தவறியபின் ஒரு விநாடிகூட வாழ விரும்பாமல், தன் சத்திய வாழ்க்கையை முடித்துக்கொண்டார்!

இப்படி ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு மனிதராலும், ஒவ்வொரு தினுசாகக் கௌரவிக்கப்படும் அந்தச் சத்தியம் 'இந்த மனிதர்களை எல்லாம்தான் எப்படி, எப்படி ஆட்டி வைக்கிறோம்' என்ற எக்களிப்பில் 'ஓஹோஹோ' என்று தனக்குத்தானே சிரிக்கிறது!

# உனக்குத் தெரியுமா?

**என்னைச்** சுற்றிலும் 'ஓ'வென்று இருள் - காரிருள் - சூழ்ந்திருப்பது எனக்கு நன்றாகப் புரிகிறது. நன்கு பழக்கப்பட்ட இடமாதலால் இந்தச் சூழ்நிலையிலும் உன்னை நேராக என்னால் பார்க்க முடிகிறது.

ஓ! நீதான் எவ்வளவு அழகாக இருக்கிறாய்? உன் கூர்மையான பரந்த கண்களை நேருக்கு நேர் காணும் பொழுது - அம்மா! இதென்ன இவ்வளவு ஆனந்தமான உணர்ச்சி! சக்தீ! ஒரு வேடிக்கை கவனித்தாயா? முன் பெல்லாம் உன்னை - உன் கண்களைச் சந்திக்கவே பயப்பட்டவன், இன்று உன் கண்களையே உற்று நோக்கிக்கொண்டு, அதை ஆனந்தம் என்கிறேனே - இதைக் கவனித்தாயா?

இன்று மத்தியானம் வந்து இங்கு உட்கார்ந்தவன் தான்; இன்னும் இந்த இடத்தை விட்டு எழவில்லை. இந்த இருட்டில், அமைதியான சூழ்நிலையில், கடிகாரம் போடும் சப்தமும், எங்கோ ஒரு சுவர்க்கோழி கத்துவதும் தான் எனக்குக் கேட்கிறது. பக்கத்து வீட்டுக்காரன், எதிர் வீட்டுக்காரன், அவனுக்கும் அடுத்த வீட்டுக்காரன், ஏன் - இந்த ஊரில், நாட்டில் உள்ள அனைவருமே ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருப்பார்கள். தினமும், 'ஐயோ! அனைவரும் அவரவர் துணைகளுடன் சேர்ந்து உறங்கு

கிறார்களே. நான் மட்டும் இப்படித் தன்னந்தனியாக இருக்கிறேனே. எனக்கு ஒருவருமே இல்லையே?' என்று பாடும் பல்லவியை இன்று மட்டும் ஏன் என் மனம் பாடவில்லை? தனிமையில் இனிமை காண்கிறேனே, இது ஏன் தெரியுமா? எனக்கு ஞானம் பிறந்துவிட்டதடீ சக்தி! புத்தி தெளிந்துவிட்டது! புத்தனுக்குப் போதி மரத்தின் கீழ் ஞானம் பிறந்தது என்பார்கள். எனக்கு?

எனக்கு இன்று குதிரைப் பந்தய மைதானத்தில் ஞானம் பிறந்தது. அதுவும் எப்படி? லட்சோப லட்ச மின்னல்கள் ஒரே சமயத்தில் மின்னினால், எப்படிப் பட்ட அதிர்ச்சி உண்டாகும்? அப்படி, ரூபாய் ஐந்நூறை நான்காவது ரேஸில் கட்டிவிட்டு நின்றுகொண்டிருந்த என் காதுக்குள் அசரீரிபோல இடி ஒன்று முழங்கியது. 'யாருக்காகடா இப்படிக் கெட்டு அலைகிறாய்-இது வரையில் எத்தனையோ செய்தாயே, அவற்றால் என்ன சுகமடா கண்டாய்? வாழ்க்கையில் முக்கியமானவற்றை யெல்லாம் விட்டுவிட்டு, இங்கு ஏதோ 'கோட்டை'யைப் பிடிக்கப்போகிறவன்போல் வந்து நிற்கிறாயே, மதி கெட்டவனே! திருந்து!' என்று அந்த இடி முழங்கி என்னை உலுக்கியது.

'யாரது?' என்று திரும்பித்திரும்பிப் பார்த்தால் ஒருவருமில்லை. மேலே ஆகாயம் நிர்மலமாக இருந்தது. ஆனால் இதனூடே, பலிபீடத்திற்குப் போகும் ஆட்டு மந்தையைப் போல ஜனங்கள் தலைகால் புரியாமல் ஆளுக்கொரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, வாழ்க்கையில் ஒரு குறிக்கோளும் இல்லாதவர்களாகக் கூச்சல் போட்டுக்கொண்டு, அந்த இடத்தையே இரண்டாக்கிக்கொண்டிருந்தார்கள்.



இதைப் பார்த்தேன் - குபீரென்று என்னுள் ஒரு வேகம். சக்தி! நீ புரிந்துகொள்வாய் என்று நினைக்கிறேன். ஏனோ அந்தக் கூட்டம் அனைத்தையும் அடித்துத் துரத்தவேண்டும்போல ஓர் ஆவேசம்! அதுவரை நானும் அவர்களில் ஒருவனாக இருந்திருக்கிறேன் என்ற நினைப்பே குமட்டியது. அந்த நிர்மலமான ஆகாயத்தில் பறந்து, மேலேமேலே சென்று அப்படியே காற்றோடு காற்றாக ஐக்கியமாகிவிடவேண்டும் போலவும் தோன்றியது. அப்படியே புயலென வெளியில் வந்தேன். என்கூட வந்த சில 'பெரிய மனிதர்கள்,' "எங்கே? எங்கே சார் போகிறீர்கள்?" என்பதையும் லட்சியம் செய்யாமல் வண்டியில் அமர்ந்து அதை ஓட்டினேன். எங்கு போகப்போகிறோம் என்றுகூடத் தோன்றவில்லை! ஏதோ ஒன்று என்னைக் காந்தம்போலே இழுப்பதை உணர்ந்தேன். வண்டி தானாகத்தான் ஓடியதுபோலும்! கடைசியில் எங்கு வந்திருக்கிறோம் என்று பார்த்தால், இங்கு, உன் எதிரில் வந்து நிற்கிறேன்.

சக்தி! உன்னையே பார்த்துக்கொண்டு மெய்மறந்து உட்கார்ந்திருக்கிறேனே - அப்படி உன்னிடம் என்ன இருக்கிறது! நீ என்னுள் புகுந்துவிட்டாய். ஆழமாக ஊன்றிக் கொண்டுவிட்டாய். இனி இந்த 'பக்தி' மேலும் மேலும் ஆலவிருட்சமாக வளரத்தான் செய்யுமே தவிர குறையாது. என்னை மாற்றிவிட்டாய், அம்மா!

உனக்கு நினைவிருக்கிறதா - உன்னை முதன்முதலில் எப்பொழுது பார்த்தேனென்று? ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்னால், ஒருநாள் வழக்கம்போல் என் வெளிநாட்டு நண்பர்கள் சிலருடன் கடலில் குளித்துவிட்டு அடையாறு வழியாகத் திரும்பி வரும்போது, ஒருவன், வழியிலுள்ள

சித்திரக்கூடத்தைப் பார்க்கவேண்டும் என்று சொன்னான். 'சரி' என்று அனைவரும் இறங்கி உள்ளே சென்றோம்.

முன்னறையில் உள்ள சித்திர சிற்பங்களையெல்லாம் பார்த்து அனுபவித்துக்கொண்டே வந்தவன், 'சட்'டென்று உன்னைக் கண்டேன். உன் சிவந்த முகமும், சிறுத்த உதடுகளும், அகன்ற கண்களும்... 'ஓ! இதுதான் தெய்வீக அழகா? உன் கண்களிலிருந்து காருண்யம் பெருகியதா, அல்லது கோபம் பெருகியதா?' என்று சொல்ல முடியாத படி ஒரு பாவம். இந்தப் பக்கம் நின்று பார்த்தால் நீ அழகாகச் சிரிப்பதுபோல் தோன்றினாய்; அந்தப் பக்கம் போய்ப் பார்த்தாலோ கோபம் தெறித்து என்னை எரித்து விடுவது போலத் தோன்றியது. 'இது என்ன அருமை! என்ன வேடிக்கை!' என்று எண்ணிக்கொண்டே உன் அருகில் வந்து உன்னை மெதுவாகத் தீண்டினேன். ஆஹா! பாரதி பாடினானே, 'தீக்குள் விரலை வைத்தால், உன்னைத் தீண்டும் இன்பம் கிடைக்குதையே, நந்தலாலா' என்று, அது இந்த உணர்ச்சிதான் என்றது என் மனம்.

'என்னை உன் உடமையாக்கிக்கொண்டுவிடு' என்று நீ என்னிடம் சொல்வது போல ஒரு பிரமை. அதே சமயத்தில் 'இவளை உன் அருகில் வைத்துக்கொள்ளாதே! உன் உல்லாச வாழ்க்கையை நீ இழப்பது நிச்சயம்' என்று என்னுள் ஏதோ ஒன்று சொல்லிற்று. ஆனாலும் உன்னை வாங்கி - ஆமாம், விலை கொடுத்து வாங்கும் ஒரு சித்திரம்தானே நீ? - என் வீட்டின் வரவேற்பு அறைச்சுவரில் மாட்டினேன். அதன்பிறகு வீட்டிற்கு வருபவர்கள் எல்லாம், 'என்ன சார் இது? துர்கையின் உருவத்தை இவ்வளவு பெரிதாக வரைந்து, கண் எதிரில்



மாட்டி வைத்திருக்கிறீர்களே! உங்களுக்கு அதைப் பார்த்தால் பயங்கரமாக, பயமாக இல்லை?" என்று கேட்டபோது எனக்கு சிரிப்புத்தான் வந்தது; உன்னை நான் சித்திரமாக, ஓர் அழகிய படமாகத்தான் அங்கு வைத்திருந்தேனே தவிர கடவுளாகவோ, துர்கையாகவோ துளியும் நினைக்கவில்லையே! அப்படி இருக்கையில் உன்னைக் கண்டு நான் ஏன் பயப்பட வேண்டும்?

சக்தி! நான் எப்படிப்பட்டவன் தெரியுமா? என்னை உனக்கு இந்த ஆறுமாதமாகத்தான் தெரியும். ஆனால், அதற்கு முந்தைய - நீ இந்த வீட்டுக்கு வருவதற்கு முந்தைய பழங்கதை உனக்குத் தெரியுமா? சிறு வயதிலேயே அறிவும் ஆற்றலும் நிறைந்தவன் என்று எல்லோராலும் புகழப்பட்டவன். ஏழ்மையிலே அடி பட்டதால், வாழ்க்கையில் உயர வேண்டும் என்னும் வேகம் என்னுள் பேயாட்டம் போட்டுப் பறந்ததுண்டு. இரவல் புத்தகங்கள் வாங்கிப் படித்தேன்.

பணத்தில்தான் பிறருக்குச் சமானமாக இல்லை. அறிவிலாவது அவர்களையெல்லாம் மிஞ்ச வேண்டும் என்ற ஆவலில் நான் கரைத்துக் குடித்த மஹா காவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், கதைகள்தான் எத்தனை, எத்தனை! அந்த வயதில் நான் எத்தனை பாஷைகள் அறிந்து வைத்திருந்தேன்!

என் இளம் பிராயத்தில் உன்னிடமும், மற்ற கடவுளிடத்திலும் நிரம்ப பக்தி வைத்திருந்தவன்தானே அம்மா நான்! அப்பொழுதெல்லாம் வெள்ளை மனசோடு, எத்தனை ஸ்லோகங்களைப் பாராயணம், வியாக்கியானம் செய்வேன்!

எனக்கு அப்போது இருபத்து மூன்று அல்லது இருபத்து நான்கு வயது இருக்கும். ராதாவை நான் முதன்முதலில் அப்போதுதான் சந்தித்தேன். ஓ! எத்தனை இன்பமான நாட்கள் அவை! எங்களிருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் ஆனவுடன் 'எனக்கு நிகரில்லை' என்று இறுமாந்திருந்தேன். ஆனால், திருமணத்துக்குப் பத்து நாட்கள் முன்பு ஒரு கார் விபத்து மூலம் அவளை என்னிடமிருந்து பறித்துக்கொண்டாய். நான் மட்டுமல்ல, இந்த ஊரே அல்லவா அவளுக்காக அழுதது!

அதன்பிறகுகூட நான் கெட்டு அழியவில்லையே, சக்தி! உலகத்தையே வெறுத்து வாழ்ந்துகொண்டிருந்தேன்.

மறுபடியும் ஆறு வருடங்கள் கழித்து நீ என்னுடன் மீண்டும் விளையாட எண்ணினாய் போலும்! அதனால் தான் நான் சாந்தியைக் காணவைத்தாய். அவள் தூய அன்பு மீண்டும் என் நெஞ்சில் பாசத்தைத் துளிர்க்க வைத்தது. அவள் காதல்தான் எத்தனை தெய்வீகமானதம்மா! அவளை மணந்துகொண்டு நான் வாழ்ந்த நான்கு வருடங்களையும் நிச்சயமாக சொர்க்க வாழ்க்கைக்கு ஒப்பிடலாம். எங்கள் அன்பின் பரிசாகத் தாரா உதித்தாள். ஆனால் அதிலிருந்தே சாந்தியின் உடல் பலவீனமடைய ஆரம்பித்துவிட்டது. தாராவிற்கு நாலரை வயதாவதற்குள் சாந்தியையும் நீ அழைத்துக்கொண்டு விட்டாய். எனக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது. ஒரு மாதம் வரை அழுது திரிந்தவனுக்கு விரக்தி வர ஆரம்பித்தது. 'என்ன நேர்மை! என்ன நாணயம்! இதுதான் அவற்றிற்குக் கடவுள் வழங்கும் பரிசா?' என்ற ஆவேசக் குரல் என்னுள் 'ஓ'வென்று அலறிக்கொண்டு



எழுந்தது. நல்லதையே செய்து வாழ்ந்தது போதும், இனி வேறு வழியாக நடக்கத் தீர்மானித்தேன். அதன் பிறகுதான் ஒரே பேய் ஆட்டம்.

அந்தச் சின்னஞ்சிறு குழந்தை தாராவை வெறுத்து ஒதுக்கினேனே, அது உனக்குத் தெரியுமா?

அந்தப் 'பிஞ்சு' என்ன செய்தது, என் வெறுப்பைத் தேடிக்கொள்ள? 'அப்பா, அப்பா' என்று இரு கரங்களையும் நீட்டிக்கொண்டு ஓடி வருமே - அதுதான் அது செய்த குற்றம் - அதற்கு ஒருநாளாவது என் அன்பைக் காட்டியிருக்கிறேனா? ஊஹூம் கிடையாது. இதெல்லாம் பழங்கதை. இதற்கப்புறம்தான் நீ என் வீட்டுக்கு வந்துவிட்டாயே, சக்தி! நடப்பதையெல்லாம் நீயே கூட இருந்து பார்த்துக்கொண்டுதானேவருகிறாய்?

நீ என் வீட்டுக்குக் குடிவந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மாறுதல் ஏற்படத்தான் செய்தது அல்லவா? நன்றாகக் குடித்துவிட்டு, வழியில் எவனுடனாவது சண்டை போட்டுக் கத்தியபடி வீட்டில் நுழைந்தால், நேராக நீ கண்ணில் தெரிவாய். முதல்நாள் அப்படி வந்து உன்னைச் சந்தித்தபோது, ஏதோ ஒரு பழுத்த இரும்புக் கம்பியை என் இதயத்தில் இழுத்தாற்போல இருந்தது உன் பார்வை.

'அடச் சீ, சித்திரம்தானே' என்று ஒதுக்க முயன்றேன்-முடியவில்லை. அதற்குப் பிறகு உன்னைப்பற்றி நான் அதிகம் நினைக்க ஆரம்பித்தேன். உன்னை நினைக்கக் கூடாது என்று எண்ணஎண்ண, நீயே என்னுள் விசுவரூபம் எடுத்துக்கொண்டாய். பகல்வேளையில் நான்

சாதாரண மனிதனாக இருக்கும்போது உன் அருகில் வந்து நின்று பார்த்தால், நீ அழகாகச் சிரிப்பது போலத் தான் தோன்றும். ஆனால், இரவிலோ...? ஏன் அப்படி? எனக்கே புரியவில்லை.

ஒருநாள் 'ஒருத்தி'யை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தேனே, அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அவள் உள்ளே சுற்றுமுற்றும் பார்த்தவள், "ஐயோ! இதென்ன பயங்கரம் - முதலில் அதைக் கழற்றி எறியுங்கள்!" என்று உன்னைப் பார்த்துச் சொன்னாளே, அது நினைவிருக் கிறதா? உடனே நான் என்ன செய்தேன்?

"என்ன சொன்னாய்! பயங்கரமா, இவளா? வாயை மூடு!" என்று கத்தினேன்.

"இவளா? 'இது' என்று சொல்லுங்கள். ஒன்றும் புரியவில்லையா, அல்லது இன்றைக்குத் 'தண்ணி' அதிகமா?" என்று அவள் ஆங்கிலத்தில் என்னைக் கேலி செய்தவுடன், 'பளீ'ரென்று அறைந்து வெளியில் தள்ளி, "இனி என் முகத்தில் விழிக்காதே!" என்று சொல்லிப் போகச் சொன்னேனே; ஏன் இந்த ஆத்திரம் வந்தது, சக்தி!

ஒரு அரைமணி நேரம் கழித்து அந்த வேகம் அடங்கியபிறகு உன்னைப் பார்த்ததும் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அன்று 'இரவை'க் கெடுத்தவள் அல்லவா நீ! அன்று ஆரம்பித்ததுதான். பிறகு யாரிடம் போனாலும் உன் சிவந்த முகம் நடுவில் வருகிறாற்போல எனக்குத் தோன்றும். கொஞ்சம் கொஞ்சமாக நான் உனக்கு அடிமையாகிக்கொண்டுவந்தேன் என்பது எனக்கே புரிந்தது.



என்னுள் ஒரு பெரிய மாறுதல் போன மாதம் ஏற்பட்டதே, அது நன்றாக நினைவிருக்கிறது.

அன்று நான் 'அனுபமா' என்னும் சினிமா காணச் சென்றிருந்தேன். அந்தப் படம், தந்தையால் வெறுக்கப்படும் குழந்தையை மையமாகக் கொண்ட கதை. ஏனோ என் மனம் அக்குழந்தைக்குப் பதில் என் தாராவையே அந்த இடத்தில் வைத்துப் பார்த்தது. என் தாய் தாராவை என்னதான் நன்றாகக் கவனித்தாலும் அந்தக் குழந்தைக்கு என் அன்பு, அரவணைப்பு இல்லையே! இத்தனை வருடங்களாகத் தோன்றாத நினைப்பு அன்று மட்டும் என் மனத்தில் தோன்றுவானேன்? என் மனம் பலவீனமடைந்துவருகிறதா? அதற்குக் காரணம் 'நீதான் என்று என் மனம் சொல்லியது.

படம் முடிந்து வீட்டுக்கு வந்து உன்னைப் பார்த்தேன். உன் கண்ணில் கோபம் இல்லை - ஆனாலும் ஒரு வேதனை, வருத்தம். 'இப்படி இருக்கிறாயே-உனக்குப் போய் ஒரு குழந்தையைக் கொடுத்து, அவள் வாழ்க்கையைக் கெடுத்துவிட்டேனே' என்று நீ வருத்தப்படுவது போல இருந்தது. நேராக தாராவின் அறைக்குச் சென்று தூங்கிக்கொண்டிருந்த அந்த இளம் பிஞ்சின் அழகிய முகத்தைப் பார்த்தேன். அவளில் என் சாந்தியை, ராதாவை, ஏன் - உன்னையே, ஆமாம் சக்தி, உன்னையே கண்டேன். தாராவை அள்ளி எடுத்துக்கொண்டு 'ஓ' என்று வாய்விட்டு அழுதேன். அழஅழ மனச்சுமை கரைந்து, குறைந்தாற்போல் தோன்றியது. தாராவை எடுத்துக்கொண்டு என் அறைக்கு வந்துவிட்டேன். அன்றிலிருந்து தாரா என்னுடனே இருந்தாள். அன்று தானே உன்னையும் என் அறைக்கு அழைத்துவந்தேன்!

என் படுக்கைக்கு நேராக உன்னை மாட்டினேன். சில இரவுகள் எங்காவது எழுந்து போகவேண்டும்போலத் தோன்றினாலும் உன்னையும் தாராவையும் மாறிமாறிப் பார்த்து என்னை அடக்கிக்கொண்டேன்.

இப்போதெல்லாம் உன்னைப் பார்த்துக்கொண்டு இருப்பதில் ஒரு அமைதியைக் கண்டேன். உன்னை நான் சித்திரமாக மட்டும் கண்டது போய், வேறு உருவங்களாகவும் காண ஆரம்பித்தேனே, அது உனக்குத் தெரியுமா? பாரதிக்குத்தான் பராசக்தி வெவ்வேறு ரூபங்களில் தெரிவாளா? எனக்கும்தான் நீ விதவிதமாகத் தெரிந்தாய்.

நேற்று இரவு நடுநிசி. கண்கள் உறங்கவில்லை-'காலமெல்லாம் நான் இப்படியே தனியாக, சுமைதாங்கியாக இருக்க வேண்டியதுதானா' என்ற பாட்டையே மனம் மீண்டும்மீண்டும் பாடியது. ஒருவித சலிப்பு, கோபத்துடன் நிமிர்ந்தவன், உன் கண்களைப் பார்த்தேன்.

"அம்மா! இதென்ன? அந்தக் கண்களிலிருந்து நீயே ஓர் அழகிய பெண் உருவம் கொண்டு, பட்டாடை உடுத்தி, தலையில் மல்லிகை வைத்து, கண்ணெல்லாம் மனமாக, உடலெல்லாம் காதலாக நடந்து வருவது போல ஒரு பிரமை - என் வாழ்விலும் இப்படி ஒரு தென்றல் வீசப்போகிறது என்பதைக் குறிக்கத்தான் நீ இப்படி உருவம் கொண்டாயா, சக்தி! கலகலவென்று என் அருகில் வந்து சிரித்தாய் - 'பயப்படாதே, கண்ணா! இருள் உன் வாழ்விலிருந்து விலகிக்கொண்டிருக்கிறது. கட்டுண்டாய், பொறுத்திரு. பக்தி வெல்லும். இன்னும்



கொஞ்ச நாள்தான். பிறகு என்னுடன் என் கோட்டைக்குள் வந்துவிடு. அது அன்புக்கோட்டை; இடிந்து விழாது; போலியற்று நிஜ வாழ்க்கையை சந்தோஷமாக, ஆனந்தமாக வாழலாம், வா' என்று சொன்னாய்.

சக்தி! அது கனவா, அல்லது நனவா? யாரிடமாவது சொன்னால் நிச்சயம் சிரிப்பார்கள், இல்லையா? திக்பிரமை பிடித்தவன்போல் உன்னையே பார்த்துக்கொண்டிருந்தேன். மெல்லமெல்ல நீ திரும்ப உன் கண்ணுக்குள்ளே சென்றுவிட்டாய்.

'எனக்குப் பைத்தியம் பிடிக்கப்போகிறது, சக்தி! உன் பைத்தியம் - இல்லையென்றால் உன்மேல் காதல் கொள்வேனா? சித்திரத்தில் இருந்த பிரியம் இப்படி உன்னை ஓர் உருவமாக்கி, அதில் காதல் வேறு கொள்ளச் செய்கிறதே, இது ஏன்? என் வாழ்வு மீண்டும் மலரப் போகிறதா? சொல் சக்தி! சொல்' என்று நேற்றிரவு பூராவும் கதறிக்கொண்டு இருந்தேன். ஒன்றும் தெளிவாக இல்லை. இத்தனை நாளாக உருவாகியிருந்த குழப்பம், நேற்றுதான் உச்ச நிலையை அடைந்தது.

இன்று காலையிலிருந்து உடல், மனம் எல்லாமே மரத்துப் போய்விட்டாற்போல் இருந்தன. அப்பொழுதுதான் சில 'பெரிய மனிதர்கள்' என் வீட்டிற்கு வந்து இன்று குதிரைப் பந்தயத்திற்குக் கண்டிப்பாகப் போக வேண்டும் என்றார்கள். போனதுதான் எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது!

போலிச் சிரிப்பும், பேச்சுமாய் அங்குள்ள பெண்களைப் பற்றியோ, அல்லது, அவர்கள் உடுத்தியிருக்கும் உடையைப் பற்றியோ பேசிக்கொண்டிருந்த கூட்டத்தில்

ஒருவனாக நானும் இருந்தேன். திடீரென்று ஏதோ ஒன்று மனதுக்குள் முறிந்து விழுந்ததைப்போல் எனக்குத் தோன்றியது; அதேநேரத்தில் கோடானுகோடி இடிகள் இடித்து, லட்சோப லட்சம் மின்னல்கள் மின்னின. உடம்பிலே மின்சாரம் பாய்ந்து தீயவை எல்லாம் கருகி, பழையதெல்லாம் அடியோடு அழிந்துவிட்டாற்போன்ற உணர்ச்சி - நீ என்னுள் புகுந்து விட்டாய் என்பதை உணர்ந்தேன்.

'இதை உணர இவ்வளவு காலமா, இத்தனை நாட்கள் தேவையா?' என்று நீ கேட்கலாம், சக்தி! நான் சாதாரண மனிதன்தானே, அம்மா!

'சௌந்தரிய லஹரி'யிலிருந்து, 'சிவன் சக்தியுடன் சேர்ந்தால்தான் சக்தன் ஆகிறான்; இல்லாவிட்டால் அவனால் துரும்பையும் அசைக்க முடியாது' என்னும் முதல் சுலோகத்தை ஆயிரம் பேருக்காவது விளக்கிச் சொல்லியிருக்கும் நான், அதை எனக்கு நானே உணர இத்தனை நாட்கள் ஆகத்தான் ஆயிற்று.

இன்று உன்னுடன் சேர்ந்துவிட்டேன். இனி நான் 'சக்தன்' ஆவேனா? சொல், சக்தி! இது உனக்குத் தெரியுமா?

# உனக்குக் கேட்கிறதா, உமா?

கல்லாய், மரமாய், ஜடமாய், இடித்த புளிபோல் அமர்ந்திருந்தாள், ராதிகா. அம்புபட்ட புறாபோல் துடித்தது, அவள் உள்ளம். தன்னைவிட இரண்டு வயது சின்னவளாகப் பிறந்து, சேர்ந்தே வளர்ந்த அவளுடைய தங்கை உமா, அவளிடமிருந்து பிரிந்து போனதனால் அவள் உள்ளம் மட்டுமல்ல; உடம்பும் நொந்து வலித்தது.

உமா போய்த்தான்விட்டாள்! அவளைச் சிதையிலிட்டு எரித்தது; எஞ்சிய சாம்பலைத் தண்ணீரோடு தண்ணீராகக் கரைத்தது - எல்லாமே ஒரு பயங்கரக் கனவாகத்தான் தோன்றியது ராதிகாவுக்கு.

அவள் மடியில் உமாவின் டைரி கிடந்தது. அன்று காலையில்தான் உமாவின் அன்புக் கணவன் சுந்தர் அந்த டைரியைக் கொண்டுவந்து ராதிகாவிடம் கொடுத்துவிட்டு, "இதில் நான் கோடிட்டிருக்கும் தேதிகளை மாத்திரம் படித்துப் பாருங்கள். பிறகு புரியும், உங்கள் தங்கை நம்மையெல்லாம் தவிக்க விட்டுவிட்டு ஏன் ஓடியேபோய்விட்டாள் என்று" - என்றான்.

மடியில் கிடந்த டைரியை கையில் எடுத்து நெஞ்சுடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள். அதில் ஒரு பெரும் சுகம் கிடைத்தது அவளுக்கு.

கண்களைக் கண்ணீர் திரையிட்டு மறைக்க, மெல்ல அந்த டைரியைத் திறந்தாள்.

அது வெறும் காகித டைரியாக இருக்கவில்லை; உமாவின் நெஞ்சத்து அந்தரங்கமாக இருந்தது. படிக்கப் படிக்க அவள் எதிரே நின்று பேசுவது போலிருந்தது.

மே ஒன்று: என்னாலே நம்ப முடியவில்லை! அகில உலக சமூகநலப் பணி மன்றத்துக்கு என்னைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்ற அறிவிப்பு என் வீடு தேடி இன்று வந்தபோது என்னால் நம்பவே முடியவில்லை. எவ்வளவு பெரிய பொறுப்பான வேலை, அது! அதற்கு நான் தகுதி உள்ளவள்தானா என்பது எனக்குத் தெரியவில்லை.

"என்ன, மிஸஸ் சுந்தர்! உங்களுக்கு இல்லாத தகுதியா? அப்பா முன்னணி 'லாயர்'களில் ஒருவர். கணவன் பெரிய வியாபாரப் புள்ளி - பிறகு கேட்பானேன்?" என்று எல்லாரும் சொல்றாங்க. ஆனாலும் 'சரிவர பொறுப்பைச் செய்ய வேண்டுமே' என்ற கவலை எனக்கு!

இன்னிக்குச் சாயங்காலம் வரவங்களும், போறவங்களும், மாலை போடறவங்களுமாக வீடு ரொம்ப அமர்க்களப்பட்டுது. இவங்க முகத்திலேதான் எத்தனை பெருமை! எல்லாரும், "இந்தமாதிரி ஒரு மனைவி கிடைக்கிறதுக்கு ரொம்பக் கொடுத்து வெச்சிருக்கணும், சுந்தர்" என்று சொல்லி என் கணவரின் கையைக் குலுக்கின போது அவர் பூரிச்சுப்போனதை நான் பார்த்தேன்.

மே நான்கு: இனிமே இப்படியே சும்மா இருக்க முடியாது. மன்றத்துக்குப் பணம் சேர்க்கணும். அதுக்காக இன்னிக்கு ஒரு பெரிய கூட்டம் போட்டோம்.



ஜூலை மாதத்திலே ஒரு 'கலைவிழா' வைக்கிறதா தீர்மானிச்சோம். நாளையிலிருந்து எனக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை இருக்கும்னு நினைக்கிறேன். ஊரிலுள்ள பெரிய கம்பெனிகளை எல்லாம் போய்ப் பார்க்கணும். தனி மனிதர்களைவிட கம்பெனிகள் இன்னும் நிறையப் பணம் கொடுக்கலாம், இல்லையா? அதனால்தான்.

என் கணவர் கிட்டே சொன்னபோது பூவாய் சிரிச்சாங்க! "உனக்கென்னம்மா! பெரிய ஆளாயிட்டே! ஜமாய்! நம்ப பியட் காரை உன் உபயோகத்துக்கே வைத்துக்கொள்" என்றார். என் சுந்தர் மாதிரி கணவர் எல்லாருக்கும் கிடைப்பாரா?

மே பதினைந்து: வரவர மூச்சு விடக்கூட நேரம் கிடைப்பதில்லை. பெரிய கலைநிகழ்ச்சி. முன்னணியிலிருக்கும் கலைஞர்களையெல்லாம் வைத்து தயார் பண்ணியாச்சு. இனிமேல் பெரிய புள்ளிகளைச் சந்தித்து டிக்கெட்டை விற்க வேண்டியதுதான் பாக்கி!

எனக்கு இந்த வேலை ரொம்பப் பிடிக்கும்னு நினைக்கிறேன். இத்தனை நாள் கூண்டுக்கிளியா இருந்தாச்சு... வெளியிலே வந்து 'மனிதங்கன்னா எப்படி இருப்பாங்க' என்று பார்க்க இது நல்ல சந்தர்ப்பம்னு என் மனசு சொல்லுது.

மே இருபது: அம்மாடி! இந்த ஆண் பிள்ளைங்களெல்லாம் எப்படி பலதரப்பட்டவங்களா இருக்காங்க! நானும் ஐந்து நாளா அலையறேன்; ரூபாய் 25,000-க்குக்கூட டிக்கெட் விக்கலையே! அம்மா சொல்றா, "என்னடி, இப்படி இரண்டு நாளில் அலைஞ்சு திரிஞ்சு கறுத்துப் போயிட்டயே"ன்னு!

நாளைக்கு மிஸ்டர் பதியைப் பார்க்க 'அப்பாய்ண்ட் மெண்ட்' கிடைச்சிருக்கு. இந்த மனிதருக்கும் ஊரில் நல்ல செல்வாக்கு. அவர் மனசு வெச்சா நிறையப் பணம் கிடைக்கும்னு சொல்றாங்க... பார்க்கலாம்...

**மே இருபத்தொன்று:** இன்னிக்கு என் வாழ்க்கை யிலே ஒரு முக்கியமான நாள் என்று சொல்லலாம்... 'எட்டு கம்பெனிகளுக்கு டைரக்டர் ஆச்சே! ரொம்ப மிடுக்கா இருப்பாரோ'ன்னு யோசிச்சுக்கிட்டே மிஸ்டர் பதியின் அறைக்குள் நுழைஞ்சேன்.

"ப்ளீஸ் கம் இன்"னு எழுந்து நின்று வரவேற்றவரைப் பார்த்ததுமே 'சட்'டுனு எனக்குப் புடிச்சுப் போச்சு.

வயசு நாற்பத்தைந்து ஆகிறதாம். ஆனாலும் என்ன கம்பீரம், என்ன தாராள குணம்! எனக்கு நினைக்க நினைக்க 'இப்படியும் ஒரு மனிதரா' என்றுதான் தோண்றது.

"என்னால் உங்களுக்கு ஏதாவது ஆகணுமா?" என்று கேட்டவர்கிட்டே, தயங்கித்தயங்கி நான் வந்த காரி யத்தைச் சொன்னவுடனேயே 'கடகட'ன்னு சிரிச்சிட்டு, "இத்தனை நல்ல காரியம் செய்யப் புறப்பட்டிருக்கி யேம்மா; இதுலே ஏன் இவ்வளவு சங்கோஜம்?"னு கேட்டார். பிறகு, அடுத்த அரைமணிக்குள் பத்துப் பன்னிரண்டு 'பெரிய' மனிதர்களுக்குப் 'போன்' பண்ணி, டிக்கெட் விற்பனைக்கு ஏற்பாடு செய்தார்.

சுந்தர்கிட்டே இன்னிக்கு பூரா இவங்களைப் பற்றியே பேசிட்டு இருந்தேன்.

**மே இருபத்தாறு:** ஓ! இந்த நாலு நாளிலே எத்தனை யெல்லாம் நடந்திருச்சி! 'மிஸ்டர் பதி' மூலமாக எனக்கு



நான்கு லட்சம் கிடைச்சிடுத்துன்னா, என்னால் இதை நம்பவே முடியலை; இந்த நாலு நாளாக நான் அவரைப் பற்றிப் பேசாத ஆளில்லை.

ஒரு வேடிக்கை: எந்தப் பெரிய மனிதரிடத்திலே போனாலும் முதல்லே அவர், "உனக்கும், மிஸ்டர் பதிக்கும் என்ன உறவம்மா?" என்றுதான் கேட்கிறார். இதைப் பதியிடமே சொன்னேன். 'ஓஹோ'ன்னு சிரிச் சிட்டு... "உலகம் அப்படித்தாம்மா இருக்கு - என்ன பண்றது..." என்று சொல்லி ஒரு நிமிஷம் யோசிச்சார்... பிறகு, "அதிர்ஷ்டவசமா நீயும் நானும் ஒரே முதலியார் சமூகம்; அதனால் நீ என் மருமகள்னு சொல்லிடும்மா" என்று ஒரு போடாய் போட்டுவிட்டார்.

'பொல்லாத மனிதர்' - இப்படித்தான் சுந்தர் எங்கிட்டே சிரிச்சுக்கிட்டே சொன்னார்.

**ஜூன் மூன்று:** நேற்று மாலை நடந்ததை நினைச்சா எனக்கு வேடிக்கையா இருக்கு! சாயங்காலம் 'ஜிம்கானா கிளப்'பில் சுந்தரும், பதியும் சந்திச்சிண்டாங்க... ரொம்ப நாளாக பிரிஞ்சிருந்த அண்ணனும், தம்பியும் மீண்டும் சந்திக்கிறாப்போலத்தான் எனக்குத் தோணிச்சு. பார்க்கப்பார்க்க ரெண்டு பேருக்கும் ஜாடைகூட ஒண்ணா இருக்கிறமாதிரி தெரிகிறதே!

சுந்தருக்கும், மிஸ்டர் பதிக்கும் முதல் பார்வை யிலேயே ஒருவரை ஒருவருக்குப் புடிச்சுப் போயிட்டுது.

**ஜூன் பன்னிரண்டு:** இன்னிக்கு பதி வீட்டுக்குப் போயிருந்தோம். அவங்களுடைய நான்கு குழந்தைகளைப் பார்த்தவுடனேயே எனக்குள்ளே ஒரு பாச உணர்ச்சி ஊத்துமாதிரி எழுந்தது. இத்தனை சமர்த்துக் குழந்தைங்க

தாயில்லாம வளர்றதேன்னு ரொம்ப துக்கமாக இருக்கு "ஆன்ட்டி, ஆன்ட்டி" என்று அந்தக் குழந்தைகளும் என்கிட்டே உடனேயே நட்பு கொண்டதைப் பார்த்ததும் எனக்குக் கண்ணிலே ஜலம் தளும்பிடுத்து... மிஸ்டர் பதிக்கும்தான்!

"பார்த்தியா, சுந்தர், உமாகிட்டே பிறரைக் கவரக் கூடிய சக்தி இருக்கிறதை!" என்றார்.

**ஜூன் இருபது:** இந்த ஒரு வாரத்தில் நான் மேலும் மூணு லட்ச ரூபா சேர்த்திட்டேன். எல்லாம் பதி சார் தயவால்தான்!

'இந்த பதிக்கும், நமக்கும் ஏன் இந்த விசித்திர பந்தம்' - என்று எனக்கு விளங்கவே மாட்டேங்கிறது. இவங்க என்னைப் பார்க்கறச்சே, அந்தக் கண்களி லேருந்து 'ஏதோ ஒரு பாசம்' வழிந்தோடறதே. ஏன் இது? இவங்க என்னுள் யாரைப் பார்க்கறாங்க? தன் னுடைய இறந்த மனைவியையா? அல்லது இந்த மாதிரி தனக்கு ஒரு பெண் இல்லை என்கிற ஏக்கமா?

**ஜூன் இருபத்துநான்கு:** ஊரிலே கொஞ்சம் பெரிய 'பிஸினஸ்மேனா'க இருந்தால், ஒரு நல்ல காரியத்திற்கும் வர முடியாதபடி ஏதாவது ஒரு மீட்டிங், இல்லைனா, 'கான்ஃபரன்ஸ்' குறுக்கே வந்திடறது - சே! எனக்குக் கோபம் கோபமாகத்தான் வந்தது - சுந்தர் இன்னிக்கு சங்கிதக் கச்சேரிக்கு வரமுடியாது என்று சொன்னதும்.

ஆனால், பதி தனக்கு வேலைப ஒன்றும் இல்லாத தால் என்கூட வரேன்னு சொன்னபோது கொஞ்சம் சமாதானமாக இருந்தது.



அப்பா, அம்மா, பதி, நான் நான்கு பேருமாக அந்தக் கச்சேரிக்குப் போயிருந்தோம்.

பதி இவ்வளவு சங்கீத ரசிகர்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுது.

**ஜூன் இருபத்தாறு:** சுந்தர் இன்னிக்கு ரொம்பத்தான் அமர்க்களப்படுத்திட்டார்... என்னை எல்லார் நடுவி லேயும் எப்படியோ பாட வெச்சிட்டாரே!

'மாணிக்யவீணாம்'னு ஆரம்பிக்கிற 'சியாமளா தண்டகத்'தை எடுத்ததுமே பதி, "அருமையான பாட்டு" என்றாங்க.

பூரா ஸ்தோத்திரத்தையும் பதினாலு ராகத்தில் பாடி னதும், "உமா, நீ ரேடியோவிலே பாடணும்மா... அப்பத் தான் உன் ஞானத்தை எல்லாரும் அனுபவிக்க முடியும்... நாளைக்கே நான் ரேடியோ டைரக்டரை சந்திச்சி இது விஷயமாகப் பேசப்போகிறேன்" என்று உற்சாகமாக கூறினவங்க, 'சட்'டென்று சுந்தரை ஆரத் தழுவிக்கிட் டாங்க. பிறகு, "நீ கொடுத்து வைச்சவன், சுந்தர்... நல்லா இருங்க... ஒருத்தர் கண்ணும் படாம ரெண்டுபேரும் நல்லா இருங்க..." என்றாங்க.

அந்த நேரத்தில் என் மனசு 'எனக்கு ஒரு மூத்த மச்சினர் இருந்தால் இப்படித்தான் இருப்பாங்க... இப்படித்தான் ஆசீர்வதிப்பாங்க...' என்று சொல்லிற்று.

இப்படியும் ஒரு பிணைப்பா?

**ஜூன் முப்பது:** சொன்னதைச் செய்திட்டாரே, இந்த பதி! ரேடியோ ஸ்டேஷனிலேயிருந்து எனக்கு 'ஆடிஷனு'க்குக் கார்டுகூட வந்திடிச்சி.

**ஜூலை இரண்டு:** இன்னிக்குக் காலையிலே மிஸஸ் பாஸ்கரன் அந்தக் கேள்வியைக் கேட்டதும் எனக்கு ஆத்திரம் பொங்கிட்டு வந்ததே, ஏன் அப்படி? "என்ன, உமா! வரவர உனக்குத் துணிச்சல் ரொம்ப அதிகமாயிருக்கு போலிருக்கே! சுந்தர் வேறே அடிக்கடி 'டூர்' போயிடறார். உனக்கும் 'போர'டிக்கும்! அதுதான் சிநேகிதங்களோட வெளியிலே ரொம்ப போறே போலிருக்கு..." என்றார். எனக்கு அவங்க கண்ணிலே தெரிஞ்ச விஷமத்தைப் பார்த்ததுமே, ஏதோ விஷயம் இருக்கு; அதுதான் 'பொடி' வெச்சி பேசினாங்கன்னு புரிஞ்சிடுத்து.

"என்ன சொல்றீங்க நீங்க?" என்று நிதானமாகக் கேட்டேன்.

"இல்லை... 'மியூசிக் சேம்பரு'க்கு மிஸ்டர் பதியுடன் போயிருந்தியே! எல்லாரும் பேசிக்கிட்டாங்க! அதான் கேட்டேன்" என்றார்.

எனக்குப் பற்றிக்கொண்டு வந்தது. "தனியாக போகலியே... அப்பா, அம்மா கூட வந்திருந்தாங்களே..." என்றேன், ஆத்திரத்தைக் காட்டாமல்.

மிஸஸ் பாஸ்கரன் சிரித்தார். பிறகு சொன்னார்: "அப்படி யாரும் சொல்லலியே! உங்க ரெண்டுபேரையும் தான் பார்த்ததாகச் சொன்னாங்க... எனக்கு என்னமோ உன்னை எச்சரிக்கணும்னு தோணிச்சு. சொன்னேன்... அவ்வளவுதான்..."

'இவரிடம் போய் என்ன விவாதம் வேண்டிக் கிடக்கிறது' என்று நான் பேசாமல் வந்துட்டேன்.



உடனே அதை மறந்தும் விட்டேன். இப்போது டைரி எழுதறச்சேதான் ஞாபகம் வருகிறது.

**ஜூலை பதினொன்று:** இந்தத் தடவை சனி, ஞாயிறு எவ்வளவு வேடிக்கையாகப் போயிற்று! அனுராதாவும் மதுசூதனனும் (பதியின் கடைக்குட்டிகள்!) இங்கேயே வந்து இருந்ததுகள். இன்னிக்குக் காலையிலே ஸ்கூலுக்குப் போகணும்னு சொல்லி அவங்க வீட்டுக்குப் போனதும் எனக்கும் சுந்தருக்கும் வீடே 'வெறிச்'சிட்டுப் போயிடிச்சு.

**ஜூலை இருபத்தைந்து:** பதியை முதன் முதல்லே சந்திச்சது, அவங்க உதவி பண்ணினது, நாங்க குடும்பத்தோடு குடும்பமாக ஒட்டிக்கொண்டது, 'இண்டர்நேஷனல் ஈவ்னிங்' அமர்க்களமாக நடந்தது, எல்லாம் இன்னிக்கு நினைச்சுப் பார்த்தால் ஒரு கனவு போலத் தான் இருக்கு.

பதி இன்னிக்கு சுந்தர்கிட்டே சொல்லிக்கிட்டு இருந்தாங்க... நான் ஒட்டுக் கேட்டேன். தப்புத்தான்... ஆனாலும் கேட்டேன்.

"சுந்தர்... உங்க ரெண்டுபேரோட அறிமுகம் எனக்கு திடீர்னு பாலைவனத்திலேருந்து பூஞ்சோலைக்குள்ளே வந்த உணர்வைத்தான் கொடுக்கிறது. உமாவையும் உன்னையும் முதன் முதல்லே பார்த்ததுமே எனக்கு என்னன்னு சொல்லத் தெரியாமே ஒரு பிடிப்பு உங்க மேலே உண்டாயிடுத்து.

"சுந்தர், நீ புத்திசாலி...நான் பேசறதை நல்லா புரிஞ்சிப்பே என்கிற எண்ணத்தில்தான் சொல்லறேன்.

"நான் என் மனைவியை ஐந்து வருஷத்துக்கு முன்னால் இழந்தப்போ பயித்தியம் பிடிக்கிற நிலைக்கு வந்திட்டே

னப்பா - ஒரு அசட்டு வேகத்திலே சிட்டாட்டத்திலே அவளை மறக்கிறதுக்குப் புகுந்துட்டேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதுக்கு அடிமையாகி என் உயிருக்குயிரான குழந்தைகளைக் கவனிக்கிறதைக்கூட குறைச்சிக்கிட்டேன்.

"ஆனால்- ஆனால் உங்களைச் சந்திச்ச பிறகு எனக்கு உங்க கூடவும், குழந்தைங்க கூடவும் இருக்கிறதிலே உள்ள திருப்தி அந்தச் சிட்டாட்டத்திலே வரதில்லை, சுந்தர்" என்று குரல் தழுதழுக்க பதி சொன்னப்போ- எனக்கு சந்தோஷம்... 'நம்மால் ஒருத்தருக்கு நல்லது செய்ய முடிகிறதே' என்றுதான்.

**ஆகஸ்ட் இருபத்தேழு:** என்னமோ தெரியலை - வரவர எல்லாரும் என்னை ஒரு தினுசா பார்க்கிற மாதிரி எனக்குள்ளேயே ஒரு பிரமை.

பாரேன்! இன்னிக்கு ஏதோ வேலையாகக் 'கிளப்'புக்குப் போயிருந்தேன். மிஸஸ் ராஜன், மிஸ்டர் இரானி, மிஸஸ் பாஸ்கர், மிஸ்டர் ராம் எல்லோரும் ஏதோ பேசிக்கிட்டு இருந்தாங்க - என்னைக் கண்டதுமே 'சட்'டுனு பேச்சை நிறுத்திட்டாப்பல இருந்தது - ஏன்? எனக்குப் புரியலை.

**செப்டம்பர் மூன்று:** கொஞ்சநாள் முன்னால் எல்லோரும் 'ஒரு மாதிரியா பார்க்கறாங்க, ஒரு மாதிரி கசமுசான்னு பேசறாங்க'ன்னு எழுதியிருந்தேனே, அது ஏன்'னு இப்போ புரிஞ்சிடுத்து - எனக்கு எழுத முடியாதபடி கையெல்லாம் 'தடதட'ன்னு துடிக்குது.

பதியோடு நான் பழகறது தப்பாம்! நாங்க இத்தனை அன்பாக இருந்தா அதுலே ஏதோ விஷயம் இருக்கணு



மாம்! எப்படி? கடவுளே! எனக்கு என்ன எழுதுவதுன்னே புரியலை!

**செப்டம்பர் பன்னிரண்டு:** இன்னிக்குப் பதிக்குப் பிறந்த நாள். விடிகாலையிலேயே இவங்களும், நானும் அவங்க வீட்டுக்குப் போயிட்டோம். ஒரே கும்மாளம் தான்! நாங்க வாங்கிக் கொடுத்த 'டெர்ரிகாட்டன்' சட்டையைப் போட்டுக்கிட்டுத்தான் பதி ஆபீசுக்குப் போனாங்க.

ஒரு வேடிக்கையைச் சொல்ல மறந்திட்டேனே! நாங்க எல்லாரும் உட்கார்ந்து பேசிட்டு இருக்கிறச்சே, பதியோட 'இன்ஷூரன்ஸ் ஏஜண்ட்' வந்தாங்க. ஏதேதோ பேசிட்டு இருந்தவங்க, காப்பி கொண்டு வந்த என்னைப் பார்த்திட்டு, "உங்க பெண்ணுக்கு எத்தனை குழந்தைங்க சார்?" என்று பதியைப் பார்த்துக் கேட்டாங்க.

அவங்க போனபிறகு பதி 'ஓஹோ'ன்னு குதிச்சாங்க; "என்னைப் பார்த்தால் அவ்வளவு வயசானவனாகவா தெரியறது!" என்று சொல்லி வேடிக்கைக்குத்தான். ஆனா, உடனே "உன்னை மாதிரி ஒரு பெண் இருக்க நான் கொடுத்து வச்சிருக்க வேண்டாமா, உமா?" என்றாங்க.

இந்த மனிதரையும் என்னையும் பற்றியா ஜனங்க கேவலமாகப் பேசறாங்க?

**செப்டம்பர் இருபத்தேழு:** என்னால் பொறுக்கவே முடியலை. நாங்க என்ன குழந்தைங்களா? எங்களுக்குத் தெரியாதா என்ன செய்யலாம், கூடாது என்று?

அம்மா சொன்னாள்: இன்னிக்கு அம்புஜா அத்தை அப்பாகிட்டே வந்து சொன்னாளாம், (குடும்பத்திலேயே

பெரியவர் அப்பாதான்!) "சுந்தரும், உமாவும் ஏன் இப்படி அந்த பதியோட சுத்தறதுகள்? ஊர் பூரா பேசறாங்க, அண்ணா. அந்த மனிதர் பெண்டாட்டி இல்லாதவ ராச்சே, அவங்ககிட்டே உமாவுக்கு என்ன வேலை? இதை நீ கொஞ்சம் கவனிக்கணும், அண்ணா" என்று. அப்பா இடி விழுந்தாப் போல ஆயிட்டாங்களாம்.

ஆனாலும் என்கிட்டே ஒண்ணும் கேட்கலை; அவங்களுக்குத் தெரியாதா, இந்த அம்புஜா அத்தையோட வம்பு பேசற குணம்?

சிலபேர் இன்னிக்கு சுந்தர்கிட்டே வந்து, "பனை மரத்துக் கீழே நின்னுகிட்டுப் பாலைக் குடிச்சாலும், உலகம் அதைக் கள்ளுன்னுதான் சொல்லும். அதனால நாமதான் ஜாக்கிரதையாக இருக்கணும்" என்று சொன் னாங்களாம். சுந்தர் இதை என்கிட்டே சொன்னபோது எனக்கு நெஞ்சமே வெடிச்சிடும் போல இருந்தது.

அக்டோபர் இரண்டு: வரவர எனக்குச் சரியா தூக்கம் வரதில்லை... சாப்பாடும் பிடிக்கலை... எங்க வீட்டிலே யாரும் இந்த வம்பை நம்பலை; நம்பவும் மாட்டாங்க! அது எனக்குத் தெரியும். ஆனாலும் அவங் களையெல்லாம் வருத்தப்பட வைக்க என் பேர் உதவிடிச்சே என்றுதான் எனக்கு துக்கமா இருக்கு.

இதற்குமேல் ராதிகாவால் அழுகையை அடக்கிக் கொண்டு தொடர்ந்து படிக்கவே முடியவில்லை. நெஞ்சைப் பாறையாக அடைத்துக்கொண்டது.

அந்த நாள் - அக்டோபர் பதினான்கு - உமாவின் பிறந்தநாள். ராதிகாவிற்கு இனி மறக்கவே முடியாத ஒரு நாளாகிவிட்டதே.



நெஞ்சமெல்லாம் வற்றிப் போகும்படி அழுது தீர்த் தாள் ராதிகா. பிறகு மீண்டும் டைரியைப் படிக்கலானாள்.

அக்டோபர் பதினான்கு: இன்று காலை தூங்கி எழுந்ததுமே, எனக்குத் தெரிந்துவிட்டது, இன்னிக்கு ஏதோ நடக்கக்கூடாதது நடக்கப்போகிறது என்று.

பிறந்த நாள்! எவ்வளவு சந்தோஷமாக, போன வருடம் - அதற்கு முந்தின வருடம் கொண்டாடினேன். ஆனால், இன்று...?

ஒட்டகம் இருக்கிறதே, அது பெரியபெரிய கனமான பொதி மூட்டைகளைத் தாங்குமாம். ஆனால் அதனால் எவ்வளவு தாங்க முடியுமோ அதற்கு மேல் ஒரு துரும்பை வைத்தால்கூடப் பாரம் தாங்காமல் அதனுடைய முது கெலும்பு உடைந்துபோய்விடுமாம். அப்படித்தான் நானும் யார்யாரோ, என்னென்னமோ சொன்னதை யெல்லாம் பொறுத்துக்கொண்டேன்.

ஆனால்... ஆனால், இன்று பால்ய தோழி அருணா- எங்கோ ஒரு சாதாரண கம்பெனியில் குமாஸ்தாவாக இருப்பவள் வந்து அந்தக் கேள்வியைக் கேட்டதும், என் உள்ளம் கோடானுகோடி சுக்கல்களாக உடைந்து, நொறுங்கி, சிதறிப்போயிற்று.

அருணா கேட்டாள்: "உமா, ஒன்று கேட்பேன் தவறாக எடுத்துக்காதே... உன் நன்மைக்குத்தான்..." என்று சிறிது தயங்கியவள், பிறகு "யாரோ பதியாமே, அவங் களுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?"

இரும்புக் குண்டுகளைப் போன்ற பலருடைய வம்புப் பேச்சுக்களைத் தாங்கிக்கொண்டிருந்த எனக்கு, அவள்

கேள்வி என் முதுகெலும்பை - இதயத்தை - உடைக்கும் துரும்பாகத்தான் தோன்றியது.

ஏழையாகப் பிறந்து, எங்கோ ஒரு மூலையில் இருக்கும் சாதாரணப் பெண்ணான இவள் - என் உயிர்த்தோழி- இந்தக் கேள்வியைக் கேட்க வேணுமென்றால்... என்ன அர்த்தம்? இந்த வம்பு, ஊர் முழுதும்-இனி நேர் செய்ய முடியாதபடி பரவியிருக்கிறதென்பதுதானே?

செயலிழந்து நின்றேன்... அப்படியே போயிற்று பொழுது—

இப்பொழுது இரவு மணி பதினொண்ணரை. முது கெலும்பு உடைந்த ஒட்டகம் வாழ்ந்து என்ன பலன்? ஒன்றுமில்லை என்பது எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது!

தூங்கிக்கொண்டிருக்கும் என் சுந்தரைப் பார்க் கிறேன்; இவங்களுக்கு என்னைத் தெரியாதா? நன்றாகத் தெரியும். அதுதான் எனக்கு இன்னும் வேதனையைத் தர்றது. என்னைப்பற்றிப் பிறர் கேவலமாகப் பேசுவது அவங்க உள்ளத்தை எப்படியெல்லாம் துன்புறுத்துதோ?

இதுக்கெல்லாம் ஒரு முடிவு வேணும் என்றால் நான் அழிய வேண்டும். செடியே அழிந்துவிட்டால் பிறகு பூவேது, காயேது? ஒண்ணும் இருக்காது.

நான் கோழையாக மாறி இந்த முடிவு எடுக்கலை. அது எனக்குத் தெரியும் ஆனா, முதுகெலும்பு ஒடிஞ் சிட்டுதே. அது இல்லாட்டா நிமிர்ந்து நிற்க முடியாது. அதனால்தான் போகப்போகிறேன்.

இதோ, எனக்கு முன்னால் தூக்க மாத்திரைகள் ஒரு புட்டி நிறைய இருக்கு; ஒரு கூஜா நிறையத் தண்ணீரும் இருக்கு.



மாத்திரைகளைக் கையிலே கொட்டி எவ்வளவு இருக்குன்னு எண்றேன். உம்... பதினாறு இருக்கு...

ஒரு வேடிக்கை: நான் இன்னும் பத்து நிமிஷத்திலே செத்துப் போயிடுவேன். சாகறதுன்னா எப்படி இருக்கும்? அதையும் முடிஞ்ச வரைக்கும் டைரியிலே எழுதினா...?

இந்த டைரியை ஒருத்தர் படிப்பாங்க என்று எனக்குத் தெரியும். வருத்தம் பொங்கிப்பொங்கி வந்து அவங்களைத் தரையில் கிடக்கும் மீனாகத் துடிக்க வைக்கும்... நான் என்ன பண்றது? எனக்கு வேறே வழியே தெரியலையே.

முதல் நாலு மாத்திரைகளை முழுங்கிட்டேன். கொஞ்சம் அடிநாக்கிலே கசக்கிறது. அவ்வளவுதான்.

என் மனசு நிலைகொள்ளாமல் அலைபாய்கிறது.

சுந்தரோட நான் ரொம்ப சந்தோஷமாக இந்த ஐந்து வருஷங்களும் வாழ்ந்திருக்கிறேன். அவங்களை விட்டுப் போறதிலே எனக்கு இஷ்டமே இல்லை. ஆனா, நான்தான் முதுகெலும்பு உடைஞ்ச ஒட்டகமா ஆகி விட்டேனே! வேறே வழி?

இன்னும் நாலு மாத்திரைகள் உள்ளே போயாச்சு... இப்பத்தான் கொஞ்சமா கண்ணை மயக்குது.

தூரத்திலே இருக்கிற சுந்தரைப் பார்க்கிறேன். அம்மாடீ! உருவம் மங்கலாகத் தெரிகிறதே! என் சுந்தரைக் கடைசி வரைக்கும் நான் நல்லா, முழுசா பார்க்கணுமே! அதனாலே எழுந்துபோய் அவங்ககிட்டே உட்கார்ந்துக்கறேன்.

சாவு கிட்டே வரது எனக்குப் புரிகிறது... வயத்துக் குள்ளே ஏதோ ஒரு வேதனை... மரண வேதனை என்பாங் களே, அதுவோ?

என்னால் இப்போ ஒழுங்கா எழுத முடியலை. எழுத்துக்கள் கோணல்மாணலா போகுது... சுந்தர்கிட்டே இன்னும் நெருங்கி உட்கார்ந்துக்கறேன்.

கடைசி நாலு மாத்திரைகளையும் முழுங்கியாச்சி. இன்னும் ஒரு மணியோ, இரண்டு மணி நேரமோ...

பூரா மணலையும் வண்டியிலேருந்து சாய்ச்சுக் கொட்டினப்புறம், கடைசியா ஒட்டிக்கிட்டு இருக்கிற மணல்கள் 'மடமட'ன்னு ஓடி வராப்பல, என் மனசுக் குள்ளேயும் ஏதேதோ எண்ணங்கள் ஓடி வரது... ஆனா எழுத முடியலை.

இப்போ கண்கள் மேலே செருகிக்கொள்ளறது. கடைசியா சுந்தர் முகத்தை உற்றுப் பார்க்கிறேன்.

சுந்தர், நான் போயிட்டு வ...ரே...

டைரி முடிந்துவிட்டது; அத்துடன் உமாவின் வாழ்க்கையும் முடிந்துவிட்டது.

மறுநாள் காலை அவளை சுந்தர் பிணமாகக் கண்டதும், ஊரே குமுறிக்குமுறி அழுததும்... பெரிய கதை.

ராதிகாவுக்கு நெஞ்சமெல்லாம் கொதித்தது. "அடி, உமா... நீ போன மறுநாள் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா? இந்தமாதிரி ஊரிலே வம்பு பேச றாங்களே என்று மனசு வருத்தப்பட்டு அப்பா, மடத்து சுவாமிகளுக்கு ஒரு காகிதம் எழுதியிருக்காங்க. நீ செத்த அன்று சுவாமிகளிடமிருந்து பதில் கடிதாசி வந்தது. உமா, அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா? "உமா ஒரு குழந்தை; அவள் சத்தியத்தின் இருப்பிடம். அவளைச் சந்தேகிப்பது மகாபாவம். இது அந்த அம்மன் மேல் ஆணை" என்று எழுதியிருந்தது. உமா, இந்த லெட்டரை அத்தையிடமும், மத்தவங்களிடமும் காட்டி அப்பா முட்டிக்கிட்டுக் கதறினாங்களே, இது உனக்குத் தெரியா மலே போயிடுத்தே, உமா!" என்று தாங்கொணாத் துயருடன் அரற்றினாள் ராதிகா.



பிறகு "உமா! நான் உன் வாழ்க்கையை அப்படியே ஒரு கதையாக எழுதப்போறேன். ஏனென்றால், உன்போல், அனாவசியமான வம்புப் பேச்சுக்களால் எத்தனையோ பெண்களின் வாழ்க்கை அல்லல் படுகிறது; இதை நிறுத்த வேண்டும், உமா! உன் வாழ்க்கை எல்லாருக்கும் ஒரு உதாரணமாக ஆகிவிட்டதம்மா - அதை அறிந்துகொண்டாலாவது, இந்த ஊரில் வம்புகள் குறையுமா? சொல், உமா! - நான் பேசுவது உனக்குக் கேட்கிறதா, உமா? சொல்!" என்று இரு கைகளையும் விரித்துக்கொண்டு ஆகாசத்தைப் பார்த்து உரக்கக் கத்தினாள் ராதிகா.

# ஒரு தூண்; ஒரு துணைவி; ஒரு...?

'**எ**ன்ன, ரொம்பப் பாழடைந்த சத்திரமாக இருக்கிறதே! இதற்குள்ளா நுழைய வேண்டும்!' என்று யோசிக்கிறீர்களா! பரவாயில்லை, தைரியமாக உள்ளே வாருங்கள். நீங்கள் நின்றுகொண்டிருக்கும் தார் ரோட்டிலிருந்து சற்று இறங்கி, 'ராவணன் மீசை' என்று அழைக்கப்படும் முட்புதர்கள் நிறைந்த மணலில் பத்து அடி நடந்து, சத்திரத்து வாயிலுக்கு 'துவாரபாலகர்'களாக நிற்கும் இரண்டு பனைமரங்களையும் தாண்டி, வாசற்படியில் ஏறினால், இதோ, இந்த ஈசானிய மூலையில் நின்றுகொண்டிருக்கும் என்னை உங்களால் நன்றாகப் பார்க்க முடியும்.

மூக்கைப் பொத்திக்கொள்கிறீர்களே, வௌவால் எச்சங்கள் வயிற்றைப் புரட்டுகிறதா? என்ன செய்வது, ஐயா! ஒரு காலத்தில் ராஜ பரிவாரங்கள் வந்து இறங்கி சிரமப்பரிகாரம் செய்துகொண்ட சத்திரம்தான். பிற்பாடு ஆங்கிலேயராட்சியிலும் வேண்டியளவிற்குப் பிரமுகர்கள் வந்திருக்கிறார்கள். இப்பொழுது இந்தச் சத்திரம் பாழடைந்துபோய்விட்டதென்னவோ வாஸ்தவம்தான். அதற்கும் வயசாகவில்லையா, என்ன?

ஆ! சொல்ல மறந்துவிட்டேனே! இப்பொழுது கொஞ்சநாளாக இந்த சமுத்திரக்கரை சில படப்பிடிப்



பாளர்கள் கண்ணில் பட்டுவிட்டது. அதிலிருந்து திடீரென்று இரண்டு லாரி, நான்கு கார்கள் நிறைய மனிதர்களும், அரிதாரம் பூசிய நடிக, நடிகைகளும் வருவார்கள். சற்று வட்டாரத்தில் வேறு மண்டபமே கிடையாததால், அன்று ஒரு பொழுதுக்கும் இந்தச் சத்திரம் கல்யாணக் களை கட்டிக்கொண்டிருக்கும். பிறகு பழைய கதைதான்.

ஏதோ சொல்லவந்து எங்கோ போகிறேனே!

"படியேறி உள்ளே நுழைந்தால் ஈசானிய மூலையில் நான் இருக்கிறது உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டேனே, என்ன பதிலையே காணோம்!

நான்தான், ஐயா, பத்து அடி உயரத்திற்கு இருக்கிறேனே, தெரியவில்லையா?

"அட, தூணா?" என்று வியக்கிறீர்களா? ஆமாம், கல்தூணேதான்!

உங்களை எதற்குக் கூப்பிட்டேன் என்றால், எனக்குக் கீழே ஒன்று (மன்னிக்கவும் - எனக்கு அதை வேறுவிதமாக அழைக்கத் தோன்றவில்லை) கிடக்கிறதே, அதைப் பார்க்கத்தான். 'இதை மனிதன் என்று அழைக்கலாமா' என்று நானும் யோசித்துயோசித்துப் பார்க்கிறேன் - புரியவில்லை.

இவன் வந்து பத்து நாட்களாகியிருக்கும், ஸ்வாமி.

ஒருநாள் சாயரட்சை - தூரத்தில் தெரியும் தார் ரோட்டில் நொண்டிநொண்டி நடந்து வந்தவன், இந்தச் சத்திரத்திற்குள் நுழைந்து என்மேல் சாய்ந்துகொண்டான். கால்விரலில் ஏதோ அடிபட்டு ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. நானும் பொறுத்துப்பொறுத்துப் பார்த்தேன்-

எழுந்து காயத்தைத் துடைத்துவிட்டு ஒரு சுட்டுப் போடு வான் என்று. ஊஹூம்... அப்படியே உறங்கிப்போய் விட்டான். மறுநாள் காலை மேல்விட்டத்திலிருந்து கத்தியாய் பாய்ந்த சூரிய கிரணம் அவன்மேல் பட்ட பொழுதுதான் நெளிந்தான்.

காலையில் எழுந்ததும் சத்திரத்திற்குப் பின்புறம் போய் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு திரும்ப வும் என்மேல் சாய்ந்துவிட்டான். அன்று பொழுதுக்கும் பல்லில் பச்சைத் தண்ணீர்கூட விட்டுக்கொள்ளவில்லை.

எனக்குப் பயமாகப் போய்விட்டது. 'ஏதேனும் கொலை கிலை செய்துவிட்டு இங்கு வந்து ஒளிந்திருக் கிறானோ?' என்றும் தோன்றியது. ஆனால், முகத்தைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை.

ஆமாம், இவ்வளவு சொன்னேனே, இங்கு வழக்கமாக இரவில் வந்து ஒண்டும் குருட்டுக் கிழவனைப்பற்றிச் சொல்லவில்லையே!

இந்தச் சத்திரத்தில் ஒரு பதினைந்து வருட காலமாக வாடிக்கையாக இரவில் தங்கும் ஒரு குருடன் உண்டு. அவனுக்கும் இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு 'சகா' கிடைத்தது. அவனுடைய நாயைத்தான் சொல்கிறேன். பகல் முழுதும் ஊரில் பிச்சையெடுப்பான்; சாயங்காலம் இருட்டுக்கு முன்னால் நாயோடு இங்கு வந்துவிடுவான். அந்தக் குருட்டுக் கண்ணை வைத்துக்கொண்டு அவன் எப்படித்தான் குச்சிகளைப் பொறுக்குவானோ, எப்படித் தான் கஞ்சி ஆக்குவானோ! - எனக்கு இது ரொம்ப வியப்பாக இருக்கும். அழகாகக் கஞ்சி வைத்து, தட்டுத் தடுமாறாமல் ஆற வைத்து, தானும் குடித்து, நாய்க்கும்



(அதுதான் 'கறுப்பன்') வைத்துவிட்டு 'கம்'மென்று படுத்து விடுவான். மறுநாட் காலை வழக்கம்போல் பிச்சைக்குக் கிளம்பிவிடுவான்.

இவன் கண்ணுக்கு (தவறு, தவறு - உணர்விற்கு) என்மேல் சாய்ந்து கிடக்கும் ஜடம் முதல்நாள் தெரிய வில்லை.

மறுநாள் இந்த நாய் 'கறுப்பன்' இருக்கிறதே, அது இந்த ஜடம் ஆடாமல் அசையாமல் கிடப்பதைப் பார்த்து விட்டு 'உர்... உர்' என்று கத்திக்கொண்டே கிழவனின் துண்டைப் பிடித்து இழுத்துக்கொண்டு என்னருகில் வந்தது.

ஜடத்தைக் கையால் தொட்டுப் பார்த்த கிழவன் அதை உலுக்கு, உலுக்கென்று உலுக்கி உட்கார வைத் தான். பிறகு தன் கஞ்சியில் ஒரு பகுதியை ஒரு வட்டிலில் விட்டு அதனிடம் கொடுத்து குடிக்கவும் செய்தபிறகு "நீ யாரு, தம்பி?" என்று கேட்டான்.

வாய்வார்த்தைகளாக ஒன்றும் சொல்லாமல் கடைசியில் அது, "ஹே... ஹே..." என்று பதிலுக்குச் சிரித்ததும் கிழவன், "ஐயோ, பாவம்டா, கறுப்பா! ஊமை போலிருக்கு" என்றான்.

அன்று முதல் இரவுவேளைகளில் தினமும் இந்த 'சாமி'க்கு (ஆமாம், இனி அப்படித்தான் அழைக்கப் போகிறேன்) கிழவன் மூலம் கஞ்சி கிடைத்துக் கொண்டிருந்தது.

எல்லா சாமியார்களையும் போல இந்த சாமியாரை வர்ணிக்கலாமா? சடை விழுந்த சடைமுடி அல்ல; மற்றவர்களைப்போல் காவியும் அணிந்திருக்கவில்லை.

எப்பொழுதாவது அகன்ற நெற்றியில் தோன்றும் இரண்டு அல்லது மூன்று சிந்தனைக் கோடுகள்தான் - இது சிந்தனையில் இருக்கிறது, உறக்கத்தில் அல்ல என்பதை உணர்த்தும். தீர்க்கமான மூக்கு; அதன் இரு பக்கத்திலும் அமைதிக்கடலான இரு கண்கள். ஆனால் நடு நடுவே இந்த அமைதி போய் அதில் ஒரு துடிப்பு, ஒரு சலனம் தோன்றும் - நரிக்கு பயந்து ஒளிய ஓடுமே ஒரு முயல் - அதன் தவிப்புப் போல. வயது நாற்பதிற்குள் தான் இருக்கும். துறவிக்கோலம் பூண்டும் அதிக நாட்கள் ஆகியிருக்காது என்பது என் யூகம்.

நானும் இந்தச் சத்திரத்தில் எத்தனையோ 'சாமி'களைப் பார்த்திருக்கிறேன். பகலில் காவி அணிந்து 'பிட்சை' எடுத்துவிட்டு, இரவில் 'டெரிலின்' அணிந்து கொண்டு சினிமாவுக்குப் போகும் சாமிகளையும் பார்த்திருக்கிறேன். 'சாமி' என்ற பெயரை வைத்துக்கொண்டு பெண்களைத் திருட்டுத்தனமாகக் கூட்டிவந்து என்னடியில் சல்லாபித்திருக்கிற எத்தனையோ சாமிகளையும் பார்த்திருக்கிறேன். ஆனால் 'இது' எல்லாவற்றிலும் மாறுபட்டு இருந்தது- அது ஏன்? அதுதான் எனக்குப் புரியவில்லை.

என் புலம்பல் அந்த தெய்வத்துக்கே பொறுக்கவில்லை போலும்! அதுதான் முந்தாநாள் அந்த ஆளை அனுப்பி வைத்தது.

"எந்த ஆளை?" என்கிறீர்களா? அவசரப்படுகிறீர்களே! இருங்கள். விஷயத்திற்கு வருகிறேன்.

முன்பே சொன்னேன் அல்லவா? இங்கு படமெடுக்க, எப்பொழுதாவது படக் குழுவினர் வருவார்கள் என்று. அப்படித்தான் முந்தாநாளும் ஒரு குழு வந்தது.



அவரவர்கள் அவசரம் அவரவர்களுக்கு. அதன் நடுவில் என்னையோ, அல்லது என்மேல் சாய்ந்து கிடக்கும் 'சாமி'யையோ யார் கவனிக்கப்போகிறார்கள்!

'இது'வும் 'தான் உண்டு; தன் சாய்மானம் உண்டு' என்பது போல் இங்கேயே கிடந்தது.

அப்பொழுது யாரோ கேமரா உதவியாளனாம் (என்ன இழவோ, எனக்கென்ன தெரியும்!) போனவன் கண்ணில், திரும்பும்போது 'இது' பட்டுவிட்டது. 'உள் உணர்வு, உள் உணர்வு' என்பார்களே, அது அவனுக்குள் வேலை செய்தது போலும்! 'சட்'டென்று அருகில் வந்தவன் 'சாமி'யைக் குனிந்து பார்த்துவிட்டு, "அண்ணா" என்று அலறிக்கொண்டு வீழ்ந்தான். இது திரும்பிப் பார்க்க வேண்டுமே. ஊஹூம்! எனக்குக்கூட 'இந்தப் பையன் ஆள் மாறாட்டமாய்ப் பேசுகிறானோ' என்று தோன்றியது. ஆனால் அவன் 'இதன்' முகத்தைத் தன் பக்கம் திருப்பி, "அண்ணா, நாங்கல்லாம் என்ன தவறு செய்தோம் - இப்படி விட்டுட்டு வர? மன்னி கிடந்து துடிக்கிறாண்ணா! குழந்தைகள் அநாதைகளா திரியறதுண்ணா..." என்று இதன்மேல் முட்டிக்கொண்டு அழுதபோது என் கண்ணிலேயே நீர் துளிர்த்துவிட்டது.

இந்த சாமி அசைந்து கொடுக்கவில்லை. மிஞ்சிப் போய் 'ஹே... ஹே' என்று சிரித்ததோடு சரி.

வெளியில் படக்குழுவினர் புறப்பட்டுவிட்டனர். 'இது'வோ, அந்தப் பையன் கையைப் பிடித்து இழுக்க இழுக்க, எழுந்துகொள்ளக்கூட மாட்டேன் என்று விட்டது.

முடிவில், "என்னைத் தொந்தரவு செய்யாமல் போய் விடு..." என்று 'அது' பேசியதே, அப்பொழுது எனக்குத்

தூக்கிவாரிப்போட்டது. இவன் ஊமை இல்லை. பின் ஏன் இப்படி...?

அந்தப் பையனும் ஒரு முடிவிற்கு வந்தாற்போல் தனக்குள்ளேயே ஏதோ பேசிக்கொண்டும், தலையை ஆட்டிக்கொண்டும் வெளியே போய் புறப்படத் தயாராக இருந்த காரில் ஏறிக்கொண்டு போயேவிட்டான்.

நேற்று பூராவும் பழையபடி ஒரே அமைதி! மயான அமைதி!

இன்று இதோ, மத்தியான வெயில் மங்கி மாலைக் குளிர்காற்றுகூட வீச ஆரம்பித்துவிட்டது.

இந்த 'சாமி'தான் யார்? இனி இதன் முடிவுதான் என்ன?

இருங்கள், இருங்கள், அது என்ன சப்தம்? நீள கறுப்புக் கோடாய் என் கண்ணுக்குத் தெரியும் அந்தத் தார் ரோட்டில் ஏதோ வண்டி வருகிறது! வாடகை வண்டி! யாராவது கடற்கரைக்குப் போகிறார்களா? இல்லை, இல்லை. இந்தச் சத்திரத்து வாயிலுக்கு எதிராக அல்லவா அந்த வண்டி நிற்கிறது!

அடடே, முந்தாநாள் வந்த பையன்தான் வருகிறான். கூட வருவது யார்? அழுதழுது சிவந்து, வீங்கிய முகமும், கண்ணுமான அவள் யாரென்று எனக்குப் புரிந்துவிடு கிறது. இந்த 'சாமி'யின் மனைவி! அந்தப் பையன் வெளியூரிலிருந்த மன்னியிடம் விவரம் சொல்லி அழைத்துவந்திருக்கிறான் என்று புரிகிறது.



கையில் ஒரு தூக்கை எடுத்துக்கொண்டு படி யேறியவள், "நீ இங்கேயே நின்னுக்கோ, தாமு..." என்று அவனிடம் சொல்லுகிறாள்; பிறகு மெல்ல இதன்னருகில் வருகிறாள்.

கைத் தூக்கைக் கீழே வைத்துவிட்டு இந்த சாமியின் தலையிலிருந்து உள்ளங்கால் வரை விழுங்கு கிறார்போல நோக்குகிறாள். "நீங்க இப்படிப் பண்ண லாமா? நான் என்னன்னா துரோகம் பண்ணினேன்- நீங்க இப்படிச் செய்ய!" - 'ஓ'வென்று கதறியவாறே அவன் மடிமேல் விழுகிறாள்.

"நான் உங்களோட வாழ்ந்த இந்தப் பத்து வருஷத் திலே ஏதாவது குறை கண்டேளா? இல்லை, வேறு யாராவது உங்களை ஏதாவது தினுசுலே ஏமாத்திட் டானா, சொல்லுங்கோ... சொல்லுங்கோ..." என்று குமுறி அழுதவாறே அவன் அகன்ற மார்பில் - அழுக்கடைந்து கிடந்த மார்பில் - தன் முகத்தைப் பதிக்கிறாள்.

அந்த நிமிஷம் நான் அவளுள் ஓர் உத்தமியைக் கண்டேன்; ஒரு பதிவிரதையைக் கண்டேன்; கணவன் பிரிவால் வாடும் ஒரு மனைவியைக் கண்டேன்; துணைவன் இல்லாமல் தவிக்கும் ஒரு துணைவியைக் கண்டேன்.

இத்தனைக்கும் இந்த சாமி முதலில் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பிறகு மெல்லத் திரும்பி ஒரு நிமிட காலம் வரை அவளுடைய கண்களையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தது. 'சட்'டென்று தன் முகவாயைத் தாங்கிக் கொண்டிருந்த அவளுடைய கையைத் தள்ளியது. பிறகு-

"என்னை பேசச் சொல்றியே, ஜனகம், வேண்டாம். அப்புறம் நான் பேசிட்டேன்னாக்க, 'ஐயோ, இவர் பேசாமலேயே இருந்திருக்கக் கூடாதா'ன்னு வருத்தப் படுவே" என்று சொல்லிவிட்டு மீண்டும் மௌனமானது.

"இல்லை - நீங்க பேசித்தான் ஆகணும். எனக்கு, ஏன் என்னையும் கொழந்தைகளையும் 'அம்போ'ன்னு விட்டுட்டு இப்படி வந்துட்டேள்னு தெரியணும்னா... 'ஓஹோ'ன்னு கோடிக்கணக்கிலே, ரூபாய்லே நாம்ப புரளலே; ஆனாலும் உங்க கிளார்க் உத்தியோகம் மூலமா நீங்க கொண்டுவந்த பணத்தை வெச்சிண்டு இத்தனை நாளா நாம்ப சந்தோஷமாத்தானே இருந்தோம்! குடும்பம்னா நித்தமும் ஏதாவது இருக்கத்தானே இருக்கும்! இது ஒங்களுக்குத் தெரியாததில்லையேன்னா; அப்படி இருக்கறச்சே, ஏன் வந்தேள்? இங்கே என்ன சுகத்தைக் காண்கிறேள்? எனக்குத் தெரிஞ்சு ஆகணும்."

மூச்சு விடாமல் பேசியதால் அவளுக்குச் சற்றே இரைத்தது. மார்பகம் விம்மித் தணிந்து அவன் மார் போடு உறவாடியது.

'ஹே... ஹே...' என்று சிரித்தது சாமி! பிறகு, "சரி, சொல்றேன் கேட்டுக்கோ, ஜனகம்! நான் மேலே சொல் றதுக்கு முன்னால் உங்கிட்டே ஒண்ணு கேட்கறேன்; பதில் சொல்லுவியா? சித்த முன்னாடி 'நாம சந்தோஷ மாதானே வாழ்ந்தோம்! ஏன் விட்டுட்டு வந்தேள்?'னு கேட்டியே, உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு-நாம சந்தோஷமாவா இருந்தோம்? நித்தம் பொழுது விடிஞ்சா இந்தக் குழந்தைக்கு உடம்பு சரியில்லே, வீட்டுலே இந்த சாமான் தீர்ந்துபோச்சு, அதுவும் இல்லைன்னா உனக்குப் 'போக்கு'க் கோளாறு - இப்படி ஏதாவது... மனுஷன்



தூங்கி எழுந்து காலைக்கடன்களை முடிச்சிக்கிற மாதிரி சோகத்தையும் கொட்டிக்கணும், ஆபீசுக்குப் போகணும், அங்கே மேலதிகாரிகள்கிட்டே திட்டு வாங்கணும், வீட்டுக்கு வந்து நீ பாடற 'இல்லே பாட்டை'க் கேட் கணும். பிறகு ஒண்ணுமே நடக்காத மாதிரி ராத்திரி பெண்டாட்டியோட படுக்கைக்குப் போகணும். ஜனகம், கடிகாரம்கூட 'சாவி' கொடுத்தாத்தான் நன்னால ஓடும் - மனுஷன் மனுஷனாக வாழணும், தெரிஞ் சதா? இயந்திரமா வாழக்கூடாது. அப்படி இயந்திர மாகத்தான் வாழணும்னா அந்த வாழ்க்கை அவனுக்கு வேண்டாம், ஜனகம், வேண்டாம்.

"ஆபீசிலோ, இல்லே வெளியிலோ யாராவது நண்பர்கள் கிட்டே சாதாரணமாகப் பேசப்போனாக்கூட 'என்னடா, இன்னிக்கு எவ்வளவு பணம் கடன் வேணும்?'னு நாலுபேர் நடுவிலே மானம் போற மாதிரி கேட்கிற நிலைமைக்கு நான் வந்துட்டேன் பணம்... பணம். அதுவோ கிஞ்சித்தும் இல்லை போறாத குறைக்கு நோய், நொடி வேற—

"இதுக்கெல்லாம் ஒரு முடிவு காணணும்னா நான் செய்ததைத் தவிர எனக்கு வேற ஒண்ணுமே தோணலையே!

"நான் ஏன் வந்துட்டேன்னு கேட்கறயே, ஜனகம் ஆனானப்பட்ட புத்தனே வந்துட்டாண்டீ. அவனுக்கு வாழ்க்கையிலே இல்லாததா? வாழ்க்கையில் சில கஷ்டத்தைத் தவிர வேற ஒண்ணையும் அறியாத ஏழை களாகவும் சிலர் இன்பத்தைத் தவிர வேற எதையும் உணராத பணக்காரர்களாகவும் ஏன் இந்த உலகத்திலே

ஆண்டவன் படைச்சான்னு புத்தன் நினைச்சான்; வாழ்க்கையே வெறுத்துடுத்து. தெய்வம்னு ஒண்ணு இருக்கா? அப்ப, அதுக்கு ஏன் இந்தப் பாரபட்சம்? சொல்லு ஜனகம், சொல்லு" என்று ஆவேசம் வந்தாற் போல் 'சாமி' பேசிற்று.

ஞானம் ஒரு மனிதனுக்கு அறுபது வயதிற்கு மேல் தான் வரவேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறதா, என்ன? 'சாமி' பேசப்பேச எனக்கே ஏதோ விளங்காதது விளங்குகிற மாதிரி இருந்தது. ஞானம் என்பது என்ன? ஞானம் என்பது பலவகைப்பட்டது. 'ஞானோதயம்' என்பது அறிவு முதிர்ச்சியில் குத்துவிளக்கிலிருந்து தெறிக்கும் சுடராய் - பரமாத்மாவோடு சங்கமமாகும் பிழம்பாய் வருவது. தனக்கு வந்திருப்பதும் ஞானம்தான் என்று இந்த 'சாமி' சொல்லலாம். ஆனால், அது விரக்தி முற்றிப் பிறந்திக்கும் 'வெறுப்பு' என்ற ஞானம்.

உணர்ச்சிவயப்பட்டு, அழுது புலம்பிக்கொண்டிருந்த ஜனகமும் 'சாமி'யின் பேச்சில் ஏதோ உணர்ந்திருக்க வேண்டும். தலையை நிமிர்த்தி அவள் கேட்டாள்:

"நீங்க சொல்றதெல்லாம் நியாயமாகவே இருக்கலாம்; ஆனாலும் ஒன்பது, ஏழு, மூன்று வயசுமாக மூன்று குழந்தைகளெப் பெத்துப் போட்டிருக்கேளே. அவற்றுக்கும் உங்களையே நம்பியிருக்கும் எனக்கும் யாருன்னா கதி?" என்று மெதுவாகக் கேட்டாள்.

அவள் குழந்தைத்தனமாக கண்கள் மருளமருள அப்படிக் கேட்டது எனக்கே பரிதாபமாக இருந்தது.

ஆனால், 'சாமி'க்கு?



"குழந்தைகள்... ஒன்பதும், ஏழும், மூன்றுமாகப் பச்சைக் குழந்தைகள்..." என்று கூறிவிட்டு 'ஓஹோஹோ' என்று சிரித்தது.

"குழந்தைகள்னு அடிச்சுக்கிறியே, ஜனகம், அது பிரமை. அதை நாம் மிருக இனத்திலிருந்து தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான் அதுகளையும் நம்மோட ஆண்டவன் படைச்சிருக்கான். பெண் மிருகம் தாய்மை அடைய ஆண் மிருகம் உதவறதே தவிர, குட்டிகள் அதைத் தகப்பன் என்கிற முறையிலே அனுசரிச்சுப் பழகற தில்லை. ஏன், ஓரளவு வயசு வந்தப்புறம் தாயே அதன் குட்டிகளைத் தன் போக்குக்கு விட்டுடறதே! இது ஏன்? மிருகங்களுக்குப் புரியறதுகூட நமக்குத் தெரியலையே, ஜனகம் - அஞ்ஞானம் நம்ம கண்களை மறைக்கிறது. 'குழந்தைகளை ஏன் விட்டுட்டு வந்தேள்'னு கேட்டியே, இப்ப உனக்குப் புரியறதா? குழந்தைகளாவது— மண்ணாவது—"

ஜனகத்தின் கண்களிலிருந்து ஆறாகப் பெருகிக் கொண்டிருந்த கண்ணீர் இப்பொழுது துப்புரவாக நின்றுவிட்டது. கடவுளைப் பூசிக்கும் ஒரு பக்தையாக கண்ணில் பக்தி ததும்ப இருந்தவள் கண்ணில் இப்பொழுது அந்த பக்தி இல்லை. என்னவென்று சொல்லத் தெரியாத ஓர் ஆவேசம். தனக்கு ஆயுசு பரியந்தம் துணையாக இருப்பார் என்று நம்பியவர் இப்படிப் பேசுகிறாரே என்ற எண்ணத்தாலா?

"வாழ்க்கையிலே நமக்கு முன்னால் எத்தனையோ தலைமுறை தலைமுறையாகப் பெரியவாளெல்லாம் குடித்தனம் நடத்தலையா? அவாள்ளாம் இப்படிப் பேசி இருந்தா அப்புறம் வாழ்க்கைதான் என்ன, குடும்பம்தான்

என்ன? இல்லை, மனிதர்கள்தான் என்னன்னா? எனக்கு நீங்க பேசறது புரியலையே!" - ஜனகத்தின் பேச்சிலே ஏதோ ஓர் அசாதாரண அமைதி நிலவுவது எனக்குப் புரிந்தது - ஏன் அப்படி?

"உனக்குப் புரியாது, ஜனகம் - உனக்குப் புரியாது! ஏன்னா, உனக்கு அதுக்கேத்த மனப்பக்குவம் இல்லையே! சும்மாவா சொன்னா சச்சிதானந்தா, மாமுனி சரவணன் போன்றவா...! அவா சொன்னா ஜனகம் - வாழ்க்கையிலே ஒண்ணுலையுமே கட்டுப்பாடு கூடாது - இது தப்பு, இது சரின்னு ஓரளவுக்கு நமக்கு நாமே ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது; அப்படி ஒரு கோட்பாடு வகுத்துக்கறதால நாம நம்ப சுதந்திரத்தைத்தான் இழந்திடறோம். நம்ப மனசுக்கு சரின்னு தோணறதை தயங்காமல் செய்திடணும்னு சொன்னா. அதுதான் எனக்கு எது சரியென்று தோணித்தோ அதை நான் செய்துட்டேன். இப்போ புரியறதா நான் ஏன் வந்துட்டேன் என்று? இது பரமானந்தம். ஜனகம். இதை விளக்கறதுன்னா மணிக்கணக்கா ஆகும் - நான் அனுபவிக்கிற அமைதி அப்படிப்பட்டது. இது உனக்குப் புரியாது.. அதனால..."

"போதும் நிறுத்துங்கோ.." 'சாமி'யை முடிக்கவிடாமல் உறுமினாள் ஜனகம். மதுரையை அழிக்கப் புறப் பட்ட கண்ணகித் தாயிடம் இருந்த ஆவேசக் கனல், அவள் கண்களில் ஜுவாலையாக வீசியது.

"மேலே ஒரு வார்த்தைகூடப் பேச வேண்டாம். சச்சிதானந்தா சொன்னாராம்; இவர் செய்தாராம்.

"சச்சிதானந்தா 'கட்டுப்பாடு கூடாது; வாழ்க்கை யிலே நம்மை நாமே கட்டிப்போட்டுக்கொள்ளக் கூடாது'



என்று சொன்னதென்னவோ வாஸ்தவம்தான். ஆனா, அவர் கட்டை பிரம்மச்சாரி - அவர் சொன்னதைச் செய்து காட்டினார். பிறகு அனுபவிச்சதைச் சொன்னார். ஏன், நம்ப சமூகத்திலேகூட பெரியவாளெல்லாம் அதைத்தானே சொல்றா.. 'அஞ்ஞானம் கூடாது'ன்னு! ஆனா, அந்த வார்த்தையை க்ருஹஸ்தன் - ஒரு குடும்பஸ்தன் - எப்படி எடுத்துக்கணும்னு அவாளே சொல்லறாளே, அது தெரியாதா உங்களுக்கு?

"கட்டுப்படுத்த வேண்டிய சமயத்திலே கட்டுப்படுத்த முடியாம, அதுக்காக ஒரு பெண்ணைக் கல்யாணமும் பண்ணிண்டு, அவமூலமா பிஞ்சுபிஞ்சாகக் குழந்தை களையும் பெத்துட்ட ஒரு பொறுப்பான தகப்பன் பேசற பேச்சா இது? இந்த மாதிரி எல்லாத்தையும் உதறிட்டு வர மனப்பக்குவம் உள்ளவர் கட்டை பிரம்மச்சாரியாகத் தான் இருந்திருக்கணும். தன் மனசோட இஷ்டத்துக்கு ஆடறதுக்காக ஒரு பெண்ணையும் - அவ மூலமா சில குழந்தைகளோட வாழ்க்கையையும் பலி கொடுக்கிறது மஹா பாவம் - தெரியுமா? அதைப் புரிஞ்சுக்கோங்கோ - அதை விட்டுட்டு 'புத்தன் செய்தான்'னு சொல்லி உங்க காரியத்துக்கு சமாதானம் தேடறேளே, இது வெட்கமா இல்லை! புத்தர் பெரிய மஹான்! லோகத்துக்கே நன்மை தேடறதுக்காக அறிவு தாகத்திலே குடும்பத்தை விட்டுப் போய், முக்தி அடைஞ்ச பெரியவர். அவர் செய்ததை கனவிலேயும் உங்களால் நினைச்சுக்கூடப் பார்க்க முடியாதே! அவர் செய்த தன்னலமில்லாத காரியத்தை உங்க செய்கையோட ஒப்பிட்டுப் பேசாதீங்கோ.

"வாழ்க்கையிலே எல்லாத்தையும் விட முக்கிய மானது ஒண்ணு இருக்கு. அதுதான் கடமை. அதை

நிறைவேத்தாம, குடும்ப சம்சாரத்திலே எதிர்நீச்சல் போட முடியாம இருக்கிற ஒவ்வொரு ஆணும் உங்களை மாதிரி பேச ஆரம்பிச்சால், ஐயோ! எனக்கு பயமா இருக்கே! அப்புறம் இந்த உலகமே இருக்காதே! 'மிருகத்தைப் பாரு, அதுலே தகப்பனுக்கும் குழந்தைக்கும் ஒட்டுதல் இல்லை'ன்னு உபமானம் சொல்றதைக் கேட்டா எனக்கு மானம் போறது. நாம்ப ஆறறிவு படைச்ச மனுஷா - உபமானத்துக்கு மேலே போகணுமே தவிர, நமக்குக் கீழே தழைஞ்சி போகக்கூடாது, தெரியுமா?"

பேசிக்கொண்டே போன ஜனகம் 'சட்'டென்று எழுந்திருக்கிறாள். கீழே இருந்த தூக்கையும் எடுத்துக் கொள்ளுகிறாள்.

அவள் ஆத்திரம் எல்லையைக் கடந்துவிட்டது. ஏமாற்றமும், இனி தான் வாழ்க்கைப் பாதையில் தனியாகத்தான் போக வேண்டும் என்ற உணர்வும் அவளை அமுக்கின.

"தைரியமா வாழ்க்கையிலே உங்களைப் போன்ற ஆண்களால் நடை பயிலத் தெரியும் என்ற நம்பிக்கையில் என் போன்ற எத்தனையோ பெண்கள் வாழ்க்கையையே இழந்திடறோம். உங்கள் சித்தாந்தங்களெல்லாம் என்னைப் பொருத்தவரையில் ஒரு கோழைக்குத்தான் பொருந்தும். ஆமாம்! நீங்க ஒரு முதுகெலும்பு இல்லாத, தன் கடமையுணர்வு இல்லாத ஒரு கோழை. உங்களைப் போன்றவர்கள் தங்கள் கடைசி காலத்திலாவது நிமிர்ந்து சாய்ந்து உட்கார்ந்துகொள்ளட்டும் என்றுதான், அதோ, நீங்கள் சாய்ந்திருக்கேளே, அதைப் போன்ற தூண்களை - கல்தூண்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அதில் சாய்ந்துகொண்டாவது இழந்த முதுகெலும்பைத் தேட முயற்சி செய்யுங்கள்" என்று குரல் வெடிக்கக் கத்தியவள், தன் கையிலிருந்த தூக்கை வீசி எறிந்துவிட்டு, புடவைத் தலைப்பை வாயில் திணித்துக்கொண்டு திரும்பி ஒரே ஓட்டமாக ஓடுகிறாள். படிகளைக் கடந்து, மணலைத் தாண்டி, ரோட்டில் இறங்கி ஓடிக்கொண்டேயிருக்கிறாள்.



கல்தூணான என்னை அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் துளைத்து, சல்லடையாகச் செய்தது. அப்படியே இரண்டாக மடிந்து விழுந்துவிடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனால், முடியவில்லை. ஏனென்றால் நான் ஒரு தூண்.

நின்று நிதானித்து யோசித்தால் எனக்கு இரண்டு விஷயங்கள் புரிகின்றன. ஒன்று, இந்த 'சாமி' உண்மையிலேயே ஒரு 'கோழை' என்பது. அதுக்கு நிஜமாகவே தன் சொந்தக் கால்களில் நிற்க வலுவில்லை. ஆனால், அதை ஒப்புக்கொள்ளாமல், 'எனக்கு அஞ்ஞானம் விட்டது; நான் எல்லாம் துறந்தவன்' என்று கூறிக் கொண்டு சாமியார் என்ற போர்வைக்குள் நுழையப் பார்க்கிறது. தன் முன்னால் நீட்டியிருக்கும் ஒரு கையில் 'அது' உள்ளங்கைப் பக்கத்தையே பார்க்கிறது. அதற்கு எல்லாம் வழவழப்பான உள்ளங்கையாகவே தெரிகிறது. ஏனென்றால் 'அது' அத்தனையையும் துடைத்துவிட்ட ஒரு.. '?' ('?' என்றால் என்ன அர்த்தம் என்பதை உங்கள் யூகத்திற்கே விட்டுவிடுகிறேன்.)

ஆனால், ஆனால் - ஜனகம் இருக்கிறாளே - அதோ தூரத்தே ஒரு குண்டூசியின் தலை போன்று தெரிகின்ற ஜனகம், ஒரு மனைவியாகவே இன்னும் இருக்கிறாள்.

நீட்டிய கையை அவள் புறங்கைப் பக்கமாகப் பார்க்கிறாள். அவள் கண்ணுக்கு நகங்களும் தெரிகின்றன. குழந்தைகளை வளர்க்கும் கடமை, மலையாகத் தெரிகிறது அவளுக்கு. வாழ்க்கை உள்ளங்கையைப்போல மேன்மையாகத் தெரியவில்லை. அவளைச் சொல்லிக் குத்தமில்லை, ஐயா - அவள் துணைவனை நம்பியே இத்தனை நாட்கள் வாழ்ந்துவிட்ட ஒரு துணைவி.

இதற்கெல்லாம் என்ன செய்வது? யோசித்துப் பாருங்கள்... 'ஒன்றும் செய்ய முடியாது; ஏனென்றால் ஆண்டவன் படைப்பின்படி நீ ஒரு தூண்; அவள் ஒரு துணைவி; அவன் ஒரு '?' என்கிறீர்களா, வாஸ்தவம்தான்!

# நான் நானாக...

இப்போது நான் எழுதப்போவதைப் படிக்கப் போகும் உங்கள் அனைவருக்கும்-குறிப்பாக ஆண்களைச் சொல்கிறேன்; நான் எழுதப்போவது வெறும் கதையல்ல; உண்மையாகவே நடந்த நிகழ்ச்சிகள். ஒவ்வோர் எழுத்தும் நெஞ்சத்தின் அடியிலிருந்து பீறிட்டுக்கொண்டு வருவது. அவற்றை ஊன்றிப் படியுங்கள். பிறகு நான் எண்ணுவதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று தயை செய்து எனக்கு எழுதுங்கள். உங்களையெல்லாம் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன், செய்வீர்களா?

வாழ்க்கையில் பலமுறை எனக்கு விழுந்த அடி மீண்டும் நேற்று விழுந்தது. எப்படி? பலமாக - மறுபடியும் எழுந்திருக்க முடியாதபடி! முன்பு பட்டவற்றையெல்லாம் சிறுசிறு ஊமைக் காயங்களாக எடுத்துக்கொண்ட எனக்கு இந்தத் தடவை தாங்க முடியவில்லை. என்ன இருந்தாலும் நான் பலவீனங்கள் நிறைந்த ஒரு பெண் தானே, ஐயா!

மேலே சொல்லிக்கொண்டுபோவதற்கு முன்னால், என்னைப்பற்றி உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். தவறாக அர்த்தம் செய்துகொள்ளாமல் படியுங்கள்.

ஏனோ தெரியவில்லை. சிறு வயது முதற்கொண்டே கடவுள் என்னை ஒரு பறக்கும் வண்ணப் பட்டாம்பூச்சியின் தோற்றத்தோடும், குணத்தோடும் படைத்துவிட்டான்.

'ப்ரியம்வதா' (அன்பாகப் பேசுபவள்) என்ற பெயரையும் மிகப் பொருத்தமாகத்தான் என் பெற்றோர் எனக்குச் சூட்டினார்கள்.

"கல்யாணமோ, கார்த்தியோ 'ப்ரியா' இல்லாவிட்டால் சோபிக்காது..." என்று என் காதுபட பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். பிறகு கேட்பானேன்?

கலகலத்த சுபாவத்தைக் கொடுத்த இறைவன் என்னை, கள்ளம் கபடம் என்றால் என்ன என்று புரியாதபடியும் வளரவிட்டான். ஆனால், இது பதினாறு வயது வரையிலும்தான்.

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரியில் காலடி எடுத்துவைத்த சமயம் என்று நினைக்கிறேன் - பக்கத்து வீட்டு ராஜு 'பொறியியல்' படிப்பதற்காக காசி சர்வகலாசாலைக்குப் போனான். பல வருடங்களாகப் பக்கத்து வீட்டில் இருந்துவந்ததால் எங்களுக்குள் ஒரு சகோதரத்துவம் நிறைந்த சிநேகம். ஆனால், அப்படிப்பட்டவன் என்ன செய்தான் தெரியுமா? யார் பேச்சைக் கேட்டானோ அல்லது என்ன புத்தி மாறாட்டமோ தெரியவில்லை, எனக்கு ஒரு லெட்டர் போட்டான்.

பிரித்துப் பார்த்தேன்; படித்தேன்—

"ப்ரியா, உன்னை நினைத்தாலே என் இதயம் துடிக்கிறது. வேறு வேலை நாடமாட்டேன் என்கிறது. இதெல்லாம் என்ன என்று யோசித்துப்பார்த்ததில் ஒன்று



தான் விளங்குகிறது. அதாவது நான் உன்னைக் காதலிக்கிறேன்..." இன்னும் என்னென்னவோ—

படித்துவிட்டு 'ஓஹோ... ஹோ' என்று சிரித்தேன். எனக்கு வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை. பிறகு அத்துடன் அதனை விட்டுவிட்டேன், ஏதோ விளையாட்டு என்பது போல்.

ஆனால் அந்த வருடம் விடுமுறைக்காக ஊருக்கு வந்த ராஜு என்னிடம் வழக்கம்போல் பழகாமல் தாமரை இலைத் தண்ணீராக இருந்தான். பிறகு ஒருநாள் தனிமையில் நான் இருந்தபோது என்னருகில் வந்து கேட்டான்.

"ஏன் என் கடிதத்திற்கு பதிலே போடவில்லை?"

அவன் முகத்தில் தெறித்த கோபத்தைக் கண்ட நான் ஒரு நிமிஷம் அதிர்ந்துபோனேன். சற்று நிதானித்து, "என்ன எழுத வேண்டும் என்கிறாய், ராஜு?" என்றேன் சிரிப்பினூடேயே...

"நீ என்னைக் காதலிக்கிறாயா, இல்லையா? நேரிடையாகச் சொல்" என்றானே பார்க்கலாம்!

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது!

காதலாவது கத்தரிக்காயாவது! அதுவும் பதினாறு வயதில்! என் வயதில் எத்தனையோ பெண்கள் காதல் வியாதிக்குப் பலியாகியிருக்கலாம்; ஆனால் எனக்கு அப்பொழுதெல்லாம் (ஏன், இப்போதும் கூடத்தான்) காதலில் நம்பிக்கையில்லை; அதனைப் புரிந்துகொள்ளும் பக்குவத்திலும் அப்போது என் மனம் இல்லை.

"ராஜு", சின்ன விஷயத்தைப் பேசி பெரிதுபண்ணாதே. காதலாவது மண்ணாவது - உனக்கு என்ன வயது தெரியுமா? பத்தொன்பது - இந்த வயதில் காதலா? உளறாதே..." என்றேன் பதிலுக்கு.

அதைக் கேட்டுவிட்டு, அவன்தான் எப்படி எரிமலையாக வெடித்தான்!

"காதலில் எனக்கு நம்பிக்கை இல்லையா? ப்ரியா, என் முகத்தைப் பார்த்துச் சொல் - என்னுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசியதெல்லாம் பொய்யா? 'உன் மனத்திற்கு வருத்தம் தருவதாக எது நடந்தாலும் ஓடி வந்து என்னிடம் சொல்லு, ராஜு, மனசு லேசாகிவிடும்' என்று உருகி நின்று சமாதானம் சொல்லுவாயே, அது அன்பில்லாமலா? என்னைப் போன்ற ஒரு ஆணுக்கு இப்படி ஓர் எண்ணம் வரவேண்டுமென்றால் அது உன்னைப் போன்ற பெண்கள் கொடுக்கும் ஊக்கத்தினால்தான், ப்ரியா! இதைப் புரியாததுபோல் நடிக்காதே..." என்று உணர்ச்சிவசப்பட்டுக் கத்தினான்.

அந்த வார்த்தைகள்தான் முதன்முதலில் என் மனத்தில் உறைக்கும்படி 'சுளீர்' என விழுந்தது.

என் குணத்தை மாறாகப் புரிந்துகொண்டு அவனே தனக்குள் ஓர் உலகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு வாழ்ந்தால், அது என் குற்றமா?

'ராஜு', அது என் குற்றமல்ல - நான் உன்னிடம் மாத்திரமா அன்புடன் பழகுகிறேன்? இல்லையடா, இல்லை. அது என்னைப் படைத்த கடவுளின் குற்றம்' என்று 'ஓ'வென்று கூவத் தோன்றியது. ஆனால் செய்ய



வில்லை. போதையில் இருப்பவனிடம் நியாயம் பேசினால் என்ன லாபம்?

ஆனால் அன்றுதான், கள்ளம் கபடமில்லாத சிரிப்பும் பேச்சும் அன்புடன் பிறர் சுக துக்கங்களைக் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவதும்கூட சில சமயம் தவறாகப் போய்விடும் என்று புரிந்து கொண்டேன்.

விழுந்த அடியின் காரணமாக இரண்டு நாட்கள் என் கலகலப்பைச் சற்றுக் குறைத்துக்கொண்டேன். ஆனால் அதற்கடுத்த நாளே, இயற்கை சுபாவத்தை மாற்ற முடியாமல் நான் நானாகவே - ப்ரியம்வதாவாகவே மாறிவிட்டேன்.

அதன்பிறகு பலமுறை இதைப்போன்ற நிகழ்ச்சிகள் - முக்கியமானதைச் சொல்லவேண்டுமென்றால் என் அத்தை மகன் சொன்னதைத்தான் சொல்ல வேண்டும்.

கல்லூரியில் கடைசி ஆண்டில் இருந்தபோது அது நடந்தது. குடும்பத்தோடு அன்றைக்கு ஒரு சினிமாவுக்குப் போயிருந்தோம். என் பக்கத்தில் என் அத்தான் - மணமாகி இரு குழந்தைகளுக்குத் தகப்பன் - அமர்ந்திருந்தான். படம் ஓடிக்கொண்டிருக்கும்போது என் கையை அவன் நிமிண்டுவதை உணர்ந்தேன். 'கை தவறிப் பட்டிருக்கும். நாமாகவே தவறாக நினைக்கக்கூடாது' என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

அன்று இரவு சாப்பிட்டுவிட்டு மாடிக்குச் செல்லும் போது, மாடிப்படி வளைவிலிருந்து திடீரென்று

வெளிவந்த ஓர் உருவம் 'சட்'டென்று என் கையைப் பற்றி இழுத்தது-

பதற்றத்துடன் அவனிடமிருந்து திமிறிக்கொண்டே, "அத்தான், அத்தான், நீ இப்படிச் செய்யலாமா? இது தவறு, அத்தான்..." என்று கெஞ்சினேன்.

"ப்ரியா, நான் செய்தது தவறு? இன்று படக்கொட்டகையிலே கையைத் தொட்டபோது பேசாமலிருந்து எனக்கு ஊக்கமளித்த ப்ரியாவா, இது தவறென்று சொல்லுகிறாள்? அடிக்கடி அழகிய கண்களால் என்னைப் பார்த்து, மொட்டாய்ச் சிரித்து எனக்கு போதை அளித்த ப்ரியாவா இது தவறென்று சொல்லுகிறாள்?" என்று பித்தேறியவனைப் போல் கேட்டவாறே என்னை மீண்டும் நெருங்கினான்.

"தொடாதே, அத்தான் - மேலே ஓர் அடி எடுத்து வைத்தாலும் பெரியவர்களிடம் போய்ச் சொல்லி விடுவேன்" என்று நெருப்பைக் கக்கிவிட்டு என் அறைக்கு வந்து குமுறிக்குமுறி அழுதேன்.

என்னால் வேறு என்ன செய்ய முடியும்?

பெரியவர்களிடம் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்களும் அத்தான் கேட்ட கேள்வியையே - "நீ என்னடி, பெண்ணாய், லட்சணமாய், அடக்க ஒடுக்கமாய் இல்லாமல் துள்ளுகிறாய்?" என்று கேட்டுவிட்டால்...

ஐயோ, தெய்வமே! சத்தியமாக நான் உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பழகுபவள் அல்லவே!

ஓட்டுக்குள் ஒடுங்கும் நத்தையாக என்னை ஒடுக்கிக் கொண்டு சிந்தித்தேன். யோசிக்கயோசிக்க ஒன்று



புரிந்தது-அதுதான், பிறவிக் குணத்தை-அந்த ஆண்டவன் கொடுத்த குணத்தை மாற்ற முடியாது என்பது.

என் மனதுக்கு இதமான வார்த்தைகளால், அழகான சிரிப்பால் எத்தனையோ பேர்களுக்கு ஆறுதல் கிடைக்கத் தான் செய்கிறது. தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு சரியாக இருக்கும் என் செய்கை, ஒருவனுக்கு மாத்திரம் தவறாகத் தெரிகிறதென்றால் அது என் குற்றமல்ல; காமாலைக் கண்களோடு பார்க்கும் அவன் குற்றம்தான் என்று புரிந்தது.

அவனுடைய அழுக்குக் கரங்கள் பட்ட இடத்தை ரத்தம் வருமளவுக்கு அழுத்தித் துடைத்தேன். அத்துடன் என்மேல் பட்ட கறையையும் அகற்றிவிட்டதாக ஆறுதலடைந்தேன்.

ஆனால், அவ்வப்பொழுது அந்த நிகழ்ச்சி என்னுள் விசுவரூபம் எடுத்து என்னைத் துளைக்கும்.

'பைத்தியக்கார மனதே! உன்னை ஏனடி குறை சொல்லுகிறாய்? நீ மனதார ஒரு குற்றமும் செய்யவில்லை. சுற்றுப்புறத்தை உன் அழகிய குணத்தால் மணக்கத்தான் வைக்கிறாய். பிறர் தம் சுயநிலை இழந்துவிட்டால் அதற்கு நீயா பொறுப்பு? கவலைப்படாதே...' என்று எனக்கு நானே தேற்றிக்கொள்வேன்.

கூடவே, என் தூய்மையான நடத்தையைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு ஜீவனாவது இருக்கிறதா என்றும் எண்ணி ஏங்குவேன்.

படித்து முடித்துவிட்டு இப்பொழுது வேலையில் இருக்கிறேன். 'பரியா' 'ப்ரியா' என்று என்னைக் கொண்டாடத்தான் செய்கிறார்கள்.

மானேஜருக்கு அந்தரங்கக் காரியதரிசி; பொறுப்பான வேலை; எனக்குப் பிடித்ததும்கூட.

ஆபீசில் யாருக்காவது ஏதாவது வேண்டுமானால் என்னிடம்தான் வருவார்கள். ஏதாவது மனக்கிலேசம் என்றாலும் என்னிடம் வந்து சொல்லித்தான் ஆறுதல் அடைவார்கள்.

மானேஜர் ரவியும் எந்த முக்கியமான விருந்து - அல்லது பெரிய மனிதரைச் சந்திக்கச் சென்றாலும் 'ப்ரியா, நீயும் கூடவா' என்று அழைத்துச் செல்வார்.

ரவி ரொம்ப கண்யமான மனிதர். என் அண்ணனின் நெருங்கிய நண்பரான அவர், போன வருடம் தன் ஆபீசில் இந்த வேலை காலியான பொழுது "உன் குணம்தான் இந்த மாதிரி வேலைக்கெல்லாம் சரி. இந்த வேலையை ஒப்புக்கொள்கிறாயா?" என்று அழைத்த போது வீட்டில் எல்லோருக்குமே ஒரே பெருமை.

நானும் உற்சாகத்துடன் ஒப்புக்கொண்டேன்.

முந்தாநாள் அவசர வேலையாக வெளியில் சென்றுவிட்டு வீட்டினுள் நுழைந்தவள் காதில் ஹாலில் இருந்தவர்கள் பேசிக்கொண்டிருந்தது விழுந்தது. அண்ணா சொன்னான்:

ரவிக்கு நம்ப ப்ரியா மேல் ரொம்ப உசந்த எண்ணமாம் அப்பா! அவளை மாதிரி ஒரு பெண்ணை மனைவியாக அடையணும்ங்கறதுதான் அவன் விருப்பமாம். அவன் பெற்றோருக்கு இது விஷயமாக எழுதியிருக்கானாம். பதில் வந்ததும் உங்களைச் சந்திக்கலாம்னு இருக்கானாம்..."



எனக்கு என்னவென்று சொல்லத் தெரியாமல் ஒரு சந்தோஷம். காதலில் எனக்கு நம்பிக்கை கிடையாது தான் என்றாலும் ரவியை எனக்கு நிரம்பப் பிடித்திருக்கிறதே! அவரைப் போன்ற ஓர் ஆண்மகனை - எல்லாக் குணங்களும் நிறைந்தவரைக் - கணவராக அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. மனம் குதூகலத்தில் மூழ்கியிருந்தது. என்னைப் புரிந்துகொண்டவருடன் நான் ஐக்கியமாகப் போகும் நிம்மதியான உணர்வில் என்னென்னவோ மனக்கோட்டைகள் கட்டி ரசித்துக்கொண்டிருந்தேன்.

ஆனால், மறுநாளே என் கோட்டை இடிக்கப்பட்டு நான் வெறும் மண்மேடாக ஆகிவிடப் போகிறேன் என்பது எனக்குத் தெரியுமா?

ஆபீசில் முக்கிய நபராக இருந்த என்னை ரவி தன்னுடன் பல விருந்துகளுக்கு அழைத்துச் செல்லும் வழக்கப்படி, பத்து நாட்களுக்கு முன்னால் ஒரு வெளிநாட்டு வியாபாரியுடன் இரவு விருந்துக்கு ரவியின் அழைப்புக்கு இணங்கிச் சென்றிருந்தேன்.

என் சுபாவப்படி, 'கலகல'வென்று பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் பொழுதைப் போக்கினேன்.

ரவியும் அந்த வெளிநாட்டவரும் ஒரு சமயம் அரசியல் சம்பந்தமாக விவாதித்துக் கொண்டிருந்தபோது, மௌனமாக அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவள், விவாதம் உச்சகட்டத்தை அடைந்தபோது-

"மன்னிக்கவும், என்னை ஒரு நிமிடம் பேச அனுமதிப்பீர்களா?" என்று ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு, அவர்கள் விவாதத்திலே குறுக்கே புகுந்து என் கருத்தைக் கூறினேன். அவர்கள் இருவருமே அசந்துபோய் என் கருத்தை ஒப்புக்கொண்டு மேலே விவாதத்தைத் தொடராமல் முடித்துவிட்டது எனக்கு எவ்வளவு பெருமையாக இருந்தது. ரவிக்கும்கூடத்தான்! என்னை எப்படிப் பாராட்டினார்!

ஆனால், மறுநாளே அந்த வெளிநாட்டு வியாபாரி எனக்கு மறுபடியும் போன் செய்து, என் புத்தியையும் என் சாமர்த்தியத்தையும் ஒருங்கே புகழ்ந்துவிட்டு, என்னை மாத்திரம் மறுபடி 'டீ'க்கு அழைத்தது எனக்குப் பிடிக்கவில்லை. எப்படியோ தட்டிக் கழித்துவிட்டேன். அடுத்த வாரத்திற்குள் திரும்பவும் இரண்டு தடவைகள் அழைத்துவிட்டார். என்னென்னவோ காரணங்களை எல்லாம் சொல்லி மறுத்தவள், கடைசியில் தன் அலுவலகம் சம்பந்தமாக யோசனையை நாடுவதாக அவர் சொன்னதும், என்னால் தட்டிக்கழிக்க முடியவில்லை. பெருமிதமும், பரோபகார சிந்தனையும் என்னை மசிய வைத்துவிட்டன. ஒப்புக்கொண்டேன்.

அதைப்பற்றிப் பேச்சுவாக்கில் ரவியிடம் சொன்னேன்.

"போய்விட்டுத்தான் வாயேன், ப்ரியா. இதில் தவறொன்றுமில்லை" என்று சொன்னார்.

முன்னேற்பாட்டின்படி சரியாக ஒரு மணிக்கு வண்டியுடன் வந்து என்னை அழைத்துக்கொண்டு



ஊரிலேயே 'பெரிய'ஹோட்டலுக்குச் சென்றார், அந்த வெளிநாட்டவர்.

பேசிக்கொண்டே சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். திடீரென்று அவருடைய பேச்சில் ஒரு மாறுதலை உணர்ந்தேன்.

"நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள் தெரியுமா?" என்றார்.

"தாங்க்யூ" என்று பதிலுக்குக் கூறிவிட்டு மௌனமா சாப்பிட்டுக்கொண்டிருந்தேன்.

"உங்களைப் பார்த்த தினத்திலிருந்து நான் உங்களை பற்றி நினைக்காத நேரமில்லை. என்ன புத்தி, என்ன வாக்குச் சாதுர்யம்! ரவி கொடுத்து வைத்தவர்..." என்று மேலும்மேலும் அவர் சொல்லிக்கொண்டேபோன போதுதான் என்னுள் ஓர் அர்த்தமில்லாத பயம் எழுந்த

உணர்ச்சிவயப்பட்டவர் போல, திடீரென்று அவ என்னை நெருங்கி, "உங்கள் கண்கள் இருக்கிறதே..." என்று ஆரம்பித்து சட்டென்று என் கைகளைக் கெட் யாகப் பிடித்துக்கொண்டார். எனக்குத் தூக்கிவாரி போட்டது.

"ப்ளீஸ், கொஞ்சம் மரியாதையுடன் நடந்துகொ ளுங்கள்" என்று அவசர அவசரமாகக் கூறிக் கை இழுத்தேன்.

"ரொம்ப வெட்கப்படுகிறீர்களே! நீங்கள் பார்க்கு வேலைக்கு அதெல்லாம் சரிப்படாது, மிஸ் ப்ரியா என்று அவர் விஷமமாகக் கூறியதும், "சே! உங்களை

ஒரு பெரிய மனிதராக மதித்து வந்தேனே!" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு வெளியில் ஓடிவந்தேன்.

கண்களை நீர் திரையிட்டு மறைக்க, ஒரு டாக்ஸியில் ஆபீஸுக்கு வந்தவள், நேரே ரவியின் அறைக்குள் சென்றேன்.

ஆண்மையே உருவாக அமர்ந்திருந்த அவரைக் கண்டதும் என் துக்கம் வெள்ளமாகப் பெருகியது. திக்கித் திணறி ஒருவழியாக நடந்தவற்றை அவரிடம் கூறினேன். அழுகையோடு அழுகையாக, "நீங்களும் இப்படிப்பட்ட ஒருவனுடன் என்னைப் போகச் சொன்னீர்களே? ஏன் நீங்கள் என்னைத் தடுத்து நிறுத்தியிருக்கக்கூடாது?" என்று உரிமையுணர்ச்சியுடன் அவரிடம் குமுறினேன்.

ஆடாமல் அசையாமல் அமர்ந்து நான் சொன்னதையெல்லாம் கேட்ட ரவி, சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்: "இந்தமாதிரி மனிதர்களை முதல் பார்வையிலேயே எடைபோடத் தெரிந்தவள்தான் பெண்! அதை விட்டுவிட்டு நீ முதல்நாளே அவனை ரொம்ப நாள் பழகிய நண்பன்போல் பாவித்துக்கொண்டு பேசினாய்; பழகினாய். நான் கவனித்துக்கொண்டுதான் இருந்தேன். அப்பொழுது அவருக்கு இடம் கொடுத்துப் பழகி அவன் மனத்தில் சபலத்தைத் தூண்டியது உன் நடத்தைதான். இப்பொழுது அதற்காக அவஸ்தைப்படுகிறாய். இதையெல்லாம் பெண்ணாகப் பிறந்த நீயே உணர்ந்து நடந்துகொண்டிருக்க வேண்டும்! இதையெல்லாம் நான் சொல்லித்தர வேண்டுமா? சரி... சரி! இதற்கெல்லாம் அழுது, சின்ன விஷயத்தைப் பெரிதாக்காதே" என்று அலட்சியமாகக் கூறினார்.



அதோடு நிற்காமல் உடனேயே டெலிபோனை எடுத்துக்கொண்டு யாரிடமோ முக்கியமான அலுவலக விஷயமாகப் பேசத் தொடங்கியும்விட்டார்.

கோடானுகோடி இடிகள் என்மேல் விழுந்தமாதிரி ஓர் அதிர்ச்சி! என் மனம் ரவியிடம் எத்தனை ஆறுதலை எதிர்பார்த்தது! ஓடிவந்து அணைத்து ஆறுதல் மொழிகளைக் கூறுவார் என்றல்லவா எதிர்பார்த்தேன்! ஆனால் என்ன கிடைத்தது? அடி. பெரிய பலமான அடி.

திக்பிரமை பிடித்தவள் மாதிரி வீட்டிற்கு வந்தேன். ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்.

"என்னடீ! என்ன விஷயம் - இப்படி வெங்கலப் பானை போல் முகத்தை வெச்சிகிட்டு இருக்கே?" என்று அம்மா கேட்டாள். அம்மா - என்னைப் பெற்றெடுத்த அம்மா - அவளுக்குக்கூட என் வருத்தம் தெரியவில்லை.

அண்ணா வந்தான். 'ஹாய்' என்றவனுக்கு நான் பதில் சொல்லாததால் அம்மாவிடம் சென்று, "என்னம்மா உன் பெண் இன்று கோபாக்கிரஹத்தில் இருக்கிறாள் என்ன ஆச்சு?" என்று கேட்பது எனக்குக் கேட்டது.

என் மனத்தில் முதன்முறையாக ஆத்திரம் பொங்கியது. ஒரு பெண் இதயமே சுக்கு நூறாகி, நொந்து வந்திருக்கிறாள். அவளுடைய துக்கம் பிறர் கண்களுக்கு ஏன் உறுத்தவில்லை? வருத்தத்திற்கும் கோபத்திற்கும் வித்தியாசம் இல்லையா? அள்ளி அணைத்து ஆறுதல் சொல்லாமல் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது

போல் 'கோபம்' என்று ஒரேயடியாக ஒதுக்கிவிடு கிறார்களே!

கடவுளே!

நினைக்கநினைக்க ஆத்திரம் அழுகையாக மாறி வெள்ளமாகப் பிரவாகமெடுக்கிறது. தாரைதாரையாகக் கண்ணில் நீர் வழிய, சிலையாய் இதோ அமர்ந்திருக் கிறேன். ஆண் வர்க்கமே, உங்களில் யாருமே என்னைப் புரிந்துகொள்ள மாட்டீர்களா?

'ப்ரியா' என்றால் எப்பொழுதுமே துள்ளும் மானாக, சிதறும் அருவியாகத்தான் இருக்க வேண்டுமா? அவளுக்கும் மனம் என்று ஒன்று உண்டு! அதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

அவளால் எப்பொழுதும் கலகலப்பு, சிரிப்பு என்ற முக மூடிகளை அணிந்துகொண்டே இருக்க முடியாது. என்றாவது மூச்சுத் திணறினால் அதைக் கிழித்துவிட்டு அவள் தன் விருப்பப்படி இருக்கத்தான் விரும்புவாள். அன்று அவளுக்கு அன்பு தேவை; ஆறுதல் தேவை என்று உணர்ந்துகொள்ளுங்கள்.

கடவுள் என்னைப் படைத்த விதத்திலிருந்து நான் விரும்பினாலும் மாற முடியாது. தன் மணத்தால் பிறருக்கு சந்தோஷம் அளிக்கும் ஜாதிப் பூவைப் போல்தான் இருக்கிறேன். ஆனால் அதுவும் சிறிது நாழிகையில் ஒரேயடியாக வாடிவிடுகிறது. நான் அப்படி இல்லை; எப்பொழுதாவதுதான் வாடிப் போகிறேன். நான் நானாக இருக்க விரும்பும் அந்த நேரத்தில் என் கண்ணீரைத்



துடைக்க 'எது வந்தாலும் நான் இருக்கிறேன் உனக்கு' என்று சொல்லி என்னை அணைக்க இரு கரங்கள் தேவை, ஐயா!

இதோ, இந்தக் கணத்தில் நான் தனியாக நிற்கிறேன்- அநாதையாகத் தவிக்கிறேன். என்னைப் புரிந்துகொண்டு- நான் வைக்கோல், துணி அடைத்த பொம்மை அல்ல; எனக்கும் உள்ளம் என்று ஒன்று உண்டு; அதுவும் சில சமயங்களில் தொட்டாற்சுருங்கி போல் இருக்கிறது என்பதையெல்லாம் புரிந்துகொண்டு - என்னை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஒரு ஆத்மா தேவை, ஐயா! அந்த ஆசை நிறைவேறுமா?